பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 வள்ளுவர் ஆண்டு 2048 மார்கழி 21 வெள்ளிக்கிழமை 05.01.2018 கதிர் 61

## தையல் நிலையம் நள்ளிரவு தீக்கிரை



யாழ்ப்பாணம்,ஜன.05
யாழ்ப்பாணம் கோவில் வீதியில் தையல் நிலையம் ஒன்று விஷமிகளால் தீ வைத்து பக்கம் 18

# மோசமான உரிமை மீறல்களுக்கு அடிகோலும் பயங்கவாதச் சட்டம்

### மனித உரிமை ஆணைக்குழு சாடல்

கொழும்பு, ஜனவரி 05
ஒப்புதல் வாக்குமூலம் பெற்றுக்கொள்ளல், நீண்டகாலமாக ஒருவரைத் தடுப்பில் வைத்திருத்தல் உட்படப் பல மனித உரிமைகளை மீறும் பிரிவுகளைக் கொண்டுள்ள பயங்கரவாதச்சட்டம்நாட்டின்பாதுகாப்பை மேம்படுத்த ஒருபோதுமே உதவாது.

- இவ்வாறு அரசுக்குச் சுட்டிக்காட்டியுள்ளது இலங்கை மனித உரிமை ஆணைக்குழு.

இந்தச் சட்டம் பாரதூரமான மனித உரிமை மீறல்களுக்கான சூழ்நிலையை ஏற்படுத்துவதாகவும் அது சுட்டிக்கட்டியுள்ளது. பக்கம் 18

### இனி இது ரகசியம் அல்ல!

யாழ்.மாநகர சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவருக்கு எதிராகக் குற்றத் தீர்ப்பு வழங்கப்பட்ட விடயம் குறித்து நண்பர் ஒருவர் தொலைபேசியில் குறிப்பிட்டார். பக்கம் 03

## காணாமற்போனவர்களின் உறவுகளை ஏமாற்றி மோசடி

தீபிகா உடகம சுட்டிக்காட்டு

கொழும்பு,ஜன.05
வடக்கில் காணாமற்போனவர்களின் உறவுகளை ஏமாற்றுவது உட்பட மனித உரிமை ஆணைக்குழுவின் பெயரைப் பயன்படுத்திப் பல மோசடிகள் இடம்பெற்றுள்ளன என இலங்கை மனிதஉரிமைஆணைக் குழுவின் தலைவி தீபிகா பக்கம் 18

### கல்விக்கதிர்

பிரபல முன்னணி ஆசிரியர் வே.அன்பழகன்
தயாரித்த புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் உள்ளே....

## முதல்வருக்கு எதிரான போராட்டத்தை நேற்றுக் கைவிட்டது வடக்கு இ.போ.ச.

### விக்கியின் உத்தரவுப்படி வவுனியா புதிய பஸ் நிலையத்தில் இருந்தே சேவை செய்ய இணக்கம்

(எஸ்.நிதர்ஷன்)
வவுனியா,ஜன.05
கடந்த நான்கு நாள்களாக வடக்கில் முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரனுக்கு எதிராக மேற்கொண்டுவந்த பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தை நேற்றுப் பிற்பகல் கைவிட்டனர் வடக்கு பக்கம் 18



### பிணைமுறி விசாரணை அறிக்கை

## உண்மையின் பக்கமே கூட்டமைப்பு நிற்கும்



சம்பந்தன் நேற்று அறிவிப்பு

கொழும்பு,ஜன.05
சர்ச்சைக்குரிய மத்திய வங்கிப் பிணைமுறி மோசடிதொடர்பானஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை உரிய அதிகார பீடங்களுக்கு அனுப்பித் துரித நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் பக்கம் 18

## போராட்டம் முடிவுற்றபோதும் தொடர்கின்றது முறுகல் நிலை

வவுனியா புதிய பஸ் நிலையத்தில்




வவுனியா,ஜன.05
வவுனியா புதிய பஸ் நிலையத்தில் இருந்து சேவையில்ஈடுபடுவது தொடர்பில் இ.போ.ச. ஊழியர்கள் கடந்த 4 நாள்களாக மேற்கொண்ட பணிப்புறக்கணிப்புப் போராட்டம் நேற்று முடிவுக்கு வந்த பக்கம் 03

## இந்திய மீனவர் 13 பேர் கைது

யாழ்ப்பாணம்,ஜன.05
அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டதாகக்குற்றம்சாட்டப்பட்டு இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 13 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 18 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நெடுந்தீவுக் கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கைதுசெய்யப்பட்ட 13 மீனவர்களும் நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப் பக்கம் 18

## ஆணைக்குழு அறிக்கை; பிரதமர் ரணில் வரவேற்பு



கொழும்பு, ஜன.05
மத்தியவங்கிபிணைமுறி மோசடி தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழு மேற்கொண்ட விசாரணை அறிக்கையைஐக்கியதேசியக்கட்சியின்தலைவரான பிரதமர் ரணில் விக்ரமசிங்க வரவேற்றுள்ளார்.

கடந்த 10 மாதங்களாக இந்த விசாரணையை முன்னெடுத்தவிசாரணை ஆணைக்குழுவுக்குநன்றி பக்கம் 18

## பிணைமுறிகள் மோசடியில் பிரதான சூத்திரதாரி ரணில்!

ஜே.வி.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன.05
மத்திய வங்கிப் பிணைமுறி மோசடியின் பிரதான சூத்திரதாரி பிரதமர் ரணில் விக்ரமசிங்கவே. இது சிறு பிள்ளைக்கும் தெரியும். அவர் அந்த மோசடி தொடர்பிலான பொறுப்பில் இருந்து தப்பிக்க முடியாது என ஜே.வி. பி. தெரிவித்துள்ளது.

ஜே.வி.பி. தலைமையகத்தில்நேற்றுஇடம்பெற்ற விஷேடஊடகவியலாளர் சந்திப்பில் அந்தக் கட்சியின்பிரசாரச்செயலாளர் விஜித ஹேரத் இதனைத் பக்கம் 03

## கூட்டணி வேட்பாளர் விஜயகாந்த் குற்றவாளி

யாழ். நீதிவான் நீதிமன்றம் தீர்ப்பு

யாழ்ப்பாணம்,ஜன.05
தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணைந்து உதய சூரியன் சின்னத்தில் யாழ்.மாநகரசபைத் தேர்தலில் போட்டியிடும் முற்போக்குத் தமிழ்த் தேசியக்கட்சியின்செயலாளர்சுதர்சிங்விஜயகாந்த் 116 பவுண் திருட்டு நகை வழக்கொன்றில் யாழ். நீதிவான் நீதிமன்றினால் குற்றவாளியாக இனங் காணப்பட்டுள்ளார். பக்கம் 18

## படைவசமுள்ள நீதிமன்றக் காணி விடுவிப்புக்கு விரைந்து ஏற்பாடு

நீதிபதி இளஞ்செழியனிடம் தளபதி உறுதி

(எஸ்.நிதர்ஷன்)
யாழ்ப்பாணம்,ஜன.05
யாழ்ப்பாணத்தில் இராணுவத்திரின் வசமுள்ளபருத்தித்துறைநீதிமன்றத்துக்குச் சொந்தமான காணியை விடுவிப்பதற்கு அனைத்து உதவிகளையும் தாம் மேற்கொள்வார் என யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதி தர்ஷன ஹெட்டியாராச்சி யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியனுக்கு உறுதியளித்துள்ளார். பக்கம் 18

# இலங்கையில் அணு தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதற்கு ரஷ்யா ஒத்துழைப்பு!

கொழும்பு, ஜன. 05

அணு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி இலங்கையில் கைத்தொழில் துறையை மேம் படுத்துவதற்கு தமது அரசு ஒத்துழைப்பு வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்திருக்கின்றது என இலங்கையிலுள்ள ரஷ்ய தூதுவர் யூரிமெற்றி தெரிவித்துள்ளார்.

மின்வலு மற்றும் புதுப்பிக்கத் தக்க சக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டியுடன் அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது ரஷ்ய தூதுவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

மின்வலு மற்றும் புதுப்பிக் கத்தக்க சக்தி அமைச்சிற்குட்பட்ட அணுசக்தி அதிகார சபை கட்டமைப்பு மற்றும் அதன் செயற்பாடுகள் குறித்தும் தூதுவர் இதன்போது அமைச்சரிடம் கேட்டறிந்தார்.

அணு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி இலங்கையில் கைத்தொழில் துறையில் பாரிய அபிவிருத்தியை ஏற்படுத்தமுடியும் என்றும் தூதுவர் குறிப்பிட்டார்

இதற்காக தமது நாடு அணு சக்தி தொடர்பான தொழில் நுட்ப ஒத்துழைப்பு மற்றும் ஆலோசனையைப் போன்று நிதிக்கான கடன்வசதிகளையும் வழங்க கூடிய நடைமுறைகள் குறித்த விடயங்களையும் கண்டறிவதாக தூதுவர் தெரிவித்துள்ளார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் சியம்பலாப் பிட்டிய இலங்கையில் நிலவும் கதிரியக்கத்தை போன்று இதன் மூலம் பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்பு தொடர்பிலும் அணுசக்தி அதிகார சபைகவனம் செலுத்தியுள்ளது.

எதிர்காலத்தில் கைத்தொழில் துறை அபிவிருத்திக்காக இவ்வாறானவற்றை பயன் படுத்த கவனம் செலுத்தப்படும் என்றும் கூறினார்.

இதேபோன்று பலவருட காலமாக இலங்கைக்கும்



ரஷ்யாவிற்கும் இடையில் நிலவிவரும் ராஜதந்திர உறவுகள் மற்றும் நல்லுறவை உறுதி செய்யும் வகையில் ரஷ்யாவினால் இலங்கையின் கைத் தொழில்துறை அபி விருத்திக்காக அணுசக்தியை பயன்படுத்துவதற்கு வழங்கும் ஒத்துழைப்பிற்கும் அமைச்சர் இதன் போது நன்றி தெரிவித்தார்.

## நாட்டின் பொருளாதாரம் முற்றுமுழுதாகச் சரிந்துள்ளது

### தினேஸ் குணவர்தன!



கொழும்பு, ஜன. 05

நாட்டின் பொருளாதாரம் தற்போது முற்றுமுழுதாக சரிந்துள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டு எதிர்க்கட்சியின் ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், நாட்டின் பொருளாதாரம் சரிவடைய பிணைமுறி விநியோக மோசடியே காரணம் என நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கம்பஹா, உடும்பொல பிரதேசத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதி தலைமையில் பாதுகாப்பு சபைக் கூட்டம்!



கொழும்பு, ஜன. 05

அகில இலங்கை சாசனப் பாதுகாப்பு சபைக் கூட்டம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றது.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் புத்த சாசனத்தின் மேம்பாட்டிற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகள் தொடர்பாகவும் பிக்குமார்களின் கல்வி நடவடிக்கையில் மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப் பட்டது.

இந்த நிகழ்வில் அகில இலங்கை சாசனப் பாதுகாப்பு சபையின் தலைவர் கலாநிதி வண. வெலமிட்டியாவே குசலதம்ம தேரினால் தலைமையுரை ஆற்றப்பட்டதுடன் சாஸ்ரபதி வண. கோனதூவே குணநந்ததேரர் உள்ளிட்ட மகா சங்கத்தினர் கலந்து கொண்டனர்.

## வவுனியாவில் விபத்து: இளைஞர் காயம்!



வவுனியா, ஜன. 05

வவுனியா - பட்டானிச்சூர் பகுதியில் இழுவை இயந்திரமும், மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 9.30 மணியளவில் இடம்பெற்றது. காயமடைந்தவர் வவுனியா மாவட்ட பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பட்டானிச்சூர்வயல்வெளிக்கு அருகில் அமைந்துள்ள வர்த்தக நிலையத்தில் பொருள்களை ஏற்றிக் கொண்டு, மன்னார் வீதியூடாக பயணித்த இழுவை இயந்திரம் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து, வவுனியா நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளாகியது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் காயமடைந்துள்ளதாக தெரிய வந்துள்ளது.

மேலும், விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## இந்திய அரசின் 'சுவசரிய' சேவை 2 ஆம் கட்டமாக 209 அம்புலன்ஸ்கள்

கொழும்பு,ஜன.05

'சுவசரிய' அம்புலன்ஸ் சேவையின் இரண்டாவது கட்டத்தின் கீழ் அம்புலன்ஸ் களைப் பெற்றுக் கொள்வதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை பிரதமர் ரணில் விக்கிர மசிங்க தலைமையில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நட்புறவை மேலும் வலுப்படுத்தும் வகையில் நேற்று முன்தினம் பிற்பகல் அலரிமாளிகையில் இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

இலங்கையின் சார்பில் பிரதி அமைச்சர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா, இந்தியாவின் சார்பில் தூதுவர் தரஞ் ஜித் சிங் சண்டு ஆகியோர் உடன்படிக்கையில் கைச்சாத் திட்டனர்.

இந்த நிகழ்வில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உரையாற்றுகையில்-

அரச சுகாதாரத் துறை மேம்

ரணில் தலைமையில் உடன்படிக்கை கைச்சாத்து




பாட்டுக்காக பெருந்தொகைப் பணத்தைச் செலவிடுகிறது. நாட்டை முன்னேற்றப் பாதையில் செலுத்துகையில் கல்வி, சுகாதாரம் முதலான துறைகளை வலுப்படுத்த வேண்டும். இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நட்புறவை மேன்மேலும் வளர்க்கும் நோக்கத்துடன் 'சுவசரிய' சேவை அறிமுகம் செய்யப்பட்டது எனப் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

இந்த இரண்டாவது கட்டத்தின் கீழ் ஒன்றரைக் கோடி டொலர் நன்கொடையுடன் 209 அம்புலன்ஸ்கள் வழங்கப் படவுள்ளன.

முதற்கட்டத்தின் கீழ் 88 அம்புலன்ஸ்கள் கிடைத்தன. அவற்றில் 56 வண்டிகள் மேல் மாகாணத்திற்கும் 32 வண்டிகள் தென் மாகாணத்திற்கும் வழங்கப்பட்டன. 'சுவசரிய' அம்புலன்ஸ் சேவை 2016ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஆரம்பிக்கப்பட்டது. அன்று முதல் இன்று வரை 56 ஆயிரம் பேர் அம்புலன்ஸ் சேவையைப் பெற்றுள்ளார்கள்.

1990 என்ற தொலைபேசி இலக்கத்தின் மூலமாக இந்த அம்புலன்ஸ் சேவையை பெற்றுக்கொள்ளமுடியும்.

# பிரிட்டன் எம்.பிக்கள் குழு ஜனாதிபதியுடன் சந்திப்பு



கொழும்பு, ஜன.05

பிரிட்டன் நாடாளுமன்றச் சர்வகட்சிக் குழுவினர் நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்தனர்.

பிரிட்டன் கொன்ஸர்வேட்டிவ் கட்சியைப் பிரதிநிதித்துவம் செய்யும் இலங்கை வம்சாவளி நாடாளுமன்ற உறுப்பினர் ரணில் ஜயவர்தன குழுவின் தலைவராகச் செயற்படுவதுடன், அவர் உள்ளிட்ட குழுவினர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிந்து சென்றதன் பின்னர் பொதுநலவாய நாடுகளுடனான தொடர்புகளை பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளைத் தற்போது மேற்கொண்டு வருகின்றது.

பொதுநலவாய நாடு என்ற வகையில் இலங்கையிடன் காணப்படும் தொடர்புகளைப் பலப்படுத்துதல் மற்றும் இரு நாடுகளுக்கிடையிலான வர்த்தக முதலீட்டுத் துறையை மேம்படுத்தும் நோக்குடன் இந்தத் தூதுக்குழுவினர் இலங்கைக்கு வந்துள்ளனர்.

ஜனநாயகத்தைப் பலப்படுத்துதல், பொருளாதார அபிவிருத்தி, விசேட அபிவிருத்தி செயற்றிட்டங்கள் மற்றும் விஷே–டவர்த்தகத் துறைகளில் இலங்கை கடந்த காலத்தில் முன்னெடுத்த செயற்றிட்டங்களில் அதிக முன்னேற்றத்தை அவதானிக்க முடிந்துள்ளதாக அந்தக் குழுவினர் ஜனாதிபதியிடம் தெரிவித்தனர்.

புதிய தொழில்நுட்பம், வேலை வாய்ப்புக்களை அதிகரித்தல் மற்றும் கல்வி வாய்ப்புக்களை மேலும் பயனுள்ளதாக்குவதற்கு இரு நாடுகளுக்கிடையேயும் காணப்படும் தொடர்புகளை பலப்படுத்திக் கொள்ள வேண்டியதன் முக்கியத்துவம் குறித்து ஜனாதிபதி இதன்போது சுட்டிக் காட்டினார்.

பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்கள் மாநாடு இவ்வருடம் ஏப்ரல் மாதத்தில் பிரிட்டனில் இடம்பெறவுள்ளதுடன், அதனுடன் இணைந்ததாக இரு நாட்டு உறவுகளை மேலும் உறுதி செய்வதற்கு எதிர்பார்ப்பதாகவும் பிரிட்டன் தூதுக்குழுவினர் ஜனாதிபதியிடம் தெரிவித்தனர்.

ஜனாதிபதியின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ, பிரிட்டன் நாடாளுமன்றக் குழு சார்பில் மிச்செல் டொன்லன், கிரிஸ் கிறீன், ஜோன் லம்ஒன்ட் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர். (ஐ)

# காணாமற்போயிருந்த இளைஞரின் சடலம் காயங்களுடன் கிணற்றில்!

## சண்டிலிப்பாயில் நேற்றுப் பரபரப்பு

(எஸ்.நிதர்ஷன்)



3 நாள்களாகக் காணாமற்போயிருந்த சண்டிலிப்பாய் இளைஞர் ஒருவர் வயல் கிணற்றிலிருந்து சடலமாக மீடகப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தால் அப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

அவரது சடலத்தில் அடிகாயங்கள் காணப்படுகின்றன. இளைஞன் கொலை செய்யப்பட்ட பின்னர் கிணற்றில் போடப்பட்டிருக்கலாம் என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

சண்டிலிப்பாய், நாகபூசனி அம்மன் கோவிலடியைச் சேர்ந்த முருகானந்த மூர்த்தி ஆனந்தபாபு (வயது–21) என்பவரே சங்குவேலி வயல் கிணறொன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த 2ஆம் திகதி இரவு 9 மணியளவில் வீட்டில் இருந்து இந்த இளைஞர் வெளியே சென்றுள்ளார். இவ்வாறு வெளியே சென்றவர் வீடு திரும்பாத நிலையில் அவரைக் காணவில்லை எனக் கூறி உறவினர்கள் நேற்று மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்த நிலையில் நேற்றுப் பிற்பகல் இந்த இளைஞர் கிணற்றுக்குள் இருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

இந்த இளைஞர் கொலை செய்யப்பட்டுள்ளாரா என்பது தொடர்பில் பல்வேறு கோணங்களில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ–7)



கொழும்பு வந்துள்ள பிரிட்டன் நாடாளுமன்றக் குழுவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். (ஐ)

# முகநூலில் பரப்புரைகளுக்குத் தடை; தேர்தல்கள் ஆணைக்குழு கிடுக்குப்பிடி!

கொழும்பு, ஜன.05

முகநூல் உள்பட சமூக வலைத்தளங்களில் உள்ளூராட்சித் தேர்தல் பரப்புரைகளை மேற்கொள்ள முடியாது. சமூக வலைத்தளங்களில் தேர்தல் பரப்புரைகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகத் தேர்தல் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்ய முடியும்.

இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார். பெண்களுக்கு வாக்களிக்கவேண்டாம் என்று சிலர் பரப்புரைகளில் ஈடுபடுகின்றமை தெரியவந்துள்ளது. இது சட்டவிரோதமானதாகும். வாக்குகள் மூலம் பெண்கள் தெரிவு செய்யப்படாவிட்டாலும் வெகுமதி முறையின் மூலம் அவர்களுக்கு ஆசனங்கள் வழங்கப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## சிவபூஜா மாநாடும் திருவாசக முற்றோதலும்

யாழ்ப்பாணம், ஜன.05

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையின் சிவபூஜா மாநாடும் திருவாசக முற்றோதலும் நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்கு, யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவை ஸ்ரீ சிவகாம சுந்தரி சமேத ஸ்ரீமத் நடராஜர் கோயிலில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வின் தொடக்கவுரையை ஸ்ரீ சிவ.சக்திகிரீவனும், தலைமையுரையை இந்து சமயப் பேரவை சைவ உயர் பீட உறுப்பினர் பிரதிஷ்டா திலகம் சிவஸ்ரீ ச.சோமாஸ்கந்தக்குருக்களும், ஆசியுரையை நல்லை. ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளும், சிறப்புரையை வாழ்நாள் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணஐயர், சிவஸ்ரீ பஞ்சாட்சர சர்மா, சிவானந்த சர்மா (கோப்பாய் சிவம்) ஆகியோர் வழங்குவர். (இ)

## போராட்டம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதும் தனியார் மற்றும் இ.போ.ச.வினருக்கிடையில் முறுகல் நிலை தொடர்கிறது.

புதிய பஸ் நிலையத்திலுள்ள இரு கட்டடத் தொகுதிகளில் தமக்கு ஒரு கட்டடத் தொகுதியை வழங்குமாறும், அவ்வாறு வழங்கப்படும் பட்சத்தில் புதிய பஸ் நிலையத்தில் இருந்து சேவையை முன்னெடுப்பதாகவும் இ.போ.சவினர் கோரியதன் அடிப்படையில் தேசியப் போக்குவரத்து அதிகார சபையின் அதிகாரிகள் தனியார் – இ.போ.ச. ஊழியர்களுடன் கலந்துரையாடி பஸ் நிலையத்தின் முதலாவது கட்டடத் தொகுதியை இ.போ.ச.வினருக்கு வழங்கியிருந்தனர்.

இந்நிலையில் நேற்றுப் பிற்பகல் 3 மணியில் இருந்து இ.போ.சவினர் தமது சேவைகளை புதிய பஸ் நிலையத்தில் இருந்து ஆரம்பித்தனர்.

எனினும் வெளி மாகாணங்களுக்கிடையிலான பஸ்கள் புதிய பஸ் நிலையத்தினுள் உள் நுழையமுடியாது என உடன்பாட்டுக்கு வந்திருந்தபோதிலும் இ.போ.சவின் வெளிமாவட்டத்தில் இருந்து மாகாணங்களுக்கிடையில் சேவையில் ஈடுபடும் பஸ்களைப் புதிய பஸ் நிலையத்தினுள் கொண்டு வந்து நிறுத்திப் பயணிகளை ஏற்றியமை மற்றும் ஒரே வழித்தடத்தில் பயணிக்கும் பஸ்களுக்குப் போட்டியாகத் தமது பஸ்களைச் செலுத்தியமையால் தனியார் மற்றும் இ.போ.ச.வினருக்கிடையில் நேற்று முறுகல் நிலை ஏற்பட்டது.

இதனையடுத்துப் பொலிஸார் வரவழைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. (ஐ)

## இனி இது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"கொள்ளையிடப்பட்ட நகைகளை அடகுவைப்பதற்காக உடைமையில் வைத்திருந்த குற்றம்" நிரூபிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

"இந்த விவகாரத்தைப் பெரிய விடயமாகப் பேசி இனி அந்த வேட்பாளரை அடியோடு அழுத்தி நசித்து விடுவார்கள்" என்று குறிப்பிட்ட அந்த நண்பர் "அது தப்பில்லை. ஆனால் ஒரிஜினல் கிரிமினல் வேலைகள் செய்தோரை எல்லாம் மக்கள் பிரதிநிதிகளாக அனுப்பிவிட்டு சில்லறை ஆள்களைத்தான் நமது மக்கள் பெரிதாகக் கதைத்துத் தண்டிப்பார்கள்" என்றும் விசனத்துடன் கூறினார்.

"தேர்தல்களுக்காகப் பெட்டி பெட்டியாக வாங்கிக் குவித்தோர், மக்கள் பணத்தை ஏப்பமிட்டுக் சுருட்டியவர்கள் எல்லாம் இலகுவில் மக்கள் பிரதிநிதியாகிவிட்டனர்" – என்றும் அவர் குறைபட்டுக் கொண்டார்.

அவர் யார், யாரைக் குறிப்பிட்டார் என்பதை வாசகர்களின் ஊகத்துக்கே விட்டு விடுகிறேன்.

இதேசமயம் கொழும்பில் பெரும் சர்ச்சையை உரு வாக்கியிருக்கும் பிணைமுறி விற்பனை விவகார விசாரணை அறிக்கை குறித்து தெற்கின் பிரபல ஆங்கில விமர்சகர் ஒருவருடன் நேற்று நீண்ட நேரம் உரையாடினேன். யுத்த காலத்தில் பாதுகாப்பு நிலைவரம் பற்றிய அதிரடிக் கட்டுரைகளை வரைந்து பெரும் புகழீட்டிய விமர்சகர் இவர்.

"பிணை முறி விவகாரத்தில் குறுக்கு வழியில் பெரும் தொகை திரட்டியோர்தான் கடந்த சில ஆண்டுகளாக பல அரசியல் விடயங்களுக்கான பணப் பட்டுவாடா செய்யும் பணியையும் பார்த்தனர்.

"அவர்கள் சரியாக விசாரிக்கப்பட்டால் உங்கள் (தமிழர்) தரப்பிலும் அவர்களிடமிருந்து பணப் பெட்டிகளைப் பெற்றுக்கொண்டோர் விவரம் வெளியாகும்" – என்ற விடயத்தைப் போட்டுடைத்தார் அவர்.

வழக்கமாக அவர் அம்பலப்படுத்தும் விடயங்கள் பின்னாள்களில் சரியானவை என்று உறுதிப்படுத்தப்படுவதைக் கண்டிருக்கின்றோம்.

பணப் பெட்டிகளைப் பெற்றுக் கொண்ட ஓர் அரசியல் வாதியின் பெயரையும் அவர் சொன்னார். ஆனால் நான் அதனை இங்கு பகிரங்கப்படுத்தத் தயாரில்லை.

நீதிமன்றில் இழுபட என்னால் முடியாதப்பா...!

**- மின்னல்.**

## பிணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

ஜனாதிபதி மைத்திரியின் வாள் வெட்டாமல் விட்ட பிரதமர் ரணில் மீது குற்றவியல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும். குற்றவியல் சட்டத்தின் பிரதான அங்கங்களில் ஒன்றான குற்றத்துக்கு முன், பின்னரான சூத்திரதாரியின் நடவடிக்கை தொடர்பில் அவதானம் செலுத்தும்போது பிரதமர் ரணில் தானாக சிக்கிக்கொள்வார். எனவே அவருக்கு எதிராகவும் நடவடிக்கை அவசியம்.

அத்துடன் 2015 பெப்ரவரி முதல் 2016 மார்ச் மாதம் வரையிலான காலப் பகுதியில் இடம்பெற்ற மத்திய வங்கி பிணைமுறி கொடுக்கல் வாங்கலின் போது இடம்பெற்ற மோசடிகளில் ஊழியர் சேம இலாப நிதியத்தின் நிதியே பெருமளவு கொள்ளையிடப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகள் கடந்த 2008 ஆம் ஆண்டு முதலே இடம்பெற்றுவந்துள்ளதாக விசாரணை செய்த ஜனாதிபதி ஆணைக் குழு அவதானித்துள்ள நிலையில் அப்போதைய மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தொடர்பிலும் விரிவான விசாரணை ஒன்று புறம்பாக முன்னெடுக்க வேண்டும் – என்றார். (ஐ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## பிணைமுறி விவகார அதிர்வுகள்

**2015 பெப்ரவரிக்கும் 2016 மார்ச்சுக்கும் இடையில் இலங்கையின் மத்திய வங்கி தனது பிணைமுறிகளை ஏலம் விட்டதில் இடம் பெற்ற ஊழல் காரணமாக மத்திய வங்கிக்கு ஏற்பட்ட இழப்பு 852 கோடி 40 லட்சம் ரூபாவாகும். அப்போது மத்திய வங்கியின் ஆளுநராக இருந்த அர்ஜூன மகேந்திரன் இந்தப் பிணைமுறியில் ஏலம் தொடர்பான உள்வீட்டு இரகசியங்களை கசியவிட்டமையால் அவரது மருமகன் அர்ஜூன் அலோஸியஸின் நிறுவனமான 'பேப்பர்ச்சுவல் ட்ரஸ்டிஸ் லிமிட்டெட்' நிறுவனம் தவறான முறையில் ஆயிரத்து 114 கோடி ஐம்பது லட்சம் ரூபாவை இலாபமாக ஈட்டிக் கொண்டது.**

**பிணை முறி விவகாரத்தை விசாரித்த ஜனாதிபதி ஆணைக்குழு தனது அறிக்கையில் இந்த விடயங்களைத் தெரிவித்திருப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாட்டு மக்களுக்கு அறிவித்துள்ளார்.**

**ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் ஜனாதிபதி வெளியிட்ட தகவல்களின் அடிப்படையில் இரண்டு வகையான தொடர் நடவடிக்கைகள் இடம்பெறலாம்.**

**ஒன்று - சட்ட நடவடிக்கை.**

**மற்றையது - அரசியல் நடவடிக்கைகள்.**

**மேற்படி பிணைமுறி விவகாரத்தில் மத்திய வங்கி இழந்த முழு நஷ்டத்தையும் மீளப் பெறுவதற்கான சட்ட நடவடிக்கைகளைத் தாம் மேற்கொள்வார் என ஜனாதிபதி உறுதியளித்துள்ளார். அதற்கும் மத்திய வங்கியில் இடம்பெறும் ஏனைய ஊழல்கள், தவறுகளைத் தவிர்ப்பதற்கும் புதிய சட்டங்கள், விதிகள் யாக்கப்பட வேண்டும் எனத் தனக்கு ஆணைக்குழு பரிந்துரை செய்திருப்பதாகவும், அதற்குரிய சட்டவிதிகளை உருவாக்கத் தான் நடவடிக்கை எடுப்பார் எனவும் ஜனாதிபதி கூறியிருக்கின்றார்.**

**இந்தப் பிணை முறி விவகாரத்தில் அப்போது மத்திய வங்கி ஆளுநராக இருந்த அர்ஜூன மகேந்திரன் குற்றவாளி எனக் குறிப்பிடப்பட்டிருப்பதால், அவருக்கும் ஏனையோருக்கும் எதிராகத் தாம் உரிய சட்ட நடவடிக்கை எடுப்பார் என ஜனாதிபதி கோடி காட்டியிருக்கின்றார்.**

**இந்த விவகாரத்தில் அப்போது நிதி அமைச்சராகவிருந்த ரவி கருணாநாயக்க, சம்பந்தப்பட்ட தரப்புகளிலிருந்து கையூட்டுப் பெற்றார் என்பது குறித்து புலனாய்வு மற்றும் சட்ட விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் எனவும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அது தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்பது தெரியவில்லை.**

**உயர்நீதிமன்றத்தின் தற்போதைய இரண்டு நீதியரசர்கள் உட்பட மூன்று ஆணையாளர்களைக் கொண்ட இந்த ஜனாதிபதி ஆணைக்குழு, எடுக்கப்பட வேண்டிய தொடர் சட்ட நடவடிக்கைகள் குறித்து பல்வேறு சிபாரிசுகளை தனது இறுதி அறிக்கையில் முன்வைத்திருப்பதாகக் கூறப்படுகின்றது.**

**ஆனால், அந்தப் பரிந்துரைகளை சட்டமா அதிபர் தம்பாட்டில் வழிப்படுத்தலாக எடுத்துக் கொண்டு சட்ட நடவடிக்கைகளைத் தொடங்க முடியாது என சட்ட வட்டாரங்கள் சுட்டிக் காட்டுகின்றன. ஜனாதிபதியின் வேண்டுகோளுக்கு இணங்க, அவ ரின் வழிப்படுதலில் நிறுவப்பட்ட இந்த ஆணைக்குழு, ஜனாதிபதிக்கே பரிந்துரைகளைச் செய்துள்ளது.**

**அந்தப் பரிந்துரைகளில் எவற்றை உசிதமானவை என ஜனாதிபதி கருத்தில் எடுத்து, அவை குறித்து தொடர் நடவடிக்கைகளை எடுக்கும்படி சட்டமா அதிபரைப் பணிக்கின்றாரோ, அவை குறித்து மட்டுமே சட்டமா அதிபர் ஏதேனும் செய்ய முடியும் என சட்ட வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.**

**அதேசமயம், இந்த ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை விடயத்தில் அரசியல் விளைவுகள், நடவடிக்கைகள் தன்பாட்டில் சத்தம் சந்தடியின்றியே தொடராக அரங்கேறக்கூடும்.**

**ஆட்சியில் இருக்கும் தனது கூட்டு அரசுக்கு எதிராகவே விசாரணை நடத்தி, காரசாரமான கண்டிப்புடன் கூடிய பரிந்துரைகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பகிரங்கப்படுத்தியுள்ள நிலையில், இந்த விடயத்தில் அரசியல் ரீதியாகப் பெரும் பாதிப்புக்கும் பின்னடைவுக்கும் உள்ளாகியுள்ள - நல்லாட்சி அரசின் பங்காளிகளான - ஐ.தே.கவினரின் சரியான பிரதிபலிப்பு இந்தப் பத்தி எழுதப்படும் வரை இன்னும் வெளியாகவில்லை.**

**வேறு நபர்கள் மீது பிற குற்றச்சாட்டுகள் முன் வைக்கப்பட்டாலும் 'மிஸ்டர் கிளீன்' என முன்னர் அழைக்கப்பட்டு வந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தொடர்பில் இரண்டு விடயங்கள் முக்கியமாகச் சுமத்தப்பட்டுள்ளன.**

**ஒன்று - பிணைமுறி விற்பனை விடயத்தில் ஊழல், மோசடிகளைத் தடுப்பது தொடர்பில் விவகாரங்களைக் கையாள்வதில் அவர் தவறிழைத்துவிட்டார் அல்லது பொறுப்பின்றிச் செயற்பட்டுள்ளார்.**

**அடுத்தது- இவ்விடயங்கள் தொடர்பில் நாடாளுமன்றுக்கு அவர் தெரிவித்த தகவல்கள் நாடாளுமன்றத்தைத் தவறாக வழிப்படுத்துபவை எனக் கருதக்கூடியவை.**

**தவிரவும், அப்போது நிதியமைச்சராக இருந்த ரவி கருணாநாயக்கவுக்கு எதிராகவும் அரசியல் ரீதியாகப் பெரும் பின்னடைவுகளை ஏற்படுத்தக் கூடிய நடவடிக்கைகள் கட்டவிழக்கூடும்.**

**மேலும் வெளியாகியுள்ள இந்த ஆணைக்குழு அறிக்கை தொடர்பான ஜனாதிபதியின் அறிவிப்புக் குறித்து விவாதிப்பதற்காக நாடாளுமன்றத்தை அவசர அவசரமாகக் கூட்டும்படி எதிர்க்கட்சிகள் மட்டுமல்லாமல், நல்லாட்சி அரசின் பங்காளித் தரப்பான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்தும் வந்திருக்கின்றது.**

**சு.கவின் அமைச்சரும், பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயலாளருமான மஹிந்த அமரவீர இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார். கூட்டு எதிரணியும், ஜே.வி.பியும் கூட இதனை வலியுறுத்தியுள்ளன.**

**நிகழ்ச்சி நிரலின்படி நாடாளுமன்றம் எதிர்வரும் 23 ஆம் திகதிதான் கூடவிருக்கின்றது.**

**இத்தினத்திலோ அல்லது அதற்கு முன்னரோ நாடாளுமன்று கூடி இந்தவிடயத்தை விவாதித்தால், அந்த விவாதம் ஆளும் பிரதான தரப்பான ஐ.தே.கட்சிக்கு பெரும் அரசியல் பின்னடைவைத் தந்துவிடும்.**

**எனவே, பெப்ரவரி 10 ஆம் திகதி உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் இந்த விவகாரத்தை அரசு நாடாளுமன்றத்தில் எடுக்காது என்றே நம்பப்படுகின்றது.**

# எமது அரசாக இருந்தாலும் தவறு செய்தோருக்கு ஜனாதிபதி, பிரதமர் தண்டனை வழங்குவர்!

## அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவிப்பு



கொழும்பு, ஜன. 05

எமது அரசாக இருந்தாலும் தவறு செய்தவர்களுக்கு உரிய தண்டனை வழங்க ஜனாதிபதியும் பிரதமரும் தயாராகவுள்ளனர் என பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் கொலன்னாவை எரிபொருள் களஞ்சியசாலையில் இடம்பெற்ற புத்தாண்டை வரவேற்கும் நிகழ்வின்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எனது வாழ்வில் உள்ள முக்கிய தருணமே இந்த நல்லாட்சி அரசாங்கம். நாங்கள் கட்சி என்ற வகையில் பிளவுபட்டு இருந்தோம். இலங்கை சுதந்திரக் கட்சி வெற்றி பெற்றால் ஐக்கிய தேசியக் கட்சியை தாக்குவதும், ஐக்கிய தேசிய கட்சி வென்றால் இலங்கை சுதந்திரக் கட்சியை தாக்குவ துமாக எம்மிடையே காணப்பட்டிருந்தது.

நான் இதனைப் பார்த்தும் உள்ளேன். ஆனால், நாங்கள் இன்று அந்த அரசியல் கலாசாரத்தை மாற்றியமைத்துள்ளோம். நாங்கள் நாட்டை முன்னிலைப்படுத்தி சிறந்த பயணத்தை மேற்கொண்டு வருகின்றோம்.

நான் உங்களுக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகின்றேன். வரலாற்றிலேயே இந்த வருடம் தான் அதிக கடன்களை செலுத்த வேண்டிய வருடமாக இருக்கும். ஆனால் நாம் முடிந்த அளவு கடன் பிரச்சினையை சரிசெய்ய முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம்.

இந்தக் கடன் சுமை நாட்டு மக்களுக்குப் போய் சேராமலிருக்கவே நாங்கள் பல முயற்சிகளை மேற்கொள்கின்றோம். எமது அரசாங்கமும் அமைச்சரவையும் கடந்த இரண்டு வருடங்களாக இந்த கடன் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு கூடிய கவனம் செலுத்தி வருகின்றன.

அமைச்சரவை மட்டுமல்ல ஜனாதிபதியும் பிரதமரும் நாட்டை அபிவிருத்தி செய்ய பெரும் பங்களிப்பைச் செய்துள்ளனர்.

எதற்கு ஜனாதிபதி பதவி! எதற்கு பிரதமர் பதவி! என்று தோன்றுகின்றது. காரணம் நான் அமைச்சுப் பதவியை பொறுப்பேற்ற பின்னர்நிறைய பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்தது. ஆனால், ஜனாதிபதியும் பிரதமரும் பிரதான இரண்டு கட்சிகளை இணைத்து, குறிப்பாக வடக்கு தெற்கு, சிங்களம், தமிழ், முஸ்லிம் என்று பாராது சகல மக்களையும் ஒன்றிணைத்து இந்த நாட்டை அபிவிருத்திப் பாதையில் கொண்டுவந்துள்ளனர்.

எனினும், எமது அரசில் சில குறைபாடுகள் காணப்படுகின்றன. எனக்கும் இது கவலையாகவுள்ளது.

காரணம் திருடர்கள் இன்னும் பிடிபடாமல் உள்ள மையே. இதுவே எனக்கு இருக்கும் பெரிய பிரச்சினை. எனினும், எமது அரசாங்கமாக இருந்தாலும் தவறிழைத்தவர்களுக்குத் தண்டனை உண்டு என்பதை ஜனாதிபதியும் பிரதமரும் உறுதிசெய்துவிட்டனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்குக!



கொழும்பு, ஜன. 05

மத்திய வங்கியில் இடம்பெற்ற சர்ச்சைக்குரிய பிணைமுறி மோசடியில் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே அவர் இதைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்த சர்ச்சைகளில் ரவி கருணாநாயக்கவுக்கு மட்டும் அல்ல பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் நேரடியாகவே தொடர்பு உள்ளது. இவருக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இந்த அறிக்கையை நாடாளுமன்றில் முன்வைத்து விவாதம் ஒன்று முன்னெடுக்கப்பட வேண்டும் என்று கூட்டு எதிர்க்கட்சியான தாம் கோரிக்கை விடுக்கிறோம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

மஹிந்த காலத்தில் இடம்பெற்றதாக கூறப்படும் மோசடிகளைக் காரணம் காட்டியே ஜனவரி 8 ஆம் திகதி ஜனாதிபதி ஆட்சிக்கு வந்தார். அதையடுத்து பெப்ரவரி மாதம் மத்திய வங்கியில் பெரும் மோசடி நடைபெற்றுள்ளது. இதற்கு காரணம் பிரதமர் ரணில். ஆகவே, இதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவர்களுக்கு நாட்டு மக்களே தண்டனை வழங்க முடியும். அதுதான் பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி வரவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல்.

இதில் யானைக்கு வாக்களித்து கிராமத்து வங்கிகள், விகாரைகளில் திருடுவதற்கு இடம்கொடுக்க வேண்டாம் என்று பொதுமக்களிடம் கோரிக்கை விடுக்கிறோம் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

# சட்டவிரோத புகையிலைப் பொருள்கள் மீட்பு!

வவுனியா, ஜன. 05

வவுனியாநகரத்தில் அமைந்துள்ள இரு வர்த்தக நிலையங்களில் சட்டவிரோதமாக தயாரிக்கப்பட்ட புகையிலை பொருள்கள் மதுவரித் திணைக்களத்தினரால் மீட்கப்பட்டுள்ளன.

மதுவரித் திணைக்களத்திற்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் நேற்றுக் காலை குறித்த இரு வர்த்தக நிலையத்திலும் திடீர் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது இரு வர்த்தக நிலையங்களிலும் சட்ட விரோதமாக தயாரிக்கப்பட்ட 14 லட்சம் பெறுமதியான புகையிலையைக் கைப்பற்றியுள்ளோம் எனவும், குறித்த உற்பத்திபொருளைவிற்பனை செய்த இரு வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனவும் வவுனியா மதுவரிதிணைக்கள அத்தியட்சகர் தெரிவித்தார்.

புகையிலையை உற்பத்தி செய்யும் நபர்களை பிடிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த உற்பத்திப் பொருள்கள் இலங்கையில் பிரபல புகையிலைதயாரிப்புநிறுவனத்தின் சின்னங்கள், பெயரைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்டுள்ளன எனவும் திணைக்கள அத்தியட்சகர் மேலும் தெரிவித்தார்.

## நாளை

06.01.2018
சனிக்கிழமை

நட்சத்திரம் : மகம் மு.ப. 8.10 வரை
திதி : பஞ்சமி பி.ப. - 11.34 வரை

சுபநேரம் : 3.31 - 05.01
இராகுகாலம்: 9.31 - 11.01

# வெளிப்படைத் தன்மையுடன் வெற்றிகரமாக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன



## பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 05

குற்றப் புலனாய்வுப் பிரிவு (சி.ஐ.டி), நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவு ( எப்.சி.ஐ.டி.), விசேட விசாரணைப் பிரிவு (எஸ்.ஐ.யூ.), கொழும்பு குற்றத் த டுப்புப் பிரிவு ( சி.சி.டி.), கொழும்பு மோசடி தடுப்புப் பிரிவு (சி.எவ்.பி.) போன்ற விசேட விசாரணைப் பிரிவுகள் ஊடாக முன்னெடுக்கப்பட்டுள்ள விசாரணைகள் அனைத்தும் வெளிப் படைத் தன்மையுடன் வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லப்படுகின் றன எனப் பொலிஸ் மா அதி பர் பூஜித ஜயசுந்தர தெரிவித்தார்.

அதே போன்று போதைப் பொருள் தடுப்புப் பிரிவு, திட்டமிட்ட குற்றங்க ளைத் தடுக்கும் சிறப்புப் பிரிவு உள் ளிட்ட பிரிவுகள் ஊடாகவும் மாவட்ட, மாகாண மட்டங்களில் முன்னெடுக் கப்பட்டு வரும் போதைப் பொருளுக்கு எதிரான நடவடிக்கைகளும் தொடர்ந் தும் முன்னெடுத்துச் செல்லப்படு கின்றன எனவும் அவர் குறிப்பிட்டார்.

புத்தாண்டில் பொலிஸாரின் கடமை களை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தும் அரச பணியாளர்களின் இந்த வருட பிரகடனத்தை ஏற்கும் பொலிஸ் தலைமையகத்தில் நடை பெற்ற விசேட நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பொலிஸார் ஒன்றிணைந்து செயற் படுகின்றமையாலேயே சிறந்த அடைவு மட்டங்களைப் பெற முடிகிறது. எவ ரும் வெவ்வேறு தேவைகளுக்காகத் தனித்து இயங்க முயற்சிக்க வேண்டாம்.

அத்துடன், சமூகத்தில் உள்ள கெட்ட வர்களை வெளிப்படுத்துகின்றமை போன்றே பொலிஸாருக்குள் ஒளிந் திருக்கும் கெட்டவர்களையும் வெளிப் படுத்தி பொலிஸார் தமது தூய்மையான பயணத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

யுத்தம் நிறைவுக்கு வந்த பின்னர் பொது மக்கள் சுதந்திரமான சூழலை எதிர்பார்க்கின்றனர். அந்த சுதந்திர சூழலை ஏற்படுத்தும் பொறுப்பு பொலி ஸாராகிய எம்மைகளில்தான் உள்ளது. கடந்த வருடத்தில் எமக்கு பெரிய சவால்கள் இருந்தன. குறிப்பாக போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பில் எமக்கு சவால் இருந்தது.

போதைப்பொருள் ஒழிப்பு தொடர் பில் போதைப் பொருள் தடுப்புப் பிரிவையும் பொலிஸ் விசேட அதிரடிப் படையையும் ஒன்றிணைத்து நாம் திட்டமிட்ட குற்றங்கள் தடுப்புப் பிரிவை ஏற்படுத்தி அதனூடாக வெற் றிகரமாக அந்த நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்கிறோம்.

இதனூடாக போதைப் பொருள் ஒழிப்புக்காக எமக்கு 5 கோடி ரூபா கிடைத்தது. அந்நிதியை நாம் உரிய முறையில் பயன்படுத்தியுள்ளோம்.

விசாரணைகள் தொடர்பில் நாம் தேவையான விசேட நிபுணர்களின் உதவியைப் பெற்றுள்ளோம். சட்ட மா அதிபரின் ஆலோசனைக்கு அமைய நீதிமன்ற நடவடிக்கைகளை முன் னெடுக்கின்றோம்.

அதேபோன்று, மேல் மாகாணத்தை பொறுத்தவரை நாம் குற்றத் தடுப்பு, விசாரணையில் பெரிய வெற்றிகளைக் கண்டிருக்கின்றோம். இவை அனைத் தும் பொலிஸார் ஒன்றிணைந்து செயற் பட்டமைக்குக் கிடைத்த பெறுபேறுக ளாகும்.

அத்துடன், இந்த வருடம் பிரஜா பொலிஸ்பிரிவுகளை மேலும் வலுப் படுத்த வேண்டும். கடந்த வருடம் இதற் கான அடித்தளம் இடப்பட்டது. இன்னும் அந்த பிரஜா பொலிஸ் நட வடிக்கைகளை வலுப்படுத்த வேண்டும்.

பொது மக்களுக்கும் எமக்குமான உறவு வலுப்படும் போதே உளவுத் தகவல்கள் எமக்கு மேன்மேலும் கிடைக்கும். எனவே அதற்காக பிரஜா பொலிஸ் திட்டத்தை மேலும் வலுப்படுத்த வேண்டும். - என்றும் அவர் தெரிவித்தார்.

# யாழ். பொலிஸ் நிலையத்தில் கிறிஸ்மஸ் கொண்டாட்டம்!





யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தினரின் ஏற் பாட்டில், கிறிஸ்மஸ் மற் றும் புதுவருடக் கொண் டாட்டம் நேற்றுமுன் தினம் இரவு நடைபெற் றது.

யாழ்ப்பாணம் தலை மைப் பொலிஸ் காரியா லயத்திலேயே இந்த வைபவம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் அதி தியாக வடக்கு மாகாண பொலிஸ்மா அதிபர் பாலித பெர்னாண்டோ கலந்து கொண்டார்.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் இடம் பெற்ற கிறிஸ்மஸ் கொண் டாட்டத்தில் அரியாலை சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த 150 இற்கும் மேற்பட்ட சிறார்க ளுக்கு பரிசுப் பொருள் கள் வழங்கப்பட்டன.

அத்துடன், இந்த கிறிஸ் மஸ் நிகழ்வில் யாழ்ப் பாண மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், யாழ். மாவட்டத்தில் உள்ள பொலிஸ் நிலை யங்களின் பொலிஸ் அதிகாரிகள், யாழ் மறை மாவட்ட குரு முதல்வர், மற்றும் அருட்தந்தை யர்கள், அரியாலை சிறுவர் இல்ல சிறார்கள், சிறுவர் இல்ல உத்தி யோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# பிரதமருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை என்கிறார் அஜித் பீ பெரேரா!

மத்திய வங்கியின் பிணை முறி மோசடி விவகாரம் தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையிலுள்ள பரிந்துரை களை ஏற்றுக்கொள்கிறோம் என பிரதி அமைச்சர் அஜித் பீ பெரேரா தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கியின் பிணை முறி மோசடி தொடர்பி லான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை தெரி விக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் – அர்ஜுன் மகேந்திரனது நியமனம் தவறல்ல என ஆணைக்குழு ஏற்றுக்கொண்டுள்ளது.

அத்துடன், பிரதமருக்கு எதிராகச் சிலர் முன்வைத்த குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை.

சட்டம் அனைவருக்கும் பொதுவானது எனவும், பிணை முறி மோசடி தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட குழு வின் பரிந்துரைகளைச் செயற்படுத்தத்தாம் ஒத்துழைப்பு வழங்கவுள்ளோம் என்றும் பிரதி அமைச்சர் இதன்போது உறுதியளித்துள்ளார்.

# மன்னாரில் விபத்து: இருவர் படுகாயம்!



மன்னார்- மடு, பெரிய பண்டிவிரிச்சான் பகுதி யில் உள்ள வீதி யில் இடம்பெற்ற ஓட்டோ விபத்தில் இரு வர் காயம டைந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் மதியம் 3 ம ணியளவில் இடம் பெற் றது எனத் தெரிவிக்கப் படுகின்றது.

பெரியபண்டிவிரிச் சான் உள் வீதியில் கட்டுப்பாட்டை மீறி ஓட்டோ தடம் புரண்டு விபத்துக்குள்ளானது.

விபத்தில் சாரதி உட் பட ஓட்டோ பயணம் செய்த இருவருமே காயம டைந்துள்ளனர் என தெரிய வந்து இருந்தது.

மேலும், இந்தச் சம் பவம் தொட பில் பொலி ஸாருக்கு தகவல் தெரி விக்கப்படவில்லை எனக் குறிப்பிடப்படுகின்றது.

## சுகாதாரச் சீர்கேடு காரணமாக

# யாழ். நகரில் நான்கு உணவகங்கள் நீதிமன்ற உத்தரவில் மூடப்பட்டன

யாழ். நகரில் சுகாதார சீர்கேடுகளுடன் இயங்கி வந்த நான்கு உணவகங் கள் நீதிமன்றின் உத்த ரவின் படி மூடப்பட்டன.

பொதுச் சுகாதார பரி சோதகர் நா. ரகுமார் இந்த உணவகங்க ளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்திருந்தார் இந்த வழக்குகள் நேற்று மேலதிக நீதிவான் நீதி மன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டு, மேற்படி உத்தரவு விடுக்கப்பட்டது.

யாழ். கன்னாதிட் டியிலுள்ள உணவகம், ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கையில் இரு உண வகங்கள், கே.கே.எஸ்வீதி யி லுள்ள ஓர் உணவகம் ஆகியவையை மூடப்பட் டன.

மேற்படி உணவகங் கள் மீது சுகாதாரப் பரிசோ தகர் நான்கு குற்றச்சாட் டுக்களைக் குறிப்பிட்டு வழக்குகளை தாக்கல் செய்திருந்தார்.

அவை வருமாறு:-

★ சமையல் பகுதி நிலம், சுவர், ஜன் னல், தளவாடங்கள், உப கரணங்கள் அசுத்தமாகக் காணப்பட்டமை –

★ உணவு கையாள்ப வர்கள் மருத்துவப் பரி சோதனை அறிக்கை பெறப்படாமல் பணியில் ஈடுபட்டமை –

★ உணவு கையாள் பவர்கள் கையுறை, தலைக்கவசம், மேலங்கி அணியாமல் வேலையில் ஈடுபட்டமை– ★ பாவனைக் கான நீர் நுண்ணங்கிப் பரிசோதனை அறிக்கை பெறப்படாமை. (இ

# ௬௫ வீதத்தையும் தாண்டிய உயிரிழப்பு தவறான உணவுப் பழக்கமே காரணம்!

நீரிழிவு, இருதய நோய், சுவாச நோய் மற்றும் உயர் குருதி அமுக்கம் போன்ற நோய்கள் காரணமாக நாட்டில் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை 65 வீதத்தையும் தாண்டிக் காணப்படுகின்றது. இதற்குக் காரணம் சுகாதாரப் பழக்கமுறை மற்றும் தவறான உணவுப் பழக்கங்களே ஆகும் என்று அட்டாளைச்சேனை ஆயுர்வேத வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி வைத்தியர் கே.எம்.அஸ்லம் தெரிவித்தார்.

'ஆரோக்கியமான எதிர்கால சந்ததியினரைக் கட்டியெழுப்புவோம்' என்ற தொனிப் பொருளில் அட்டாளைச்சேனை பிரதேச பொதுமக்களுக்கான, தொற்றா நோய்கள் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் கருத்தரங்குடன், இலவச வைத்திய பரிசோதனையும் நேற்று முன்னெடுக்கப்பட்டது. இதில் கலந்து



வைத்தியர் அஸ்லம்

கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையின் 9 மாவட்டங்களில் தொற்றா நோய்கள் பற்றி விழிப்புணர்வூட்டும் திட்டங்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. சுகாதார அமைச்சு, இளைஞர் விவகார மற்றும் திறன் விருத்தி அமைச்சு மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் ஆகியன இணைந்து இதனை முன்னெடுத்துள்ளன.

நீரிழிவு தொற்றா நோயால் பீடிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை, தினசரி சர்வதேச ரீதியில் அதிகரித்துக் கொண்டேதான் வருகின்றது. இலங்கையைப் பொறுத்தவரை சுமார் 20 வீதமானவர்கள் இந்நோய்த் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். எதிர்வரும் 2020 ஆம் ஆண்டில் தற்போதுள்ள நீரிழிவு நோயாளர்களின் எண்ணிக்கை இரண்டு மடங்காக அதிகரிக்கும் நிலைமையே காணப்படுகின்றது.

தொற்றா நோய்களின் அதிகரித்த தாக்கத்திற்கு எங்களது உணவு உள்ளிட்ட அன்றாடப் பழக்க வழக்கங்களே காரணம். முறையான உணவுப் பழக்கம், உடற் பயிற்சி என்பவற்றால் நோய்த் தொற்றிலிருந்து பாதுகாப்புப் பெற முடியும். எவர் எதைத் தெரிவித்த போதிலும், நாங்கள் அவற்றை ஏற்றுக் கொள்ளாது, உதாசீனம் செய்து பின்னர் அவஸ்தைப்படுவதையே வழக்கமாக்கிக் கொண்டுள்ளோம்.

சமூகத்திலுள்ள ஒவ்வொருவரும் நோயற்ற சுகதேகியாக வாழ வேண்டும். இதுவே எங்கள் ஒவ்வொருவரினதும் அவாவாகும். எங்களைப் பாதுகாக்கும் விடயத்தில் நாங்கள் அதிகம் அக்கறை, கவனம் செலுத்த வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

## மூடு பனியால் சூழ்ந்த திருமலை

திருகோணமலை மாவட்டத்தில் கடந்த சில நாள்களாகக் கடும் மூடு பனி நிலவுகின்றது எனத் தெரிவிக்கப்படுகிறது.

மாலை 6 மணிக்கு தொடங்கும் மூடுபனியுடனான காலநிலை மறுநாள் காலை 8 மணி வரை தொடர்வதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

இதன்காரணமாக வாகனங்களில் பயணிப்போர் கடும் சிரமத்திற்கு மத்தியில் பயணிக்கின்றனர். இத னால் விபத்துக்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

## நிதி நெருக்கடியில் ஏறாவூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

ஏறாவூர் பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கம் நிதி நெருக்கடியில் சிக்கியுள்ளது எனக் கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளர் எம்.எல்.அப்துல் லத்தீப் தெரிவித்துள்ளார். அத்துடன், மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திலிருந்து தங்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய 32 லட்சம் ரூபா எரிபொருள் கட்டணம் செலுத்தப்படாமையால் இந்த நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஏறாவூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் நிர்வகிக்கப்படும் எரிபொருள் நிரப்பு நிலையத்திலிருந்து மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தினால் பயன்படுத்தப்படும் வாகனங்களுக்கு எரிபொருள்கள் பெறப்படுகின்றன.

அந்த வகையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் வடக்கு பிரதேசமான கதிரவெளி, வாகரை, வாழைச்சேனை, மாஞ்சோலை, சந்திவெளி, மாவடிவேம்பு, செங்கலடி, கரடியனாறு, ஏறாவூர் ஆகிய வைத்தியசாலைகளின் நோயாளர் காவு வண்டிகள், சுகாதார வைத்திய அதிகாரிகளின் வாகனங்கள் உட்பட மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் பாவனையிலுள்ள சுமார் 50 இற்கும் மேற்பட்ட வாகனங்களுக்கு ஏறாவூர் நகர எரிபொருள் நிரப்பு நிலையத்திலேயே எரிபொருள் வழங்கப்படுகின்றது.

எனினும், உடன் பணமின்றியும், முற்பணமின்றியும் பிற்கொடுப்பன வாகவே இவ்வாறு எரிபொருள் விநியோகம் இடம்பெறுகின்றது.

இருப்பினும், மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தால் ஏறாவூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு இவ்விதம் பிற்கொடுப்பனவாகச் செலுத்தப்பட வேண்டிய சுமார் 32 லட்சம் ரூபா பணம் நீண்ட காலமாக நிலுவையிலுள்ளது.

இதனால் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் சமீப சில காலமாக நிதி நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது. இதன் காரணமாக மேற்படி கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கு மாதாந்தச் சம்பளம் வழங்குவதிலும் நெருக்கடி நிலை தோன்றியுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

## முஸ்லிம் மக்களும் தமிழ் மக்களும் நல்லிணக்கத்திற்குத் தடை அல்ல!

அம்பாறை, ஜன. 05

இந்த நாட்டில் சிறுபான்மை மக்களான முஸ்லிம், தமிழ் சமூகங்கள் ஒரு போதும் நல்லிணக்கத்திற்குத் தடையானவர்கள் அல்லர் என கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

சமகால அரசியல் முன்னெடுப்புகள் மற்றும் உள்ளூராட்சித் தேர்தலில் சிறுபான்மையினரின் அரசியல் அந்தஸ்து என்பவை தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையில் இன, மத நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்ப வேண்டுமாயின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழும் மக்கள், மலையகத் தமிழர்கள், வேடுவ சமூகத்தினர் உட்பட அனைத்து சிறுபான்மைச் சமூக மக்களின் நம்பிக்கையையும் நல்லாட்சி அரசு பெற்றாக வேண்டும்.

நாட்டு மக்கள் இன, மத, மொழி வேறுபாடின்றி தாம் சுதந்திரமாக, பாதுகாப்பாக, நிம்மதியாக இருக்கின்றோம் என உணர்கின்றார்களோ அப்போது தான் இலங்கையில் நல்லிணக்கம் கட்டியெழுப்பப்படும்.

அரசியல் அதிகாரங்கள் சிறுபான்மைச் சமூகங்கள் மீது ஆதிக்கம் செலுத்தியதால் உண்டான அழிவுதரும் விளைவுகளை நாடு அனுபவித்திருக்கின்றது. அந்த துரதிஷ்ட நிலை இனியும் தொடரக் கூடாது.

சிறுபான்மையினர் மனங்களில்



கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் கூறுகிறார்

மேலும் அச்சமும், பீதியும், நிம்மதியற்ற சூழ்நிலையும் ஏற்படா வண்ணம் புதிய அரசமைப்பின் அதிகாரப் பகிர்வு எதிர்பார்க்கப் படுகின்றது.

இந்த நாட்டில் சிறுபான்மை மக்களான முஸ்லிம், தமிழ் சமூகங்கள் ஒரு போதும் நல்லிணக்கத்திற்குத் தடையானவர்களாக இருந்தவர்கள் அல்லர். இனிவரும் காலங்களில் இருக்கப்போகிறவர்களும் அல்லர்.

நல்லாட்சி அர நல்லிணக்கத்தை வென்றெடுக்க முதலில் மக்களின் மனங்களை வென்றெடுக்க வேண்டும்.

மக்கள் ஆர்ப்பாட்டங்களையும், போராட்டங்களையும் நடத்த வேண்டிய தேவையை உருவாக்காத வண்ணம் சமத்துவமான பாரபட்சமற்ற, பகிர்ந்தளிக்கப்பட்ட அரசியல் அதிகார ஆட்சி உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஒருங்கிணைந்த தொழில்நுட்ப விழிப்பூட்டல் நிகழ்வு!



மட்டக்களப்பு, ஜன.05

மாமரங்களை நடுகை செய்தலும், கத்தரித்தலும், பழக்கப்படுத்தலும், பழுக்கவைத்தலும் உரம் இடலும், மாவிலைத் தத்திகளைக் கட்டுப்படுத்துவதற்குமான ஒருங்கிணைந்த தொழில்நுட்ப விழிப்பூட்டல் நிகழ்வொன்று நேற்று இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட விவசாயத் திணைக்களத்தால் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது. போரதீவுப்பற்று பிரதேசசெயலகப் பிரிவிற்குட்பட்ட, திக்கோடை விவசாயப் போதனாசிரியர் பிரிவின் தும்பங்கேணி இளைஞர் விவசாயத் திட்டம் எனும் கிராமத்தில் இந் நிகழ்வு இடம் பெற்றது. மாவட்ட பிரதிவிவசாயப் பணிப்பாளர் எம்.பர மேஸ்வரனின் வழிகாட்டலின் கீழ், மட்டக்களப்பு தெற்கு வலய உதவி விவசாயப் பணிப்பாளர் எம்.சிவஞானதின் ஒத்துழைப்புடன், திக்கோடை விவசாயப் போதனாசிரியர் ந.விவேகானந்தராஜாவின் ஒழுங்குபடுத்தலுடன் இந்த விழிப்புணர்வு நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில், மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் எம்.பரமேஸ்வரன், போரதீவுப்பற்றுப் பிரதேச செயலாளர் ஆர்.ராகுலநாயகி, மட்டக்களப்பு தெற்கு வலய உதவி விவசாயப் பணிப்பாளர் எம்.சிவஞானம், சமுர்த்தி உத்தியோகஸ்தர், பாடசாலை அதிபர் உட்பட இருநூறுக்கும் மேற்பட்ட விவசாயிகளும் கலந்துகொண்டனர்.

(ப)

# 300 கோடி அமெரிக்க டொலர்கள் இனி வருடாந்தம் வெளிநாட்டு முதலீடுகள்!

## இலங்கை மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு




கொழும்பு, ஜன. 05

எதிர்வரும் ஆண்டுகளில் வருடாந்தம் 200 தொடக்கம் 300 கோடிக் குமிடைப்பட்ட அமெரிக்க டொலர்கள் வெளிநாட்டு முதலீடுகளாக எதிர்பார்க்கப்படுகின்றன என இலங்கை மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி இந்தி ரஜித் குமாரசுவாமி தெரிவித்தார்.

கடந்த வருடத்தின் இறுதிக் காலத்தில் 790 கோடி அமெரிக்க டொலர்களைத் தாண்டிய உத்தியோகபூர்வ ஒதுக்கத்தை பேண முடிந்தது. வரவு - செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் தொகையை 3 தசம் 5 சதவீதத்தால் குறைக்கவும், உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1987ஆம் ஆண்டின் பின்னர் முதல் தடவையான இந்த ஆண்டில் நடைமுறைக்கணக்குகளின் சேமிப்பு எதிர்பார்க்கப்படுகிறது என்றும் இலங்கை மத்திய வங்கி ஆளுநர் குறிப்பிட்டார்.

2018 ஆம் ஆண்டுக்கான நிதிக் கொள்கை பிரகடன வெளியீட்டு நிகழ்வில் உரையாற்றுகையிலேயே இலங்கை மத்திய வங்கி ஆளுநர் இந்த விடயங்களை குறிப்பிட்டார்.

இலங்கை மத்திய மத்திய வங்கியின் கட்டடத் தொகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி நிதிக் கொள்கை பிரகடனத்தை வெளியிட்டு வைத்து தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

2017 ஆம் ஆண்டு சவால்கள் நிறைந்த காலப்பகுதியாகும் சீரற்ற காலநிலையால் விவசாயம் உட்பட பல்வேறு துறைகள் பாதகமான நிலையை எதிர்கொண்டன.

நாட்டின் பொருளாதார நிலையை மேம்படுத்தும் நோக்கில் மூன்று பொருளாதார சட்டகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

எதிர்வரும் 2020ஆம் ஆண்டளவில் ஆக்கபூர்வமான பணவீக்க இலக்கைக் கொண்ட நடைமுறையும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஏற்றுமதி போட்டித்தன்மையை ஊக்குவிக்கும் வினைத்திறனான அந்நியச் செலாவணி கொள்கையும் அமுலாகிறது.

ஏற்றுமதி வருமானமும் அதிகரித்திருக்கிறது. அம்பாந்தோட்டை கைத்தொழில் வலயம், கொழும்புத் துறைமுக நகரம் என்பனவற்றுக்கான வெளிநாட்டு முதலீடுகள் மேலும் அதிகரிக்கலாம் என்றும் இலங்கை மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி தெரிவித்தார்.

---

### ஒலுவில் வளாகத்தில் போராட்டம்:

# பல்கலை மாணவர்களுக்கு நீதிமன்றம் அழைப்பாணை!

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் மற்றும் தொழில்நுட்பவியல் பீட மாணவர்கள் பல்கலைக் கழக ஒலுவில் வளாகத்தில் இயங்கிவரும் நிர்வாக பிரிவு கட்டடத்தினுள் அத்துமீறி நுழைந்து கடமைகளைச் செய்ய விடாது இடையூறு விளைவித்தகுற்றச்சாட்டின் பேரில் 59 மாணவர்களுக்கு அக்கரைப் பற்று நீதிவான் நீதி மன்றினால் இன்று 05 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நீதிமன்றில் ஆஜராகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

பொறியியல் மற்றும் தொழில்நுட்பவியல் பீடங்களைச் சேர்ந்த 05 மாணவர்களுக்கு வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதனை இரத்துச் செய்யுமாறு கோரி கடந்த புதன்கிழமை முதல் பல்கலைக்கழக நிர்வாக கட்டடத்தினுள் தொடர்ச்சியான மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

போராட்டம் நடத்தி வரும் மாணவர்களை அங்கிருந்து வெளியேறுமாறு அக்கரைப் பற்று நீதிவான் நீதிமன்றம் புதன்கிழமை மாலை 4 மணியளவில் கட்டளை பிறப்பித்துள்ளது.

மாணவர்கள் அத்துமீறி நுழைந்து தொடர்ச்சியான மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமையால் நிருவாக கடமைகளைச் செய்ய முடியாதுள்ளது எனப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் எம். எம். நாஜீம் தெரிவித்தார்.

இதேவேளை, பொறியியல் பீடம் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை முதல் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளது. பல்கலைக்கழக வளாகம் தடைசெய்யப்பட்ட வலயமாக பிரகடனப்படுத்தி பொறியியல் பீட மாணவர்களை வெளியேறுமாறு உத்தரவிடப்பட்டிருந்தது என உபவேந்தர் பேராசிரியர் எம்.எம். நாஜீம் மேலும் தெரிவித்தார்.

இதையடுத்து விடுதியில் தங்கியிருந்த பொறியியல் பீட மாணவர்கள் கணிசமானவர்கள் பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறியுள்ளமையோடு ஒரு குழுவினர் தொடர்ந்தும் பல்கலைக் கழக நிர்வாகக் கட்டடத்திலிருந்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களை நிர்வாக கட்டடத்திலிருந்து வெளியேறுமாறும் நீதிமன்றினால் கட்டளை பிறப்பித்துள்ளதோடு நிர்வாக கட்டடத்தில் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டுக்காகவும் அரசகடமை செய்யவிடாதுஇடையூறு விளைவித்தனர் என பொலிஸார் நீதிமன்றில் சுட்டிக்காட்டியதையடுத்து இந்த மாணவர்களுக்கு நீதிமன்றில் ஆஜராகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

---

## தகவல் தொழில்நுட்பத்துறை தொடர்பில் புரிந்துணர்வு ஒப்பந்தம்!

கொழும்பு, ஜன. 05

இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கு இடையில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் இலத்திரனியல் விஞ்ஞான துறை தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்படவுள்ளது.

இரு நாடுகளும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் இலத்திரனியல் விஞ்ஞானத்துறை தொடர்பில் பல்வேறு நன்மைகளை பெற்றுக்கொள்வதே இதன் நோக்கமாகும்.

இது தொடர்பில் தொலைத் தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் ஹரின்பெர்னாண்டோ முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

## 60 மாடிகளைக் கொண்ட சீனாவின் 3 கட்டடங்கள் கொழும்பில்!

கொழும்பு, ஜன.05

கொழும்பில் அமெரிக்க டொலரில் 60 மாடிகளைக் கொண்ட மூன்று கட்டடங்களை அமைக்கும் மாபெரும் திட்டத்துக்கு சீனா முதலீடு செய்யவுள்ளது.

இந்த 60 மாடிகளைக் கொண்ட மூன்று கட்டிடங்களையும், வெளிநாட்டு நிறுவனங்களை ஈர்க்கும் வகையில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

சீன துறைமுக நிறுவனம் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டுடன் இந்த மூன்று கட்டடங்களையும் அமைக்கும் என பெருநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க கொழும்பில் ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

இந்த மாபெரும் திட்டமானது, இலங்கையின் பிரதான துறைமுகமான கொழும்புத் துறைமுகத்துக்கு அருகில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதனூடாக இந்து சமுத்திரத்தில் தமது செல்வாக்கை அதிகரிப்பதே சீனாவின் நோக்கம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

# ரணிலைக் காப்பாற்றியது ஜனாதிபதியின் கத்தி!



கொழும்பு, ஜன.05

ஜனாதிபதியின் கத்தி பிரதமர் ரணிலைக் காப்பாற்றியுள்ளது என மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எனது கத்தியில் யார் வெட்டுப்படுகிறார்கள் எனத் தெரியாது என்று ஜனாதிபதி தெரிவித்திருந்தார். ஆனால், அவரது கத்தியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வெட்டுப்படவில்லை.

அவர் காப்பாற்றப்பட்டுள்ளார். ஆனால் மக்களுக்குத் தெரியும் யார் இந்த கொள்ளையில் ஈடுபட்டார்கள் என்று முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் மோசடி செய்துள்ளார் ஆணைக் குழு அறிக்கை சொல்கிறது.

அதில் 11 கோடி ரூபா சூறையாடப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. ரணில் விக்கிரமசிங்க தொடர்பில் அவரை நியமித்தமை தொடர்பாக மட்டுமே கூறப் பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

---

## அயலவர்கள் வழிபாட்டில் ஈடுபட்டவேளை பிரசவ வலியால் கர்ப்பிணித் தாய் மரணம்!

கொழும்பு, ஜன.05

கர்ப்பிணித் தாயொருவர் பிரசவ வலியால் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தபோது அயலவர்கள் கூடி சமய வழிபாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்தமையால் அவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹொலிரூட் தோட்டத்தில் நேற்று முன்தினம் மதியம் இடம்பெற்றது.

கர்ப்பிணித் தாயொருவர் பிரசவ வலியால் வேதனைப்பட்டுக்கொண்டிருந்தார். இந்த நிலையில், அவரை உரிய நேரத்திற்கு வைத்திய சாலைக்கு கொண்டு செல்லாமையினால் அவர் உயிரிழந்துள்ளார்.

இந்த கர்ப்பிணித்தாய் வைத்தியசாலைக்கு கொண்டு வரும் போதே இறந்திருந்தார் என்றும் சடலம் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கர்ப்பிணித் தாய் வலியால் துடித்த போது அயலவர்கள் உடனடியாக தோட்ட நிர்வாகத்திற்கு அறிவித்தமையுடன் தோட்டத்திற்குச் சொந்தமான அம்புலன்ஸ் வாகனம் வந்த போதிலும் கர்ப்பிணித் தாயை வைத்திய சாலைக்குக் கொண்டு செல்வதில் காலதாமதமாக்கியுள்ளதாகவும் இந்த கர்ப்பிணித்தாயின் வலியை குணமாக்குவதற்காக சிலர் சமய வழிபாட்டில் ஈடுபட்டமையே கால தாமதத்திற்கு காரணம் எனவும் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir



# பாதாளக் குழு உறுப்பினர் 'பில்டர் ரங்கா' கைது!

பிரபல போதை வர்த்தகரும், பாதாளக் குழுத் தலைவருமான வெல்லே சுரங்கவுக்கு மிகவும் நெருக்கமான 'பில்டர் ரங்கா' என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு வடக்கு பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வெல்லே சுரங்கவின் சட்ட விரோத செயற்பாடுகளுக்காக முகத்தவாரம் கடற்கரைக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள இரகசிய இடத்தில் வைத்தே இவரை பொலிஸார் கைது செய்தனர்.

## தினசரி ராசி பலன்
## (05.01.2018)

*2017ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் மார்கழித் திங்கள் 21 ஆம் நாள் வெள்ளிக்கிழமை. சதுர்த்தசி இரவு07.00 மணி வரை பின்னர் பஞ்சமி. நட்சத்திரம்:மகம் பி.இ 2.15 மணிவரை பின்னர் பூரம் மரணயோகம் பி.இ.2.15மணிவரை பின்னர் சுபயோகம்*

**ராகுகாலம்** - *பகல் 10.49 மணி முதல் 12.15 மணிவரை*

**சுபநேரம்** - *காலை 6.34 மணிமுதல் 08.05 மணிவரை இன்று சங்கடஹர சதுர்த்தி*

**திவசம் செய்ய வேண்டிய திதி**- *மார்கழி மாத தேய்பிறை சதுர்த்தசி*

**பிறந்த நட்சத்திர வழிபாடு:** *மகம்*

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்** இன்பமான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக்கும். ஆடை, அணி மணிச் சேர்க்கை உண்டாகும். வேலை தேடுவோருக்கு வேலை கிடைக்கும்.

**ரிஷபம்** துயரமான நாள்.பணவரவு குறையும். குடும்பத்தில் பிரச்சினை அதிகரிக்கும். வியாபாரத்தில் பெரு நட்டம் உண்டாகும். உத்தியோகத்தில் வேலைச் சுமை அதிகரிக்கும்.

**மிதுனம்** சமபலன்கள் காணப்படுகின்றன. வரவும் செலவும் சமமாக இருக்கும். தேகம் பாதிப்படையும். குடும்பத்தில் ஓரளவு அமைதி நிலவும். கொடுக்கல், வாங்கலில் அவதானம் தேவை.

**கடகம்** ஆக்கபூர்வமான நாள். வருமானம் வளமாக இருக்கும். குடும்ப உறவில் நெருக்கம், பாசம் அதிகரிக்கும். உத்தியோகத்தர்களுக்கு நீண்டகாலம் எதிர்பார்த்த பதவி உயர்வுகள் கிடைக்கும்.

**சிம்மம்** யோகமான நான். பணம் தாராளமாகப் புழங்கும். சிலருக்கு சொந்த வீடு வாங்கும் எண்ணம் நிறைவேறும். சகோதர வழியால் எதிர்பாராத உதவிகள் கிடைக்கும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும்.

**கன்னி** சஞ்சலமான நாள். பொருளாதாரம் நலிவடையும். குடும்பத்தில் சலசலப்பு அதிகரிக்கும். பொருளாதாரத்தில் கவனம் செலுத்தாவிட்டால் சிரமப்பட நேரும். உடல் நலனில் கவனம் தேவை.

**துலாம்** உயர்வான நாள். பொருளாதாரம் வளர்ச்சியடையும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். தொழிலில் உயர்வு கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் வளர்ச்சி அடைவார்கள். சகோதர உறவு வலுவடையும்.

**விருச்சிகம்** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருள் வருவாய் இருப்பிலும் செலவுகள் அளவுக்கதிகமாகும். உடலில் ரோகங்கள் உண்டாகி மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும்.

**தனுசு** மேன்மையான நாள். பொருளாதாரம் ஏற்றமடையும். தொழில் மேன்மை அடையும். உத்தியோக உயர்வுகள் எதிர்பாராத படி கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் ஊக்கமடைவார்கள்.

**மகரம்** தீமையான நாள். வருமானம் குறைவாக இருக்கும். குடும்பத்தில் தொல்லைகள் உண்டாகும். தேக சுகம் பாதிப்பும் மனவிரக்தியும் உண்டாகும். பெண்களுக்கு குடும்பப் பொறுப்புகள் அதிகரிக்கும்.

**கும்பம்** விருத்தியான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்பத்தில் நெருக்கமும் பாசமும் அதிகரிக்கும். வியாபாரம் விருத்தியடையும். மாணவர்கள் கல்வியில் விருத்தியடைவார்கள்.

**மீனம்** உயர்வான நாள். வருமானம் உயர்வடையும். தொழிற்பிரிவினர் படிப்படியாக முன்னேற்றமடைவார்கள். உத்தியோகத்தர்கள் வசதியான இடமாற்றமும் பதவி உயர்வும் பெறுவார்கள்.

**சந்திராட்டமநாள்: உத்திராடம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதங்கள் திருவோணம், அவிட்டம் 1ஆம் 2ஆம் பாதங்களில் பிறந்தோர் சுபகருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

# வரதராஜப்பெருமாள் வித்தியாலயத்தில் தரம் 10 வகுப்பு உடனடியாகவே ஆரம்பம்

## பாடசாலைச் சமூகத்தின் போராட்டத்துக்கு கைமேல் பலன்



யாழ்ப்பாணம், ஜன.05

பொன்னாலை வரதராஜப் பெருமாள்வித்தியாசாலையில் நடப்பு ஆண்டில் தரம் 10 வகுப்பை ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதை அடுத்துப் பாடசாலைச் சமூகத்தால் இரண்டு நாள்களாக முன்னெடுக்கப்பட்ட கவனவீர்ப்புப் போராட்டம் நேற்றுமுன்தினம் நண்பகலுடன் முடிவுக்கு வந்தது. நேற்றுமுன்தினமே தரம் 10 கற்றல் நடவடிக்கைகள் ஆரம்பமாகின.

பொன்னாலை வரதராஜப் பெருமாள்வித்தியாசாலையில் தற்போது தரம் 9 வரையான வகுப்புக்கள் இயங்கிவந்த நிலையில், க.பொ.த சாதாரண தரம்வரையானவகுப்புக்களை ஆரம்பிக்குமாறு பல வருடங்களாகப் பாடசாலைச் சமூகம் கோரிக்கை விடுத்துவந்தது.

இந்த விடயம் தொடர்பாகக் கடந்த நவம்பர் மாத.ம் 28 ஆம் திகதி வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரிடம் விடுத்த கோரிக்கை தொடர்பாக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

பாடசாலையில் தரம் 10 வகுப்பை ஆரம்பிக்க அனுமதி வழங்கப்படும்வரை தாங்கள் போராட்டத்தைத் தொடர்வோம் எனக் கூறிய அவர்கள், கடந்த புதன்கிழமை காலையும் போராட்டத்தை முன்னெடுத்தனர். போராட்டத்தால் மாணவர்கள் எவரும் பாடசாலைக்குள் செல்லவில்லை. அவர்கள் பெற்றோருடன் இணைந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஒரு கட்டத்தில் போராட்டத்துக்குத் தலைமையேற்றவர்களில் ஒருவரான தன்னைப் பொலிஸாரைக் கொண்டு கைது செய்ய வேண்டிய நிலை ஏற்படும் என வலயக் கல்விப் பணிப்பாளர், அதிபர் ஊடாக அச்சுறுத்தினார் எனப் பழைய மாணவர் சங்கச் செயலாளர் ந.பொன்ராசா தெரிவித்தார்.

இந்நிலையில், வலயக் கல்விப் பணிமனையில் இடம்பெற்றசிறப்புக்கூட்டம்ஒன்றை அடுத்துப் பொன்னாலை வரதராஜப்பெருமாள் வித்தியாசாலையில் நடப்பு ஆண்டில் தரம் 10 வகுப்பை ஆரம்பிப்பது எனவும், அடுத்த ஆண்டில் தரம் 11 வகுப்பை ஆரம்பிப்பது எனவும் முடிவெடுக்கப்பட்டது. இந்த முடிவு மாகாணக் கல்வி அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

இதனையடுத்து அந்தக் கடிதத்தின் பிரதி போராட்டக்காரர்களுக்கு வழங்கப்பட்டது. பிற்பகல் ஒரு மணியளவில் போராட்டம் கைவிடப்பட்டது. இதையடுத்து மாணவர்கள் வகுப்புக்களுக்குச் சென்றனர்.

# திருமண விழாவிற்குச் சென்று திரும்பிய வேளை நேற்று விபத்தில் சிக்கி 11 பேர் படுகாயம்!

திருமண விழாவில் கலந்து கொண்டு விட்டு வீடு திரும்பிய 11 பேர், அநுராதபுரம்-பாதெனிய வீதியில் ஏற்பட்ட விபத்தில் படுகாயங்களுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து நேற்றுக் காலை இடம்பெற்றது வானொன்றில் பயணித்தவர்களே இவ்வாறு விபத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

ஜா - எலயில் இருந்து வான் வேகமாகச் சென்றுகொண்டிருந்த நிலையில், சாரதிக்கு ஏற்பட்ட தூக்கத்தினாலேயே விபத்து நேர்ந்துள்ளது எனப் பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இதன்போது வான் வீதியை விட்டு விலகி, அருகிலிருந்த மரமொன்றில் மோதியுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தையடுத்து காயங்களுக்கு உள்ளான 11 பேரும் கல்கமுவ ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில், அதில் 8 பேர் மேலதிக சிகிச்சைகளுக்காக அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

# மின் தடை

உயர் அழுத்த மற்றும் தாழ்அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனி காலை 8 மணியிலிருந்து மாலை 6 மணி வரை -

**யாழ். பிரதேசத்தில்**- கொல்லங்கலட்டி, வித்தகபுரம், மாவைகலட்டி, கீரிமலை, கூவில், நல்லிணக்கபுரம், கீரிமலை சந்தி கடற்படை முகாம், நுணாவில், கைதடி, நாவற்குழி, மறவன்புலோ, தச்சன்தோப்பு, தனங்கிளப்பு, கோகிலாக் கண்டி, கோரதீவு வீதி, அறுகுவெளி, பனைவள ஆராய்ச்சி நிலையம், கைதடி யுனைரெட் மோட்டர்ஸ், கைதடி வடமாகாண சபை அலுவலகம்ஆகிய இடங்களிலும் -

**கிளிநொச்சி பிரதேசத்தில்**

தேராவில், இருட்டுமடு, மூங்கிலாறு, உடையார் கட்டு, கைவேலி, சுதந்திரபுரம், தேவிபுரம், வள் ளிபுனம், 68 ஆவது பிரிவு இராணுவமுகாம், 683 ஆவது பிரிவு இராணுவ முகாம், 18 VIR இராணுவ முகாம்ஆகியஇடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** - கணேசபுரம் கிராமம் ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# தபால் வாக்களிப்பை அத்தாட்சிப்படுத்தும் செயன்முறைப் பயிற்சி

யாழ்ப்பானம், ஜன. 05

உள்ளூராட்சித் தேர்தலில் தபால் மூல வாக்களிப்பை அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கான அறிவுறுத்தல் செயன்முறைப் பயிற்சி யாழ்ப்பாண மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்று வருகிறது.

தேர்தல் திணைக்கள அதிகாரிகளால் வழங்கப்படவுள்ள இந்தப் பயிற்சி நேற்று வியாழக்கிழமை சிங்கள மொழி மூலம் இடம்பெற்றுறது.

இதேபோன்று இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தமிழ்மொழி மூலமான பயிற்சி செயன்முறை இடம்பெறும். (ஐ-7)

அமரர் குமார் பொன்னம்பலம் அவர்களின் 18 ஆவது ஆண்டு நினைவு தினம் இன்று ஆகும். அதனையொட்டி இந்த விடயம் பிரசுரமாகின்றது.



சிங்களத்தின் கோட்டையில் இருந்து

# தமிழருக்காக ஓங்கி குரல் எழுப்பிய அஞ்சா நெஞ்சன்

மாமனிதர் குமார் அவர்களின் பத்தாம் ஆண்டு நினைவு தினத்தில் அவரைப் பற்றி வெளிவராத சில நினைவுரைகளை நன்றிக் கடனாக வெளிப்படுத்துவது சாலப் பொருத்தமென எண்ணுகின்றேன். ஒருவர் இறந்த பின் அவர் ஆற்றிய துணிச்சல் மிக்க சேவையை நினைவு கூருவது எமது நன்றிக் கடனாகும். இன்றைய சமுதாயத்தில் நடக்கும் நாட்டு நிலைமை காரணமாக தமிழினம் அல்லல் உற்று வாழ்ந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் அவர்களுக்கும் ஓர் ஆறுதல் அளிப்பதாகவும் வெளிப்படுத்துவதும் ஒரு காரணமாக அமையும் என்று எண்ணுகின்றேன்.

முதலாவதாக அவரின் நினைவாக அவரின் ஆன்மாவின் சார்பாக பின்வருவனவற்றை சமர்ப்பிக்கின்றேன்.

1. உயர் நீதிமன்ற 1978, 1979, 1980 -1S.L.R 323 ஆம் பக்கம் – உறுப்புரை (Article) 24- 1 இன் படி வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய மாவட்ட நீதிமன்றங்களிலும் தமிழிலே வழக்குத் தாக்கல் செய்து நடத்தக் கூடிய சட்டமும் உச்ச நீதிமன்ற தீர்ப்பும் இருந்த போதும் ஏன் இவ்வளவு காலமும் செயற்படுத்தப்படவில்லை?

2. 1956 ஆம் ஆண்டு தனிச் சிங்களச் சட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட போது அமரர் ஜீ.ஜீ., டாக்டர் கொல்வின் R.De சில்வா ஆகியோர் இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதினால் இந்த நாடு இரண்டாக பிரியப்படும் அபாயம் ஏற்படும் என எடுத்துரைத்த போதும் (கன்சாட் ஆதாரமாகவிருக்கிறது) அவர்களது வேண்டுகோளை செவிமடுக்காமல் தனிச் சிங்களச் சட்ட பிரேரணையை நிறைவேற்றியதால் இந்த நாடு இந்த நிலைக்குத் தள்ளப்பட்டதை நிவர்த்தி செய்வதற்கு ஏதும் நடவடிக்கை எடுக்கப்பட்டதா?

எது எவ்வாறாயினும் அரசமைப்புச் சட்டத்தின்படி தமிழும் அரச கரும மொழியன்று இயற்றப்பட்ட பின்பும் அது ஏன் இன்னும் செயற்படுத்தப்படவில்லை?

4. சிங்கள ஸ்ரீயை புகுத்தப்பட்ட போது சிங்கள ஸ்ரீக்குப் பக்கத்தில் அமரர் ஜீ.ஜீ. தமிழ் சிறியையும் எழுதும் படி வேண்டுகோள் விடுத்தபோதும் அது ஏற்றுக் கொள்ளாமல் விட்டதற்குக் காரணம் என்ன?

5. எது எவ்வாறாறினும் மாமனிதர் குமார் பொன்னம்பலம் ஏழு கட்சிகளுடன் ஏறக்குறைய இரண்டு வருடங்களுக்கு மேலாக பேச்சு நடத்தி Democratic People's Alliance (D.P.A. தேர்தல் விஞ்ஞாபனத்தை ஐக்கிய தேசியக் கட்சியைத் தவிர்த்து பல கட்சிகளுடன் ஆலோசனை நடத்தி தயாரிக்கப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தை சிறிமாவோ பண்டாரநாயக்க ஜனாதிபதியாக போட்டியிட்ட தேர்தல் மேடைகளில் அகில இலங்கை முழுவதிலும் மாமனிதர் குமார் பொன்னம்பலம் பிரசாரம் செய்த போதும் செவிசாய்க்காமல் விட்டதற்குக் காரணம் என்ன? அதுமட்டுமல்ல D.P.A. தேர்தல் விஞ்ஞாபத்தைத் தயாரித்து காலஞ்சென்ற அனுரா பண்டாரநாயக்க இன்னும் சில சிங்கள அரசியல் கட்சியைத் சேர்ந்தவர்களையும், ஊடகவியலாளரான லசந்த விக்கிரமதுங்கவையும் அழைத்துச் சென்று வன்னிக்காட்டுக்குள் இந்நாட்டின் இரு இனங்களுக்கும் இடையில் ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டுமானால் தமிழருடைய சம்மதமும் தமிழர்களை பிரதிநிதித்துவப்படுத்துபவர்களின் சம்மதமும் தேவை என்றபடியால் அவர்களிடம் இந்தத் தேர்தல் விஞ்ஞாபனத்தை சமர்ப்பித்த பின்புதான் இலங்கை முழுவதும் மும்மொழிகளில் பிரசாரம் செய்தார் மாமனிதர் குமார் பொன்னம்பலம்.

6. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியுற்றதும் மேல் கூறப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தைக் கைவிட்டார்.

7. எது எவ்வாறாயினும் திம்புக் கோட்பாட்டுக்கு ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் பல இளைஞர்களைக் கொண்ட போராட்ட இளைஞர்கள் அடங்கிய குழுக்கள் (அகில இலங்கை தமிழ் காங்கிரஸைத் தவிர்த்து) ஏனையோர் பங்குபற்றி தீர்மானிக்கப்பட்ட திம்புக் கோட்பாட்டு அடிப்படையில் சமாதானத்தை இந்த நாட்டிலே நிலை நிறுத்துவதற்காக மாமனிதர் குமார் பொன்னம்பலம் எடுத்த முயற்சிகள் ஏன் தோல்வியடைந்தன? இதற்கு யார் பொறுப்பு? இன்று ஐக்கியம், ஒற்றுமை, சமாதானம் என்று மேடை மேடையாகப் பேசுபவர்கள் இவை ஞாபகத்தில் இருக்கின்றனவா என்பதை அமரர் குமார் பொன்னம்பலத்தின் சார்பில் நினைவூட்ட விரும்புகின்றேன்.

8. கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் பல சந்தர்ப்பங்களில் நீதியரசர் தமிழர், கட்சிக்காரர்கள் தமிழர்கள், கட்சிக்காரர்களுக்கு ஏற்பட்ட சட்டத்தரணிகள் தமிழர்கள், ஆனால் தமிழில் வழக்கை நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு பொறுப்பு யார்?

9. வடக்கு, கிழக்கில் நீதிமன்றங்கள் தமிழில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில் முக்கியமான சிவில் நடைமுறைக்கு கோவை சட்டம் (Civil Procedure Code), Evidence Ordinance, Nortary Ordinance, Penal Code, இன்னும் நீதிமன்றத்துக்குத் தேவையான சட்ட நூல்கள் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடப்படவில்லை. இதற்கு யார் பொறுப்பு?

10. அவருடைய நினைவு தினத்தில் இலங்கை சிவில் நடைமுறைச் சட்டக் கோவையில் இருக்கின்ற கணவன் மனைவி உறவைப் பற்றி இருக்கின்ற சட்டப்பிரிவையும் ஞாபகப்படுத்த விரும்புகின்றேன். மனைவியை கணவன் துன்புறுத்தினால் அல்லது நடைமுறைச் சட்டக் கோவைக்கு மாறாக மனைவிக்கு எதிராக கணவன் நடந்துகொண்டால், மனைவி பிரிந்து வாழ்வதற்கு சிவில் நடைமுறைச் சட்டக் கோவைச் சட்டத்தில் இடமுண்டு என்பதை அவருடைய நினைவு தினத்தில் ஞாபகப்படுத்த விரும்புகின்றேன்.

**நினைவு மலர்களிலிருந்து வெளிவராத சில நினைவுரைகள்**

**தமிழ்க் குரல்...**

**தமிழின் குரல்...**

எம் இனத்தின் விடிவுக்காக தனியொருவனாக நின்று குரல் எழுப்பிய தமிழ்ப் பெருந்தகையே! அகதிகளாக இதுவரை வாழ்ந்த எம்மை அநாதைகளாகவும் தவிக்கவிட்டுச் சென்றதேனோ! எம் இனத்துக்கு விமோசனமே இல்லையென இறைவன் முடிவெடுத்து விட்டதனால் தான் உங்களைத் தன்னுடன் அழைத்துவிட்டான் போலும். குறுகிய காலத்தில் பழகிய என் போன்றோர்களை ஆறுதல் அடைய முடியாது உள்ளபோது உங்களால் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் அடைத்து வைக்கப்பட்டுத் தவித்துக் கொண்டிருந்த விடுதலையாக்கிய பல இளைஞர்கள், அவர்கள் எவ்வாறு உங்கள் நிலையை நினைத்து ஆறுதல் அடைவார்களோ தெரியாது. அத்துடன் குடும்பத்தவர்களின் நிலையை நினைத்துப் பார்க்கவே கஷ்டமாக இருக்கிறது.

**ஒரு மானமுள்ள தமிழனின் நினைவாக**

*(தமிழர் ஒருங்கிணைப்புக்குழு - நோர்வே)*

பனை மரங்கள் அங்கு வளர்வதில்லை. ஆனாலும் அதிசமாய் நீ அங்கு ஒற்றைப் பனைமரமாய் ஓங்கி வளர்ந்து நின்றாய். பற்றைக் உகந்த மண்ணில் பனை மரங்கள் எத்தனை நாள் உயிர் வாழும்என்றுஎப்போதும்பயந்திருந்தோம்; ஈற்றில் நடந்தது அது. கொக்கட்டிச் சோலையிலே கொலையுண்டு போனவர்கள்., கொழும்பிலே ஆயிரமாய் கூண்டுகளில் அழுதவர்கள் பலர், வெறிநாய்கள் தாக்கியதால் கிருசாந்தி ஆனவர்கள், என்று எத்தனையோ ஈழத்தவர்கள் இன்னல்களில் கைகொடுத்தாய்! நீசர்களின் பொய் மதுவில் நீதி மயங்கி நின்ற உலகெங்கும் நீ சென்று உள்ளதை எடுத்துச் சொன்னாய்! உண்மையை அடித்துச் சொன்னாய். இனத்தின் விடுதலைக்காய் இனப்போரை முரசடித்தாய்! நண்பா தன்மானம் உள்ள தமிழனாய் நீ வாழ்ந்ததுக்கும் எவருக்கும் அஞ்சாத ஈழவனாய் நீ வாழ்ந்ததற்கும் உமக்கு நாம் எவ்வாறு நன்றி சொல்வோம். மறைந்தாலும் வாழ்பவனே!

**தமிழ்த் தேசத்தின் உரிமைக்காக குரல் கொடுத்த குமார் பொன்னம்பலம் படுகொலை**

தமிழ்த் தேசத்தின் உரிமைக்காகத் தமிழரின் உரிமைக்காக சிங்களத்தின் கோட்டையில் இருந்தவாறு துணிவுடன், அதேவேளை காலத்தின் தேவையை நன்கு உணர்ந்து தனக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்களைக் கூட கருத்தில் கொள்ளாது சந்திரிகா அரசின் முகமூடியைத் தொடர்ந்தும் கிழிந்து வந்த குமார் பொன்னம்பலம், சந்திரிகா அரசினதும் அதனுடன் இணைந்து இயங்கும் சில கூட்டங்களும் இணைந்த செயற்பாட்டில் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டுள்ள துன்பகர நிகழ்வுதான் இன்றைய நினைவு தினம்.

உண்மை, நீதி, மனித உரிமை என்பவற்றை தனது ஆயுதமாகக் கொண்டு தமிழினத்தின் விடுதலைக்காக தன்னை அர்ப்பணித்து சர்வதேசம் எங்கும் சென்று சந்திரிகா அரசின் தமிழின விரோத செயல்களையும் தமிழினப் படுகொலைகளையும் அரசியல் கபடத்தனங்களையும் பகிரங்கமாக வெளிக் கொணர்ந்து தமிழர் தம் தன் நிலையை எடுத்துரைத்த ஒரே காரணத்துக்காக அவர் கொலை செய்யப்பட்டார் என்பதற்கு எவ்வித ஐயமுமில்லை. குமார் பொன்னம்பலம் என்ற சத்தியவாதியின் குரல் அநியாயமாக ஒழிக்கப்பட்டுள்ளமை உலகம் பரந்து வாழும் தமிழர் மனங்களில் பெரும் சோகத்துடன் கூடிய அதிர்ச்சியை பல நாடுகளில் வெளியான செய்திகள் , நினைவுக் கூட்டங்கள், நினைவு மலர்கள் தெரிவிக்கின்றன.

குமார் பொன்னம்பலத்தின் இழப்பு தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஈடு செய்யமுடியாத பேரிழப்பு. தமிழ் மக்களின் உரிமைக்காக அவர் புரிந்த செயற்பாடுகள் உண்மையான தமிழ்த் தேசாபிமானி என்ற மதிப்பையும் புகழையும் தமிழ் மக்கள் மத்தியில் அவருக்குப் பெற்றுக் கொடுத்திருப்பது புலனாகும்.

அவர் மறைந்தாலும் அவர் நாமம் என்றும் நிலைத்து நிற்கும். ★

தொகுப்பு: டி.ராசா

## கனடாவில்

# மாமனிதர் ஞாபகார்த்த முத்திரை




கனடா அரசாங்கத்தின் அனுமதியுடனும் அங்கீகாரத்துடனும் அங்கு மாமனிதர் குமார் பொன்னம்பலம் ஞாபகார்த்த தபால் தலை வெளியிடப்பட்டிருந்தது. கனடாவில் இதன் பெறுமதி 46 சதம்.

முதல் முத்திரை 5 ஆயிரத்து 900 கனடியன் டொலருக்கு விற்பனையானது. அன்று முத்திரைகள் விற்பனையான பணம் முழுவதும் கனடாவில் உள்ள தமிழ் வைத்திய பணிமனைக்கு அனுப்பப்பட்டமை என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

காலைக்கதிர்
Kalaikkathir






தொகுப்பு: பொன்.வேணுகிருஷ்ணா

**ஒரே வீச்சில், ட்ரம்ப் கடந்த நிர்வாகங்களின் தோரணைகளை முடிவுக்குக் கொண்டு வந்தார். அவ்வாறு செய்ததன் மூலம், பிரதம மந்திரி பென்ஜமின் நெத்தெனியாகுவின் வலதுசாரி அரசாங்கத்தின் சியோனிச குடியமர்வுகள் மீதான விரிவாக்கம், பலஸ்தீன நிலம் மீதான அதன் அபகரிப்பு, இனச் சுத்திகரிப்பு மற்றும் ஒட்டுமொத்த ஒடுக்குமுறை ஆகியவை வொஷிங்டனிடமிருந்து நிபந்தனையற்ற ஆதரவைப் பெறும் என்பதற்கு அவர் ஒரு தெளிவான சமிக்ஞை அனுப்பினார்.**

பலஸ்தீன ஆணையத்தைப் பொறுத்த வரையில், 'தீவிரவாதத்தை தோற்கடிப்பதற்கான' அமெரிக்க



சிலுவைப் போரில் அது இணைந்து கொள்ளவதற்கும், பலஸ்தீன மக்கள் அவர்களின் 'உடன்பாடின்மையை, வன்முறை இன்றி, நியாயமான விவாதத்துடன் விடையிறுப்பதை' உறுதிப்படுத்திவைக்க அதற்குஅழைப்புவிடுத்தும், அது இஸ்ரேலுக்கும் மேற்கிற்கும் ஒரு பாதுகாவலனாக அதன் பாத்திரத்தைத் தொடர வேண்டுமென்ற ஒரு கோரிக்கைக்கு அதிகமாக அதனிடம் வேறெந்த பொறுப்பையும் அவர் ஒப்படைக்கவில்லை.

இடைவிடாது இஸ்ரேலிய வன்முறைக்கு உள்ளாக்கப்பட்ட ஒரு மக்கள், அதன்நில அபகரிப்பு, இளைஞர்கள் மீதான அதன் எதேச்சதிகார சிறைபிடிப்பு, அதன் தொடர்ச்சியான போர்கள் மற்றும் ஒடுக்குமுறை நடவடிக்கைகளில் பத்தாயிரக் கணக்கானவர்கள் படுகொலை செய்யப்பட்டமை என இப்பிரச்சினைகள் ஏற்கனவே அவர்களின் அடிப்படை விருப்பங்கள் மற்றும் உரிமைகளை முழுமையாக அவமதித்து தீர்க்கப்பட்டுள்ள நிலையில், இவற்றிற்காக 'நியாயமான விவாதத்தில்' ஈடுபடுமாறு கூறப்படுகிறது.

**ஜெருசலேம் மீதான இஸ்ரேலிய இறையாண்மையை அங்கீகரித்திருப்பதையும் -அங்கு வசிப்பவர்களில் 40 சதவீதம் பேர், சுமார் 320,000 பலஸ்தீனர்களுக்கு குடியுரிமை மறுக்கப்படுகிறது- அமெரிக்க தூதரகத்தை அங்கே நகர்த்துவதையும், 'நீண்டகாலமாக சமாதான நிகழ்முறையை முன்னெடுப்பதில் காலங்கடத்தப்பட்டு வந்த நடவடிக்கையாக' ட்ரம்ப் சித்திரிக்கிறார். அவர் மருமகன் ஜாரெட் குஷ்னரும், அவரின் பெருநிறுவனத்தின் முன்னாள் உயர்மட்ட வழக்கறிஞர்களான Jason Greenblatt மற்றும் இஸ்ரேலுக்கான அமெரிக்க தூதர் டேவிட் ப்ரீட்மனும் இந்த 'நிகழ்முறையை' மேற்பார்வையிட்டுள்ளனர், இவர்கள் அனைவரும் ஆக்கிரமிப்பு பிராந்தியத்தில் சட்டவிரோத இஸ்ரேலிய குடியமர்வுகளுக்கு வெறிபிடித்த ஆதரவாளர்கள் ஆவர்.**

செல்வந்த வலதுசாரி அமெரிக்க சியோனிசவாதிகளின் ஒரு சிறிய குழுவினரும் மற்றும் வலதுசாரி கிறிஸ்துவ எவங்கேலியர்களும் (Evangelicals) 2016 இல் அவருக்கு பிரசார நிதி வழங்கியிருந்த நிலையில், அவர்களது ஆதரவைப் பெறுவதற்காக அவர் அளித்த பிரசார வாக்குறுதிகளை 'நிறைவேற்றும்' ஒரு நடவடிக்கையாக ட்ரம்ப் அவர் உரையை ஒளிவுமறைவின்றி சித்திரித்தார். அவர் நிர்வாகம் நெருக்கடிகளால் சூழப்பட்டுள்ள நிலைமைகளின் கீழ், இந்த 'அடித்தளத்தை' அவர் உறுதிப்படுத்தி வைக்க ஆர்வப்படுகிறார்.

எவ்வாறிருப்பினும் மிக அடிப்படையில், பலஸ்தீனர்களுக்கு எதிரான அவரது அரசியல் ஆக்கிரமிப்பு நடவடிக்கையானது மத்திய கிழக்கு முழுவதிலும், குறிப்பாக ஈரானுக்கு எதிராக, போரை நோக்கிய முனைவுடன் பிணைந்துள்ளது. ட்ரம்ப் அவர் உரை வழங்கிய அதேநாளில், பென்டகன் 2,000 துருப்புகளை - முன்னர் ஒப்புக் கொண்ட எண்ணிக்கையை விட நான்கு மடங்கு அதிகம் - சிரியாவில் நிலைநிறுத்தி இருப்பதாகவும், ISIS ஐ விரட்டியடித்த






பின்னரும் அவர்களைத் திரும்பப் பெற எந்த உத்தேசமும் இல்லை என்பதையும் பென்டகன் ஒப்புக் கொண்டது.

ட்ரம்பின் உரையை அடுத்து, அல் கொய்தா போன்ற இஸ்லாமிய குழுக்கள் மதவாத உணர்வுகளுக்கு முறையிட்டு வருகின்ற நிலையில், அமெரிக்க கொள்கை மாற்றம் புதிய பயங்கரவாத தாக்குதல்களைத் தூண்டும் என்று எண்ணற்ற எச்சரிக்கைகள் வந்துள்ளன. ஐயத்திற்கு இடமின்றி, இவை அமெரிக்க இராணுவம் மற்றும் உளவுத்துறை எந்திரத்தின் கணக்கீடுகளுக்குள் காரணிகளாக இருந்து வருகின்றன, இவை எந்தவொரு புதிய பயங்கரவாத நடவடிக்கையையும் வெளிநாடுகள் மீது - குறிப்பாக ஈரானுக்கு எதிராக- போர் தொடுக்கவும் மற்றும் உள்நாட்டில் ஜனநாயக உரிமைகள் மீதான தாக்குதல்களைத் தீவிரப்படுத்தவும் சாக்குப்போக்காக பற்றிக்கொள்ளப்படும்.

நடைமுறையளவில் ஒவ்வொரு அரபு ஆட்சியும், அத்துடன் மேற்கு ஐரோப்பாவில் உள்ள வொஷிங்டனின் பெயரளவிற்கான கூட்டாளிகள் அனைத்தும் உள்ளடங்கலாக, ட்ரம்பின் உரை ஏறத்தாழ உலகெங்கிலும் இருந்து கண்டனங்களை எதிர்கொண்டது.

**ஐரோப்பிய முதலாளித்துவ வர்க்கம், வொஷிங்டனின் இந்த ஆத்திரமூட்டும் ஒருதலைப்பட்சமான நகர்வை, தங்களின் எல்லைகளுக்குள் முஸ்லிம் மக்களைக் கிளர்ந்தெழச் செய்து, அத்துடன் ஈரானின் ஆதாயமுள்ள முதலீடுகள் மற்றும் சந்தைகளை அணுகுவதைத் தடுக்கும் ஈரான்-விரோத கொள்கையை விரிவாக்கி, தனது நலன்களுக்கு குறுக்காக வெட்டுவதாக காண்கிறது. அதேநேரத்தில், ஐரோப்பிய ஆளும் வர்க்கங்கள் மத்திய கிழக்கிலும் ஏனைய இடங்களிலும் இராணுவ வழிவகைகள் உட்பட அவற்றின் சொந்த சுதந்திரமான வல்லரசு நலன்களைப் பின்தொடர்வதற்கு ட்ரம்பின் நகர்வை ஒரு நியாயப்பாடாக பயன்படுத்தும் என்பதை, குறிப்பாக ஜேர்மன் மற்றும் பிரெஞ்சு அரசாங்கங்களின் விடையிறுப்புகளில் இருந்து தெளிவாகிறது.**

அரபு ஆட்சிகளைப் பொறுத்த வரையில், போராட்டங்கள் முன்பினும் அதிகமாக போலித்தனமாக உள்ளன. சவுதி முடியாட்சி, தளபதி சிசி இன் எகிப்திய பொலிஸ் அரசு சர்வாதிகாரம், ஜோர்டானின் ஹஷெமியத் (Hashemite) முடியாட்சி மற்றும் மஹ்மத் அப்பாஸியின் பலஸ்தீன ஆணையம் (PA) ஆகிய அனைத்திற்கும், ஜெருசலேம் மீதான அமெரிக்க கொள்கை மாற்றம் குறித்து முன்கூட்டியே தெரிவிக்கப் பட்டிருந்தது.

ஜெருசலேம் மொத்தத்தையும் மற்றும் மேற்குக்கரை குடியமர்வுகள் மொத்தத்தையும் இஸ்ரேலிய கரங்களில் விட்டுக்கொடுத்து, பலஸ்தீன அகதிகளுக்கான திரும்பி வரும் உரிமையை மறுத்து, பலஸ்தீன 'அரசை' இஸ்ரேலிய கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் எல்லைகளைக் கொண்ட ஒன்றுக்கொன்று தொடர்பற்ற பன்துஸ்தான்களின் ஒரு துண்டு நிலப்பகுதியாக குறைக்கும் அமெரிக்க-இஸ்ரேலிய 'சமாதான' வரையறைகளை அவருக்கு கட்டளையிடவே, மகுடம் தரிக்க உள்ள சவுதியின் இரும்பு மனிதர் இளவரசர் மொஹம்மத் பின்-சல்மான், அப்பாஸ் ஐ கடந்த மாதம் அழைத்திருந்ததாக நம்பகமான அறிக்கைகள் தெரிவிக்கின்றன. ஒன்று இந்த பயங்கரத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் அல்லது 'நீக்கப்படுவார்', அதாவது அவரது பலஸ்தீன ஆணையம் சார்ந்திருக்கும் சவூதியின் பணம் வெட்டப்படுமென அப்பாஸுக்கு இறுதி எச்சரிக்கை விடுக்கப்பட்டன எனச் செய்திகள் குறிப்பிடுகின்றன.

(கேள்வி தொடரும்...)



தமிழர் நாடறிந்த இலக்கியச் செம்மல் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ்.
கம்பன் என்றால் ஜெயராஜ் என்று எண்ணுமளவுக்கு இலக்கியக் கம்பனாய் உருவெடுத்தவர் அவர்.
அவருடைய இலக்கிய அனுபவத் தொகுப்பு இங்கு தினசரி தொடராகப் பிரசுரமாகின்றது.
'உன்னைச் சரணடைந்தேன்' என்ற அவரது தொகுப்பில் 'யாழில் கம்பன்' பற்றிய தொடர் பதிவு இது.





# உன்னைச் சரணடைந்தேன்

## கம்பவாரிதி ஜெயராஜின் இலக்கிய அனுபவப் பகிர்வு 57

## ஊரெழுக் கம்பன் கழகம்

### ரகுபரன்

இவன் 1983 ஆம் ஆண்டளவில் கழகத்தோடு தொடர்பு கொண்டவன். கொக்குவிலைச் சேர்ந்தவன். எங்களைச் சந்தித்தபோது ஊரெழுவில் வசித்து வந்தான். வித்துவான் ஆறுமுகம் அவர்கள் நடத்திய பண்டித வகுப்பால், எம்மோடு இணைந்தான். கழகத் தொடர்பால் பின்னர் ஊரெழுவில் ஒரு கம்பன் கழகம், அமைத்து, இரண்டு விழாக்களை நடத்தினான். தமிழில் புலமை மிக்கவன். என்னை விட வயதிற் குறைந்த இவன், தமிழால் எனக்குத் தம்பியாகி, ஆரம்ப கால கழக முயற்சிகளில் பெரும் பங்காற்றினான். வைமன் ரோட்டிலும் பின்னர் கம்பன் கோட்டத்திலும் பல காலம் எங்களுடனேயே தங்கியிருந்தான். தமிழாசிரியர்களுக்கே உரியதான பெண்மை கலந்த மென்மையானவன். கழகத்தில் என்சமையல் முயற்சிக்குத்துணை செய்வான். அவனும் நன்றாகச் சமைப்பான். குமாரதாசனுக்கும் என் தங்கைக்கும் நடந்த திருமணத்திற்கு, இவன்தான் மாப்பிள்ளை தோழனாக இருந்தான். அந்தளவுக்கு எங்களோடு நெருங்கியிருந்தவன் இவன். 1995 இல் நாங்கள் கொழும்பிற்கு இடம் பெயர்ந்த பொழுது, இவனும் எங்களோடு கொழும்பு வந்தான்.

இடையில் நாங்கள் பட்ட பாடுகளையெல்லாம் சேர்ந்து அனுபவித்தான். கழகத்தோடு இணைந்திருந்ததால் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையால் முதலில் இனங்காணப்பட்டான். பின்னர் அதே காரணத்தால் நிராகரிக்கவும் பட்டான். இவனை உள்வாங்கியிருந்தால், யாழ். பல்கலைக்கழகம் பலம் பெற்றிருக்கும். சோம்பல் இவனது பெருங்குறைபாடு. எங்கள் கழகத்தில் பெரும் மதிப்புக்கொண்டிருந்த, அறிஞர் சோமசுந்தரத்தின் மகளைப் பின்னர் திருமணம் செய்தான். இவனது திருமணத்திற்கூட எனது பங்களிப்பு இருந்தது. பின்னர் தென்கிழக்குப் பல்கலைக்கழகம், இவனை விரிவுரையாளராய்த் தேர்ந்தெடுத்தது. எனக்கும் பல்கலைக்கழகங்களுக்கும் இடையிலான, பொருத்தமின்மையோ என்னவோ, விரிவுரையாளரான பின்பு இவனது போக்கில் சில மாற்றங்கள்.

* * *

### ரகுபரனின் தூய தொண்டு

எங்களோடு ஒன்றாய் இருக்கையில் தன் உயிர் பற்றியும் அக்கறையில்லாமல் எமக்குத் துணை செய்தவன் இவன். கழகத்தை குடும்பமாய் நினைத்துக் காத்தவன். தன் நட்பு வட்டாரத்தைக் கழகப் பணியில்




ரகுபரன், சுப்பிரமணிய ஐயர், புலவர், சிவத்தமிழ்ச் செல்வி, முரசொலி சிவராஜா

சுப்பிரமணிய ஐயர், தமிழருவி, சண்முகதாஸ், முருகையன், புலவர், சோ.ப.

பட்டி மண்டபம் வேதநாதன், சிவலிங்கராஜா, நாகேஸ்வரன், புலவர், கல்வயல், திருநந்தகுமார், சிவகுமார்

ஈடுபட வைத்தவன். எனக்கு நிகழ்ந்த அவமரியாதையை, தனக்கு நிகழ்ந்த தாய்க் கருதியவன். தான், தன் குடும்பம் என்ற வட்டங்களைக் கடந்து, அறிவுலகத்திற்கும் சமூகத்திற்குமாகப் பாடுபடும் மனநிலையுடையவன். நாம் கொழும்பு வந்த பிறகு, மயூராபதி அம்மன் ஆலயத்திற்கென ஒரு நூலைத் தயாரித்தோம்.

அப்போது இவனது மனைவி கடுமையான சுகவீனமுற்று வைத்திய சாலையில், 'ஐ.சி.யூ.'வில் அனுமதிக்கப்பட்டிருந்தாள். அதுபற்றிக் கவலைப்படாமல் அப்போதும் எங்களோடு உடனிருந்து, அந்நூல் முயற்சிக்காய் இவன் பாடுபட்டான். கழகத்தில் பின்னர் வந்து இணைந்த இளைஞர்களிடம், இத்தகு மனநிலை பெரும்பாலும் இருக்கவில்லை. வீட்டில் ஒரு சிறு பிரச்சினை என்றாலும், அவர்களில் பலபேர் கழக வேலையை மறந்து விடுகிறார்கள். சுயநலம் கடந்து, ஆரம்பகாலத்தில் ரகுபரன் செய்த பணிகளை என்னால் மறக்க முடியாது. எங்களது ஆரம்ப காலப் பதிப்பு முயற்சிகள் அனைத்தும், இவனது கைவண்ணத்தாலேயே மிளிர்ந்தன. சுயமுயற்சி அதிகம் இல்லாத இவனை, அறிவுலகில் அடையாளப்படுத்தவும் தகுதிப்படுத்தவும், நான் பெருமுயற்சி செய்திருக்கிறேன்.

* * *

### மனதை வருத்திய பொய்மை

ரகுபரன் மரபு வழியைச் சார்ந்தவன் என்பதாலும், நவீனத்தில் ஈடுபாடு இல்லாதவன் என்பதாலும், கழகத்தோடு தொடர்புபட்டிருந்ததாலும், தொடக்க காலத்தில் இவனை பேராசிரியர் சிவத்தம்பி போன்றோர், அங்கீகரிக்க விரும்பவில்லை. பிற்காலத்திலும் அங்கீகரித்தார்களா தெரியவில்லை. இவனுக்கும் அவர்களது போக்கு அதிகம் பிடிக்காது. எங்களோடு சேர்ந்து இருக்கையில் அவர்களை விமர்சிப்பான். பல்கலைக் கழகத்தில் அவர்கள் செய்யும் தவறுகளை, எங்களோடு பகிர்ந்து கொள்வான். பின்னாளில் எங்களோடு முரண்பட்ட பிறகு, கழகத்துடன் முரண்பட்ட அத்தகுதியை வைத்தே அவர்களது ஆதரவைப் பெற்றான்.

பேராசிரியர் சிவத்தம்பியின் நினைவு மலரில், இவன் எழுதிய கட்டுரையில் வந்த ஒரு செய்தி, என்னைப் பெருங் கவலையில் ஆழ்த்திற்று. அக்கட்டுரையில், ரகுபரன் பேராசிரியரை மிகவும் புகழ்ந்து பாராட்டி எழுதியுள்ளான். பேராசிரியர் பாராட்டுக்குரியவர் என்பதில் எனக்கு எந்த மறுப்புமில்லை. ஆனால், ரகுபரன் எங்களோடு நெருக்கமாக இருந்த காலத்தில், பேராசிரியரின் இந்த நல்ல பக்கங்கள் பற்றி எம்மோடு பேசியதேயில்லை. இன்னும் சொல்லப் போனால் அவர்தம் குறைகளையே அவன் பெரும்பாலும் எம்மோடு கலந்து கொண்டிருக்கிறான். பேராசிரியரைப் பற்றி மனதில் இத்தனை மதிப்பை வைத்துக் கொண்டு, ரகுபரன் எம்மோடு அவரை குறைகூறி நடந்து கொண்டது, எம்மைத் திருப்திப்படுத்துவதற்காகவா? அங்ஙனம் எங்களைத் திருப்திப்படுத்த தேவை என்ன? அதே கட்டுரையில், "பேராசிரியர் கம்பன் கழகத்தை மறைமுகமாகத்தாக்கவும் செய்தார். இவ்வாறான இரு திறத்தாரும் ஒருவரையொருவர் தக்கும் செயற் பாடு, இடையிடையே நிகழ்ந்தே வந்தது. அதனால் பேராசிரியருக்கு என்னிடம் அதிகம் உவப் பில்லை. அது போலவே கம்பன் கழகத்தார்க்கும் என்னிலே உவப்பில்லை. ஆனால், யாரையும் யாரிடத்தும், நான் என்றும் அநியாயத்திற்கு விட்டுக் கொடுத்ததில்லை." என்று ரகுபரன் எழுதியிருக்கிறான். இச்செய்தியிலிருக்கும் பொய்மை கண்டு மனம் வருந்தினேன். ஒருநாள் கூட நானோ என்னைச் சார்ந்தவர்களோ, பேராசிரியரோடு ரகுபரன் இணைந்து நடப்பது பற்றி விமர்சித்ததில்லை. ஆனால், பேராசிரியருடனான தொடர்பில், கழகம் வருந்தியதாய் இவன் பொய்மையாக எழுதியிருப்பது, மிக வஞ்சனையான விடயம் என்றே கருதுகிறேன். பல்கலைக்கழகத்தாரை திருப்திப்படுத்தவும், தன்னை ஒரு நடுநிலையாளனாய்க் காட்டவும், எங்கள் மேல் பழி சுமத்திய அவனது போக்கு, என்னை மிகவும் வெறுப்புக்காளாக்கியது. அதுமட்டும் அல்லாமல் ரகுபரன் எழுதிய, "**ஆனால் யாரையும் யாரிடத்தும், நான் என்றும் அநியாயத்திற்கு விட்டுக் கொடுத்ததில்லை**" என்னும் கூற்றும் எனக்கு நகைப்பைத் தந்தது. பேராசிரியரைப் பற்றி எங்களுடனான அவனது உரையாடல், எப்படி இருந்தது என்பது பற்றி அவன் மனச்சாட்சிக்குத் தெரியும். அவனது கல்வி முயற்சியில் நான் எடுத்துக் கொண்ட அக்கறை பற்றி, நான் எழுதினால் அது அவனைச் சங்கடத்திற்கு ஆளாக்கும் என்பதால், அதனைத் தவிர்க்கிறேன்.

* * * (தொடரும்...)

# மஹிந்த ராஜபக்ஷவின் சூளுரைகளை பெரிதாக கண்டுகொள்ள தேவையில்லை



அமைச்சர் ராஜித சேனாரட்ன கூறுகிறார்

கொழும்பு, ஜன. 05

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சூளுரைகளைப் பெரிதாகக் கண்டுகொள்ள வேண்டிய அவசியமில்லை என அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

2017ஆம் ஆண்டில் இந்த அரசாங்கத்தைக் கவிழ்ப்பதாக மஹிந்த ராஜபக்ஷ சூளுரைத்திருந்தார்.

எனினும், 2018ஆம் ஆண்டு மலர்ந்து சில நாள்கள் கழிந்துள்ளமையை மஹிந்த மறந்துவிட்டார்.

வெளிநாட்டு ஊடகவியலாளர்களிடம் கடந்த 2016 ஆம் ஆண்டு மஹிந்த, அரசைக் கவிழ்ப்பதாகக் கூறியிருந்தார்.

இந்த அறிவிப்பு 2016ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 30 ஆம் திகதி தேசிய பத்திரிகையொன்றிலும் பிரதான தலைப்பாக வெளியிடப்பட்டிருந்தது.

எனினும், 2017ஆம் ஆண்டு முடிவடைந்துள்ளது, மஹிந்த ஆட்சி அமைப்பதற்கு மறந்துவிட்டார்.

மஹிந்த, அரசைக் கவிழ்ப்பதாகச் சூளுரைத்தாலும் அவரினால் எதுவும் செய்ய முடியவில்லை, கடந்த ஆண்டில் அவர் எதனையும் செய்யவில்லை.

அவர் எந்தநாளும் சொல்வது ஒன்றைத்தான், தற்பொழுது உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலும் இதனையே கூறுகின்றார்.

பொய்யான பிரசாரங்களைச் செய்து மக்களை அவர் பிழையாக வழிநடத்துகின்றார்.

கூட்டு எதிர்க்கட்சி வேட்பாளர் ஒருவர் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக அச்சிட்டுள்ள பிரசாரக் கையேட்டில், மஹிந்தவைப் பிரதமராக்கும் போராட்டத்தை ஆரம்பிப்போம் என எழுதப்பட்டுள்ளது.

இதனை அச்சிட்டவருக்கு உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் பிரதமரைத் தெரிவு செய்ய முடியாது என்பது கூடத் தெரியவில்லை.

மஹிந்தவின் படத்தைப் பயன்படுத்துவதால் யாருக்கும் நன்மையில்லை, அவர் தற்பொழுது ஓய்வுபெற்றுக் கொண்டுள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (க)

## 100 சதொச நிலையங்கள் திறப்பதற்கு ஏற்பாடு

கொழும்பு, ஜன. 05

நாடு முழுவதும் 100 சதொச நிலையங்களை இந்த வருடத்துக்குள் திறக்கத் தீர்மானித்துள்ளோம் என வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.




அதில் 25 நிலையங்கள் நவீன மெகா விற்பனை நிலையங்களாக ஆரம்பிக்கப்படவுள்ளன என அமைச்சர் ரிஷாத் பதியூதீன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது இலங்கை முழுவதும் 400 சதொச நிலையங்கள் காணப்படுகின்றன. கடந்த வாரம் 28 விற்பனை நிலையங்கள் புதிதாக திறக்கப்பட்டுள்ளன.

அத்துடன், இந்த வருடத்துக்குள் நடமாடும் வர்த்தக நிலையங்களை 100 வரை அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)

## மாணவருக்கு டிஜிட்டல் தொழில்நுட்பம்; அரசால் உத்தேச வேலைத்திட்டம் ஆரம்பம்

பாடசாலை மாணவர்களுக்கு டிஜிட்டல் தொழில்நுட்பத்தைக் கற்பதற்கும் பரீட்சித்துப் பார்ப்பதற்குமான சந்தர்ப்பத்தை வழங்குவதற்குமான உத்தேசத் திட்டமொன்றை அரசு நடைமுறைப் படுத்தவுள்ளது.



11 வயது முதல் 12 வயது வரையிலான பாடசாலை மாணவர்களுக்கு டிஜிட்டல் தொழில் நுட்பத்தைக் கற்பிப்பதற்கும் பரீட்சித்து பார்ப்பதற்குமான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் 100 பாடசாலைகளில் தேவையான மென்பொருள்கள் மற்றும் தேவையான பயிற்சிகளை வழங்குவதற்கான திட்டத்தை முன்னெடுப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதன்கீழ் தெரிவு செய்யப்பட்ட 100 பாடசாலைகளுக்கு பிபிசி மைக்ரோ பிற் உபகரணம் 4, 20 கணினிகள் வீதம் மேலும் சில உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன.

இந்தத் திட்டத்திற்குத் தேவையான பயிற்சி உள்ளிட்டவற்றை வழங்குவதற்கான ஒப்பந்தம் இதுதொடர்பான குழுவின் சிபார்சுக்கு உட்பட்ட அமைச்சால் 9 கோடியே 90 லட்சத்து 21 ஆயிரம் ரூபா ஓறல் கோப்பரேசன் நிறுவனத்துக்கு நேரடியான ஒப்பந்தம் மூலம் வழங்கப்படவுள்ளது.

இதுதொடர்பில் தொலைத்தொடர்பு டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ முன்வைத்த யோசனைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## பொலிஸாரை அச்சுறுத்திய இராஜாங்க அமைச்சர்!

கொழும்பு, ஜன. 05

பாதுகாப்புத் தலைக்கவசம் அணியாமல் மோட்டார் சைக்கிளை செலுத்திய நபருக்கு அபராதத் தொகை விதித்த காலி நாகொட பொலிஸ் அதிகாரிகளை காலி மாவட்ட இராஜாங்க அமைச்சர் ஒருவர் கடுமையாகத் திட்டியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.




கடந்த முதலாம் திகதி தனது மெய்ப் பாதுகாவலர்களுடன் ஜீப்பில் வந்த இராஜாங்க அமைச்சர் நாகொட பொலிஸ் நிலையத்தில் கடமையில் இருந்த அதிகாரிகளைத் திட்டியுள்ளார்.

பொலிஸாரால் அபராதத் தொகை விதிக்கப்பட்ட நபர் தன்னுடைய ஆதரவாளர் என்றும், தன்னுடைய கூட்டம் ஒன்றுக்கு வரும்போதே பொலிஸார் அவருக்கு அபராதத் தொகையை விதித்தனர் எனவும், இனிமேல் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் என்றும் இராஜாங்க அமைச்சர் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## உள்ளூராட்சிமன்றத் தேர்தல் குறித்து இதுவரையிலும் 75 முறைப்பாடுகள்

கொழும்பு, ஜன. 05

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பில், டிசெம்பர் மாதம் 9ஆம் திகதி முதல் நேற்றுமுன்தினம் வரையிலும் 75 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதில், தேர்தல்கள் முறைப்பாடுகள் 51 உம், தேர்தல்கள் சட்ட திட்டங்களை மீறியமை தொடர்பிலான முறைப்பாடுகள் 24 உம் அடங்குகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தேர்தல் சட்ட விதிமுறைகள் மீறல் மற்றும் தேர்தல் வன்முறைகள் தொடர்பில், தங்களுக்கு, இதுவரை 57 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என கபே அமைப்பு நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.

அரச சொத்து துஷ்பிரயோகம் மற்றும் அரச ஊழியர்கள் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்டமை தொடர்பில்




17 முறைப்பாடுகளும் சட்ட விரோதமான தேர்தல் பிரசாரம் தொடர்பில் 30 முறைப்பாடுகளும், கட்டங்கள், காரியாலயங்கள் சேதப்படுத்தல் தொடர்பில் ஒரு முறைப்பாடும், தாக்குதல் மற்றும் அச்சுறுத்தல் தொடர்பில் 9 முறைப்பாடுகளுமே கிடைத்துள்ளன என, கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்தார்.


நடைபெறவிருக்கும் தேர்தலில் போட்டியிடுகின்ற பெண் வேட்பாளர்கள் உரிய முறையில் தேர்தல் பணிகளில் ஈடுபடுவதற்கான வாய்ப்பை அதே கட்சியில் இருக்கும் வேட்பாளர்களால் வழங்கப்படுவதில்லை. மேலும், இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களுக்குப் புதிய தேர்தல் சட்டம் தொடர்பில் தெளிவின்மை காணப்படுகின்றது.

இதனால், தேர்தல்கள் தொடர்பிலான தெளிவுபடுத்தும் நடவடிக்கையை, கபே அமைப்பு நாடளாவிய ரீதியில் முன்னெடுத்து வருகின்றது.

அதனடிப்படையில், கல்முனை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில், இந்தத் தெளிவூட்டல் கருத்தரங்குகள் இதனடிப்படையில் இன்றும் நடத்தப்படவுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

8. சூரிய நமஸ்காரப் பயிற்சியின் இரண்டாவது கட்டம்

1)  2)  3)  4) 

9.  **அருகிலுள்ள படம் சூரிய நமஸ்காரப் பயிற்சியின் எத்தனையாவது கட்டம்**
1. நான்காவது 2.ஒன்பதாவது 3.எட்டாவது 4. ஏழாவது

10.     **இந்த முகங்கள் காட்டும் உணர்வுகளின் சரியான ஒழுங்கு**
1. துக்கம், பயம் , மகிழ்ச்சி, கோபம் 3. மகிழ்ச்சி, கோபம், துக்கம் , பயம்
2. கோபம், பயம் , துக்கம் , மகிழ்ச்சி 4. பயம் , கோபம் , மகிழ்ச்சி, துக்கம்

11. சிறுவர்களுக்கு உடல் ரீதியாகவோ உளரீதியாகவோதுன்பம் விளைவிப்போர் பற்றி அறிவிக்கவேண்டிய தொலைபேசி இலக்கம் எது
1) 119 2) 1929 3) 457 4) 1401

12. கடமைகளை நிறைவேற்ற எனது மனதில் தோன்றிய ஆர்வம் எனது நண்பர்களின் மனதிலும் தோன்றட்டும். இக் கூற்றானது காணப்படுவது மனதை ஒருமுகப்படுத்தும் படிகளில்
1) மலர்வு 2)மனவுறுதி 3)மனதைத்தளர்த்தல் 4) உடலைத் தளர்த்தல்

13. பாதையோரம் காணப்பட்ட பொதியொன்று தொடர்பாக உடனடியாக தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்.
1) 118 2) 119 3)1919 4) 1929

14. பாதையொன்றினைக் கடக்கும் பாதசாரிகள் எதனூடாகச் செல்லவேண்டும்?
1) பாதையின் குறுக்காக 2) முறிகோடுகள் வழியே
3)மஞ்சள் கோட்டின் வழியே 4) பொலிசார் இல்லாவிட்டால் எந்தப் பக்கமும் போகலாம்

15. பின்வரும் எந்தச் செயற்பாட்டில் உங்களுக்கு விருப்பமில்லை
1)தைப்பொங்கலுக்குப் புதிய ஆடைகிடைத்தல் 2) பரீட்சையில் கூடுதல் புள்ளிபெறுதல்
3) ஆசிரியர் அடித்தல் 4)எல்லோரும் என்னைப் பாராட்டுதல்

16. மாணவர்களாகிய உங்கள் கடமை
1) சுயநலத்துடன் வாழுதல் 2) காடுகளை அழித்தல்
3. பாடசாலை சொத்தை பாதுகாத்தல் 4) சுயதொழில் செய்தல்

17.பிழையான கூற்றைத் தெரிவு செய்க
1) தியானம் செய்வதன் சிறப்பான உளத்தைப் பெறலாம்
2) சூரிய நமஸ்காரம் மூலம் சீரான குருதிச்சுற்றோட்டம் கிடைக்கும்
3) வீதி விதிகளைப் பின்பற்றினால் விபத்து நிகழும்
4) பாடசாலைக் கீதத்தின்போது அமைதியாக நிற்றல்

18.சூரிய ஒளி மூலம் உடலுக்குக் கிடைக்கும் விற்றமின்
1)விற்றமின் A 2)விற்றமின் C 3)விற்றமின் E 4)விற்றமின் D

19. சுற்றாடலைத் துப்புரவாக வைத்திருப்பதன் மூலம் கிடைக்கும் நன்மை
1) தொற்றுநோய்கள் பரவும் 2) நுளம்பு பெருகும்
3) நுளம்புகளின் பெருக்கத்தை ஒழிக்கலாம் 4) அழகில்லாது இருக்கும்

20.ஒரே வேலையைச் செய்து முடிப்பதற்கு பின்வரும் எந்தவழி சிறந்தது
1) தனியே ஒருவர் சிரமத்துடன் செய்தல்
2) ஒழுங்குபடுத்தலில்லாது ஒரே குழுவினர் செய்தல்
3) சரியான திட்டமிடலும் குழுவாகச் சேர்ந்து செய்தல்
4) நேரம் வரும்போது செய்யலாம் எனக் காலம் தாழ்த்துதல்



# கல்விக் கதிர் வெளியீடு

## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்

....... பகுதி I வினாத்தாள் 1

01.பின்வரும் பாடல்களை வாசித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் பாடலிலிருந்து தெரிந்து எடுத்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

| | |
|---|---|
| அல்லும் பகலும் நல்ல | கன்றை நினைத்தே உள்ளம் |
| ஆர்வத்தோடு நீங்கள் | கசியும் பசுவைப் போல |
| கல்வி கற்று நன்மை | நன்றி புரிந்தோர் தம்மை |
| கருதி வாழ வேண்டும். | நாமும் நினைக்க வேண்டும் |

1) பாடலில் வந்துள்ள இணைமொழி எது? ................................................

2) நன்றி புரிந்தோரை எதற்கு ஒப்பிடப்படுகின்றது? ................................................

3) கல்வியை எவ்வாறு கற்க வேண்டும்? ................................................

4) உபகாரம் என்பதன் ஒத்த கருத்துச் சொல்லை எழுதுக? ................................................

5) தீமை என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக? ................................................

6) மனமிரங்கும் என்பதை உணர்த்தும் சொற்றொடர் யாது? ................................................

**2.**கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லின் கீழ்க் கோடிடுக

1.இரவு பெய்த மழையினால் மலையிலிருந்து உருண்டு வந்த.............................(பாறை பாரை) பாதையின் குறுக்கே கிடக்கிறது.

2.பெரியோரைக்........................... (கனம் கணம்) செய்ய வேண்டும்

**3.**கீழே தரப்பட்டுள்ள சொற்றொடர்களுக்குரிய தனிச்சொல்லைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக

1.ஒருவர் ஒருபொருள் தன்னுடைய கதையைத் தானே கூறுவது ................................................

2.தாய் தந்தையரைக் குறிக்கும் தனிச்சொல் ................................................

**4.** தொடக்கத்தில் தரப்பட்டுள்ள சொல்லின் ஒத்த கருத்துச் சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
1. ஆர்வம்:- ஆரம்பம், விருப்பம், பாராட்டு, திறமை
2. தருமம்:- மறம், அதர்மம், அறம், செயல்
3. கல்வி:- பெறுபேறு, வித்தை, பாடசாலை, வினா
4. உலகம்:- பிரதேசம், மாவட்டம், ஞாலம், ஆகாயம்

5. வினாக்களுக்குச் சரியான விடையின் கீழ் கீறுக
1. **இரட்டைக்கொம்பு** இந்த உயிர்க்குறியைக் கொண்ட சொல்லின் கீழ்க் கோடிடுக.
(மலைவேம்பு, வையகம், நூலகம், கரப்பந்தாட்டம்)
2. ை இவ்வுயிர்க்குறியின் பெயர்
(அரவு, இரட்டைக்கொம்பு, சங்கிலிக்கொம்பு, விசிறி)

6. ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக

1.பணியாகக் ஒரு செய்தலை சேவை தெய்வீகப் சமூக கொண்டிருந்தார்.

.................................................................................................

2. தை கொண்டாடுவர் தமிழர்கள் தைப்பொங்கலைக் நாளில் முதல்

.................................................................................................

7.பின்வரும் வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்திற்கு மாற்றி ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

1. புத்தாண்டு வாழ்த்துக்கள் ................................................


8.பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தை தமிழில் எழுதுக

1) May I come in? ................................................

2) Be Quiet ................................................

9.ஒவ்வொரு படத்திற்குப் பொருத்தமான ஆங்கிலப் பெயரை ஆங்கில எழுத்துகளிலே எழுதுக.

1.  ........................................

2.  ........................................

10.பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

1. பாடம் சொல்லித் தாருங்கள் ................................................

11. பின்வரும் வாக்கியத்தின் கருத்தைத் தமிழில் எழுதுக.

1. பொத்த தென்ன ................................................

12. பின்வரும் தலைப்பின் கீழ் ஒரு வாக்கியத்தில் ஐந்து சொற்களுக்குமேல் இருக்கத்தக்கவாறு மூன்று வாக்கியங்களை சரியான எழுவாய் பயனிலைகளுடன் எழுதுக.

**எனது பாடசாலை**

1. ........................................................................................................
........................................................................................................

2. ........................................................................................................
........................................................................................................

3. ........................................................................................................
........................................................................................................

**13. பின்வரும் வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.**

| 6473 |
|---|

01)இந்த எண்ணில் ஒன்றிடத்துள்ள இலக்கம் எது? ................................

02)இலக்கம் 4 குறிக்கும் பெறுமானம் யாது? ................................

03) இலக்கம் 6 இடப்பெறுமானம் எது? ................................

04)இலக்கம் 7 குறிக்கும் பெறுமதி யாது? ................................

05) இவ்வெண்ணைச் சொற்களில் எழுதுக? ................................................




பின்வரும் எண்களை இறங்கு வரிசையில் எழுதுக

06) 5056 4056 9054 4507 :- ................................................


விரித்தெழுதிய எண்களைப் பெறுமான அடிப்படையில் சேர்த்தெழுதுக

07) 6000 700 2 90 ................................................



**08) இத்திண்ம உருவின் பெயர் யாது? (..................................)**

**09) இதன் விளிம்புகளின் எண்ணிக்கை யாது?(..................................)**



**10) நிழற்றப்படாத பகுதியைப் பின்னத்தில் எழுதுக?**

**(...........................)**

11) வெற்றிடங்களை நிரப்புக

| | | |
|---|---|---|
| 1kg 750g | | |
| 4kg 750g | + | |
| kg | g | |

12) ஒரு கூடையில் 2485 பழங்களும் இன்னொரு கூடையில் 6987 பழங்களும் இருந்தன எனின் இரு கூடைகளிலுமுள்ள பழங்களும் எத்தனை?

(..................................)

13) 100g கரட் 35 ரூபாய் எனின் 150g கரட்டின் விலை யாது?

(..................................)

14) 420 மாம்பழங்கள் நான்கு பெட்டிகளில் சமமாக அடுக்கப்பட்டன. ஒரு பெட்டியில் உள்ள மாம்பழங் களின் எண்ணிக்கை யாது?

(..................................)

15) ஒரு போத்தலில் 1 *l* 400 *ml* நீர் கொள்ளும் அதில் இப்போது 800 அட நீர் உண்டு போத்தல் முழுவதும் நிரம்ப எவ்வளவு நீர் தேவை?

(.................................. *ml*)

14.பின்வரும் வினாக்களிற்குரிய விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கீறுக

**1.** சூரிய நமஸ்காரம் செய்யப் பொருத்தமான நேரம்
1)இரவு 2) மதியம் 3)காலை 4) நள்ளிரவு

2.பின்வருவனவற்றில் எது பயத்தின் வெளிப்பாடு
1) கண்கள் சிவந்து காணப்படல் 3) ஒதுங்கியிருத்தல்
2) உடல் நடுங்கி வியர்வை உண்டாகும். 4) துள்ளிக்குதித்தல்

3. இலங்கைத் தேசியக் கொடியில் தமிழ் மக்களைக் குறித்து நிற்பது,
1) செம்மஞ்சள் நிறப் பகுதி 2) செந்நிறப் பகுதி
3) பச்சை நிறப் பகுதி 4) மஞ்சள் நிறப் பகுதி

4. பாதசாரிகள் எப்பொழுதும் பாதையில் செல்லும் போது பயணம் செய்ய வேண்டிய பக்கம்
1) எந்தப்பக்கம் வேண்டுமானாலும் செல்லலாம் 3) இடது பக்கம் செல்லலாம்
2) வலது பக்கம் செல்லலாம் 4) பாதையின் நடுவில் செல்லலாம்

5.பின்வருவனவற்றில் எது சிறுவர் உரிமை மீறலாகும்.
1) பாடசாலை சென்று கல்வி கற்றல் 2) வேலைக்குச் செல்லுதலும் சிறுவயதில் உழைத்தலும்
3) பெற்றோருடன் சேர்ந்து வாழ்தல் 4) தனது கருத்துக்களை வெளியிடும் உரித்துடைய நிலை

6. நல்வாழ்வு வாழத்தேவையற்ற ஒரு விடயம்
1)ஓய்வு 2)தியானம் 3)பொறாமை 4)தூயகாற்று

7. சர்வதேச சிறுவர் தினம்
1)ஒக்டோபர்1 2) நவம்பர்1 3) டிசெம்பர்10 4)டிசெம்பர் 25

# பருவநிலை மாற்றங்களால் 'சொக்லேட்' அழிந்து விடும்



பருவநிலை மாற்றங்களால் அடுத்த 30 ஆண்டுகளில் சொக்லேட் முற்றிலுமாக அழிந்து விடும் அபாயம் உள்ளது என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கொக்கோ மரங்கள் ஆபிரிக்க நாடுகளில் அதிக அளவு காணப்படுகின்றன. உலகில் 50 வீதம் சொக்லேட் இங்கிருந்து தான் பெறப்படுகின்றன. ஐவரிகோஸ்ட் மற்றும் கானா ஆகிய இரு ஆபிரிக்க நாடுகளில் கொக்கோ மரங்கள் அதிக அளவில் உள்ளன.

இந்த நிலையில், அமெரிக்காவின் தேசிய கடல் மற்றும் வளிமண்டல ஆராய்ச்சி நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்தி அனைவரிடமும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. 'உலகின் வெப்பநிலை அதிகரித்துக் கொண்டே செல்கிறது. அடுத்த 30 ஆண்டுகளில் 2.1 செல்சியஸ் வெப்பநிலை கூடும். இதனால் சொக்லேட் உற்பத்தி அதிக அளவு பாதிக்கப்படும். கொக்கோ மரங்கள் வளர்வதற்கு அதிகப்படியான மழைதேவை' எனத் தெரிவித்துள்ளது.

மற்ற மரங்களைப் போல கொக்கோ மரங்களைப் புதிய தொழில்நுட்பங்களின் மூலம் உருவாக்க முடியாது. 90 வீத கொக்கோ மரங்கள் சிறிய அளவிலான பண்ணைகள் மூலமாக உற்பத்தி செய்யப்படுகின்றன. மழையின் அளவு குறைவதால் கொக்கோ மரங்களின் வளர்ச்சி குறைந்து கொண்டே செல்கிறது. இதனால் ஆண்டுக்கு ஒரு லட்சம் தொன் சொக்லேட் பற்றாக்குறை ஏற்படுகிற வாய்ப்பு உள்ளது என ஆராய்ச்சியாளர் டங் ஹாகிங்ஸ் தெரிவித்தார்.

பருவ மாற்றங்களால் பல்வேறு மரங்கள் அழிந்துள்ளன. அந்த வரிசையில் கொக்கோ மரங்களும் இடம் பெற உள்ளமை அனைவரிடமும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

(ப)

# நைஜீரியா மசூதியில் தற்கொலைத் தாக்கு



11 பேர் சாவு

கமரூன், ஜன.05

வடகிழக்கு நைஜீரியாவின் போர்னோ மாநிலத்தில் உள்ள மசூதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற தற்கொலைப் படைத் தாக்குதலில் 11 பேர் உடல் சிதறி உயிரிழந்தனர்.

கமரூன் நாட்டு எல்லையோரம் அமைந்துள்ள வடகிழக்கு நைஜீரியாவின் போர்னோ மாநிலத்தில் கம்போரு பகுதியில் அமைந்துள்ள மசூதியில் நேற்றுமுன்தினம் அதிகாலை தொழுகை நடைபெற்றது.

அப்போது அங்கு நுழைந்த தற்கொலைப்படைத் தீவிரவாதி ஒருவன், தான் கட்டியிருந்த வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்தான். இந்தத் தாக்குதலில் மசூதியில் தொழுகையில் ஈடுபட்டிருந்த 11 பேர் கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதலில் மசூதிக் கட்டடம் முழுவதும் எரிந்து சேதமானது. மசூதிக்கு அருகில் உள்ள சில கட்டடங்களில் விரிசல்கள் ஏற்பட்டன.

இந்தத் தற்கொலைப்படைத் தாக்குதலுக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.

கடந்த நவம்பரில் மசூதியில் தற்கொலைப்படைத் தீவிரவாதிகள் நடத்திய வெடிகுண்டுத் தாக்குதலில் 50இற்கும் மேற்பட்டோர் பலியாகியமை குறிப்பிடத்தக்கது.

(ப)

# கடற்படை ஏவுகணையை பரிசோதித்தது பாகிஸ்தான்



தரை மற்றும் ஆகாய மார்க்கமாகச் சென்று தாக்கும் கடற்படை ஏவுகணையை நேற்று வெற்றிகரமாகப் பரிசோதித்துள்ளோம் எனப் பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

ஹார்பா என்று பெயரிடப்பட்ட இந்த ஏவுகணை, பாகிஸ்தான் கடற்படைக்குச் சொந்தமான பி.என்.எஸ். ஹிம்மத் என்ற போர் கப்பலில் இருந்து ஏவப்பட்டது எனப் பாகிஸ்தான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடற்படைத் தளபதி ஸாபர் மஹ்மூத் அப்பாசி முன்னிலையில் ஏவப்பட்ட இந்த ஏவுகணை, நிர்ணயிக்கப்பட்ட இலக்கை வெற்றிகரமாகத் தாக்கி அழித்துள்ளது எனவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஏவுகணை எந்தப் பகுதியில் இருந்து ஏவப்பட்டது? எவ்வளவு தூரம் பறந்து சென்று தாக்கியது? என்ற விவரங்கள் ஏதும் வெளியாகவில்லை.

# பயங்கரவாத ஒழிப்பில் இரட்டை வேடம்: பாக். மீது அமெரிக்கா கடும் குற்றச்சாட்டு



வொஷிங்டன், ஜன.05

பயங்கரவாத ஒழிப்பில் பாகிஸ்தான் இரட்டை வேடம் போடுகிறது என அமெரிக்கா கடுமையாகக் குற்றஞ்சாட்டியுள்ளது.

பயங்கரவாதத்துக்கு எதிரான உலகளாவிய போரில் அமெரிக்காவின் கூட்டாளி நாடாகப் பாகிஸ்தான் இருந்து வருகிறது.

இதன் காரணமாக பயங்கரவாத ஒழிப்புக்காக பாகிஸ்தானுக்கு அமெரிக்கா ஆண்டுதோறும் பெரும் நிதியுதவி அளித்து வருகிறது. ஆனால் பாகிஸ்தான், தன் மண்ணில் இருந்து கொண்டு எல்லை தாண்டிய பயங்கரவாதத்தில் ஈடுபட்டு வருகின்ற ஹக்கானி வலைச்சமூகம், பாகிஸ்தான் தலிபான், அல்கொய்தா உள்ளிட்ட பல்வேறு பயங்கரவாத இயக்கங்களுக்கு ஆதரவு அளித்துவருகிறது.

இதன் காரணமாக அந்த நாட்டுக்கு வழங்குவதாக இருந்த 25 கோடியே 50 லட்சம் டொலர் நிதியுதவியை அமெரிக்கா நிறுத்தியது.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் இந்த முடிவை ஐ.நா. சபைக்கான அமெரிக்கத் தூதர் நிக்கி ஹலி நியாயப்படுத்தினார். இது தொடர்பாக அவர் நியூயோர்க் நகரில் ஐ.நா. தலைமையகத்தில் கூறியவை வருமாறு:-

பாகிஸ்தானுக்கு இராணுவ நிதியுதவி 25 கோடியே 50 லட்சம் டொலர் வழங்குவதை நிறுத்தியதற்கு அமெரிக்காவிடம் தெளிவான காரணம் உள்ளது. பாகிஸ்தான் பல்லாண்டு காலமாகப் பயங்கர வாத ஒழிப்பில் இரட்டை வேடம் போட்டு வருகிறது.

அவர்கள் எப்போதாவது எங்களுடன் இணைந்து செயற்படுகிறார்கள். அத்துடன், ஆப்கானிஸ்தானில் உள்ள எங்கள் படையினரைத் தாக்குகிற பயங்கரவாதிகளுக்கும் அடைக்கலம் தருகிறார்கள். இந்த ஆட்டத்தை ஏற்றுக் கொள்ள முடியாது.

பாகிஸ்தான் தொடர்ந்து பயங்கரவாதிகளுக்கு அடைக்கலம் தந்து கொண்டிருப்பதுடன், பயங்கரவாதத்துக்கு ஆதரவும் அளித்துக் கொண்டிருக்கிறது. இதனால், பாகிஸ்தானுக்கான எல்லா நிதி உதவிகளையும் நிறுத்த வேண்டும் என்று ஜனாதிபதி ட்ரம்ப் விரும்புகிறார் என்று தெரிவித்துள்ளார்.

(ப)

# நிலவின் மறுபக்கத்தை ஆய்வு செய்யத் தயாராகிறது சீனா

நிலவின் மற்றொரு பக்கம் தொடர்பாக ஆய்வு செய்ய புதிய நிலவு ஆய்வு உலவியான (லூனார் ரோவரை) இந்த ஆண்டு ஜுன் மாதம் அனுப்ப உள்ளோம் எனச் சீனா அறிவித்துள்ளது.

விண்வெளி ஆராய்ச்சியில் சீனா தொடர்ந்து பல சாதனைகளைப் புரிந்து வருகிறது. நிலா தொடர்பான ஆய்வில் சீனாவின் பங்கு முக்கியமானதாகும். கடந்த 2013 ஆம் ஆண்டு சேஞ்ச் -3 என்ற திட்டத்தின்கீழ் நிலவு ஆய்வு உலவியைச் சீனர்கள் நிலவில் வெற்றிகரமாகத் தரையிறக்கினர். இதன் மூலம் நிலவின் பல்வேறு புகைப்படங்கள் கிடைத்தன.

அதன்பின்னர் 2016 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் சீனா புதிய அறிவிப்பு ஒன்றை வெளியிட்டது. அதன்படி 2018ஆம் ஆண்டில் புதிய நிலவு ஆய்வு உலவி ஒன்றை நிலாவின் மறுப்பக்கத்துக்கு அனுப்பப்போகிறோம் எனத் தெரிவித்தது. பூமியிலிருந்து பார்க்கும்போது நிலவின் ஒரு பக்கம் மட்டுமே தெரியும். மற்றொரு பக்கம் தொடர்பாக ஆய்வு செய்ய இது வரை எந்த நாடும் செயற்கைக் கோள் அனுப்பவில்லை.

இதற்காக சீனா சேஞ்ச் -4 என்ற புதிய திட்டத்தைத் தொடங்கியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு ஜுன் மாதம் செயற்கை கோள் ஒன்றை அனுப்ப உள்ளது.

நிலாவிலிருந்து 60 ஆயிரம் கிலாமீற்றர் தொலைவில் நிறுத்தப்பட உள்ள இந்தச் செயற்கைக் கோள் பூமிக்கும், நிலாவின் மறுப்பக்கத்திற்கும் இடையே தகவல் தொடர்பிற்காக அனுப்பப்படுகிறது. அதைத்தொடர்ந்து நிலவு ஆய்வு உலவி அனுப்பத் திட்டமிட்டுள்ளோம் எனச் சீனா தெரிவித்துள்ளது.

## பிரபல பாடகி சுப்புலட்சுமியின் மகள் ராதா விஸ்வநாதன் மரணம்



பெங்களூரில் பிரபல பாடகி எம்.எஸ்.சுப்புலட்சுமியின் மகளும், பாடகியுமான ராதா விஸ்வநாதன் மரணம் அடைந்துள்ளார்.

பாரத ரத்னா விருது பெற்ற பிரபல பாடகி எம்.எஸ்.சுப்புலட்சுமி. இவர் கடந்த 2004ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் மரணம் அடைந்தார். அவருடைய மகள் ராதா விஸ்வநாதன். பெங்களூரில் வசித்து வந்த இவர் மூச்சுத்திணறலால் பாதிக்கப்பட்டு நேற்றுமுன்தினம் ஒரு தனியார் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. ஆனால் சிகிச்சை பலனின்றி அவர் நேற்று முன்தினம் இரவு மரணம் அடைந்தார்.

அவருடைய தாயாரான எம்.எஸ்.சுப்புலட்சுமி உள்நாடு மற்றும் வெளிநாடுகளுக்கு இசை நிகழ்ச்சிகளில் பங்கேற்கச் செல்லும்போது, மகள் ராதா விஸ்வநாதன் உடன் செல்வார். ராதா விஸ்வநாதன் பல்வேறு பாடல்களை பாடியுள்ளார். அவருக்கு சந்திரசேகர், சீனிவாசன் என்கிற 2 மகன்களும், சுப்புலட்சுமி என்ற மகளும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## எந்தத் தேர்தல் வந்தாலும் ஆர்.கே.நகர் போல நாங்கள் அபார வெற்றியைப் பெறுவோம்




சென்னை,ஜன.05

எந்தத் தேர்தல் வந்தாலும் ஆர்.கே.நகர் தேர்தல் போல நாங்கள் வெற்றி பெறுவோம் என்று தினகரன் தெரிவித்துள்ளார்.

சென்னை ஆர்.கே.நகர் தொகுதி எம்.எல்.ஏ.தினகரன், நேற்றுமுன்தினம் தண்டையார் பேட்டை இரட்டைகுழி தெருவில் உள்ள ஆர்.கே.நகர் சட்டமன்ற அலுவலகத்துக்குச் சென்றார். அங்கு அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

மாலையில் அவர் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சியில் கலந்துகொண்டார்.

வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்துத் தினகரன் பேசியவை வருமாறு:-

நான் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்று இருந்தாலும், நான் கொடுத்த அனைத்து வாக்குறுதிகளையும் அரசாங்கத்துடன் போராடி நிறைவேற்றித் தருவேன். ஆர்.கே.நகர் தொகுதியில் வாரத்தில் 3 நாள்கள் வெற்றிவேல் வீட்டில் தங்கி மக்கள் பணியாற்றுவேன்.

நான் இந்தத் தொகுதிக்கு வர மாட்டேன் என்று பொய்ப் பிரசாரம் செய்தார்கள். 20 ரூபாய் நோட்டைக் கொடுத்து மக்களை ஏமாற்றி விட்டேன் எனக் கூறுகிறார்கள். இது அவர்கள் தோல்விக்குப் பிறகும் மீசையில் மண் ஒட்டவில்லை என்பது போல் நடந்துகொள்வதைக் காட்டுகிறது.

உள்ளாட்சி தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல், சட்டமன்றத் தேர்தல் வந்தாலும் ஆர்.கே.நகர் தேர்தல் வெற்றியைப் போன்று நாங்கள் அபார வெற்றி பெறுவோம் என்று தெரிவித்துள்ளார்.

### வாக்குக்குப் பணம்:

## ஆர்.கே.நகர் தொகுதி மக்களை சாடுகின்றார் நடிகர் கமலஹாசன்

ஆர்.கே.நகர் தொகுதி இடைத் தேர்தலில் வாக்காளிக்கப் பணம் விநியோகிக்கப்பட்டதையும், அதை வாக்காளர்கள் வாங்கியமையும் நடிகர் கமலஹாசன் கடுமையாகச் சாடியுள்ளார்.

இது தொடர்பாக நடிகர் கமல் கூறியவை வருமாறு:-

ஆர்.கே.நகர் இடைத் தேர்தல், ஆகப்பெரிய களங்கம். விலைக்கு வாங்கப்பட்ட வெற்றியை ஊழல் என்று கூடச் சொல்ல மாட்டேன். இது அனைவரும் அறிந்த, ஊரறிய நடந்த குற்றம். இது வீழ்ச்சி, ஜனநாயகத்தின் வீழ்ச்சி.

ஆளும் தரப்பு ஆறாயிரம், யாருடைய தயவும் இன்றி சுயமாகவே வளர்ந்த சுயேச்சை தரப்பு இருபதாயிரம் என்று ஆர்.கே.நகரின் ஒவ்வொரு வாக்காளருக்கும் இரு தரப்பும் விலை நிர்ணயித்தன.



சுயேச்சைத் தரப்பின் வெற்றி பாராட்டுக்குரியது.

உங்கள் உள்ளம் எவ்வளவு அழகான உலகம். உங்களின் அன்பும் அதன் வெளிப்பாடான நெகிழ்வும் என்ன வெள்ளத்தில் உங்களின் உதவிகள் மூலம் இந்த உலகத்துக்குக் காட்டினீர்களே, அப்படிப்பட்ட நீங்கள் இன்று 20 ரூபாய் ரோக்கன்களுக்கு விலை போயுள்ளீர்கள்.

இது பிச்சை எடுப்பது போன்ற கேவலம். அதுவும் திருடனிடம் பிச்சை எடுப்பது போன்ற ஒரு கேவலம் எங்கேயாவது உண்டா? உங்களிடத்தில் மனிதம் இல்லாமல் இல்லை. ஆனால், வறுமை உங்களின் மனிதத்தை மறைத்து அந்தப் புள்ளியை நோக்கி நகர்த்துகிறது.

உங்களின் வறுமையை இல்லாமல் செய்ய, உங்களின் நேர்மையான வாக்குகள் தாம் ஒரே ஆயுதம். இந்த ஆயுதம் வேண்டுமானால் நீங்கள் பெற்ற ரோக்கன்களைப் போல் உடனடி இன்பம் அளிக்காமல் இருக்கலாம். ஆனால், நேர்மையாகச் செல்லும் உங்களின் வாக்குகளே நீண்டநாள் நிலைத்த பலனைத் தரும் என்பதை உணர்வீர்கள் என்று தெரிவித்துள்ளார்.

## ஆர்.கே. நகர் மக்களைக் கமல் அவமானப்படுத்திவிட்டார்





தினகரன் சீற்றம்

ஆர்.கே நகர் மக்களை கமல் அவமானப்படுத்திவிட்டார் எனத் தினகரன் தெரிவித்துள்ளார்.

ஆர்.கே நகர் வெற்றி பணத்தின் மூலம் கிடைத்த வெற்றி என்று கமலஹாசன் பேசி இருந்தார். கமலின் இந்தக் கருத்து பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த நிலையில் பத்திரிகையாளர்களுக்குப் பேட்டி அளித்த ஆர்.கே நகர் தொகுதி எம்.எல்.ஏ. தினகரன் கமலின் கருத்திற்குப் பதில் அளித்துள்ளார். அதில் கமலின் கருத்து ஆர்.கே. நகர் மக்களை இழிவுபடுத்தும் வகையில் இருக்கிறது. பணம் வாங்கி மக்கள் வாக்காளித்தனர் எனக் கூறுகின்றமை மிகவும் தவறானது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்கத்தை அழிக்க நினைத்தால் தோல்விதான் பரிசு




சென்னை,ஜன.05

திராவிட இயக்கத்தை அழிக்க முயற்சித்துப் பலர் தோல்வியைப் பரிசாகப் பெற்ற வரலாறு அனைவருக்கும் தெரியும் எனக் கருணாநிதி - ரஜனி சந்திப்புக்குப் பின்னர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

நடிகர் ரஜனிகாந்த் அரசியலுக்கு வரப்போகிறேன் எனவும் தனிக் கட்சி தொடங்கப்போகிறேன் எனவும் அறிவித்துள்ளார். வரும் சட்டசபைத் தேர்தலில் 234 தொகுதிகளிலும் வேட்பாளர்களை நிறுத்தப் போகிறேன் எனக் கூறியுள்ளார். தான் செய்யப் போவது ஆன்மீக அரசியல் என்றும் அதில் உண்மை, நேர்மை என்பன கடைபிடிக்கப்படும் என்றும் கூறியுள்ளார்.

இந்த நிலையில், கருணாநிதியைச் சந்தித்த ரஜனி அவரது உடல்நிலை பற்றிக் கேட்டறிந்தார். அத்துடன், தனது அரசியல் பிரவேசம் தொடர்பாகத் தெரிவித்து ஆசியும் பெற்றார்.

இந்தச் சந்திப்புக்கு பின்னர் மு.க.ஸ்டாலின் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியவை வருமாறு:-

கருணாநிதியை ரஜனிகாந்த் சந்திப்பது ஒன்றும் புதிதல்ல. இதில் அதிசயப்படஒன்றுமில்லை. புதியகட்சியைத்தொடங்கும்போது கருணாநிதியிடம் விஜயகாந்தும் வாழ்த்துப் பெற்றார்.

பெரியார், அண்ணா, கருணாநிதியால் பண்படுத்தப்பட்ட மண் தமிழக மண். திராவிட இயக்கத்தை அழிக்க முயற்சித்துப் பலர் தோற்ற வரலாறு அனைவருக்கும் தெரியும்.

வீட்டிற்கு வருவோரை இன்முகத்துடன் வரவேற்பது தமிழர் பண்பாடு என்ற முறையில் ரஜனிகாந்தை வரவேற்றோம். தி.மு.க. ஆதரவு அவருக்குத் தேவையா என்பது பற்றித் தேர்தல் நேரத்தில் முடிவெடுப்போம் என்று தெரிவித்துள்ளார். (ப)

## 2017இல் பேஸ்புக்கில் அதிகம் பேசப்பட்டவர்கள் மோடி, சச்சின்



சமூக வலைத்தளமான பேஸ்புக்கில் 2017ஆம் ஆண்டில் மிகவும் அதிகம் பேசப்பட்டவர்களில் பிரதமர் மோடியும், சச்சினும் இடம் பெற்றுள்ளனர்.

சமூக வலைத்தளமான பேஸ்புக்கில் 2017ஆம் ஆண்டில் கருத்துகள் பகிர்தல், கலந்துரையாடுதல், பின்தொடர்தல் ஆகியவை தொடர்பான ஆய்வு நேற்றுமுன்தினம் வெளியானது.

அந்த ஆய்வில் கூறப்பட்டுள்ளவை வருமாறு:-

2017ஆம் ஆண்டில் லோக்சபா எம்.பிக்களில் பிரதமர் மோடியும், ராஜ்யசபா எம்.பிக்களில் கிரிக்கெட் வீரர் சச்சினும் பேஸ்புக்கில் மிகவும் அதிகம் பேசப்பட்டவர்களாக இடம் பெற்றுள்ளனர் என்று அந்த ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது.



# ஆஷஸ் கடைசி டெஸ்ட்: நம்பிக்கை அளித்த ரூட் நிமிர்ந்தது இங்கிலாந்து

ஆஷஸ் கிரிக்கெட் தொடரின் கடைசி போட்டியில் இங்கிலாந்து அணி ஆரம்ப விக்கெட்டுகளை இழந்தபோதும், ஜோ ரூட்டின் பொறுப்பான ஆட்டத்தால்சரிவில் இருந்து மீண்டது.

ஆஸ்திரேலியா –இங்கிலாந்து அணிகள் மோதும் ஆஷஸ் கிரிக்கெட் தொடரின் 4 போட்டிகள் முடிந்துள்ளன. இதில் 3:0 என ஆஸ்திரேலியா முன்னிலையில் உள்ளது. இந்த நிலையில், 5ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி நேற்று சிட்னியில் ஆரம்பமாகியது.

மழை காரணமாக ஆட்டம் தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டது. நாணயச்சுழற்சியில்வென்ற இங்கிலாந்து துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தது.

தொடக்க வீரர் ஸ்டோன்மேன் 24 ஓட்டங்களிலும், பின்சிச் 25 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

மற்றொரு தொடக்க விரர் அலிஸ்டயர் குக் இன்னும் 47 ஓட்டங்கள் எடுத்தால் 12 ஆயிரம் ஓட்டங்களைக் கடப்பார் என்ற நிலையில் விளையாடினார். ஆனால், அவர் 39 ஓட்டங்கள் எடுத்த நிலையில் பவிலியன் திரும்பினார். அப்போது ஓட்ட எண்ணிக்கை 3 விக்கெட் இழப்புக்கு 95 ஓட்டமாக இருந்தது.

அதன்பின்னர் ஜோ ரூட்டுடன், மலன் இணைந்தார். இருவரும் நிதானமாக விளையாடினர் அத்துடன் மேலும் விக்கெட் விழாமல் பார்த்துக்கொண்டனர்.

தேநீர் இடைவேளைக்குப் பிறகு ரூட் அரை சதம் கடந்தார். மலனும் அரை சதத்தை நெருங்கினார். இவர்கள் இருவரும் 4ஆவது விக்கெட்டுக்கு 100 ஓட்டங்களுக்கு மேல் சேர்த்தனர். அணியின் ஆட்டநேர முடிவில் இங்கிலாந்து அணி 5 விக்கெட் இழப்பிற்கு 233 ஓட்டங்களைக் குவித்தது.

(ப)



# காயத்தில் இருந்து மீண்டார் தவான்

தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதலாவது டெஸ்டுக்கான அணித் தேர்வுக்கு தவான் தயாராக இருக்கின்றார் என இந்திய கிரிக்கெட் வாரியம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்காவுக்கு சென்றுள்ள இந்திய கிரிக்கெட் அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

முதலாவது டெஸ்ட் கேப்டவுனில் இன்று ஆரம்பமாகிறது. இந்தப் போட்டி இலங்கைநேரப்படி பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும்.

தென்னாபிரிக்காவுக்கு புறப்படுவதற்கு முன்பாக இந்திய தொடக்க ஆட்டக்காரர் ஷிகர் தவானுக்கு இடது கணுக்காலில் லேசான காயம் ஏற்பட்டது. இதற்காக அவர் காலில் கட்டுப் போட்டிருந் தார். இதனால் முதலாவது டெஸ்டில் அவர் விளையாடுவாரா? என்ற சந்தேகம் நிலவியது.

இந்த நிலையில் ஷிகர் தவான் காயத்தில் இருந்து குணமடைந்து உடல்தகுதியை எட்டி விட்டார் எனவும், முதலாவது டெஸ்டுக்கான அணித் தேர்வுக்கு அவர் தயாராக இருக்கின்றார் எனவும் இந்திய கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மத்தியூஸா, சந்திமலா?



ஒரு நாள் கிரிக்கெட் போட்டியின் தலைவரை எதிர்வரும் 9ஆம் திகதி நியமிக்கவுள்ளோம் என இலங்கை கிரிக்கெட் ங்பை தெரிவித்துள்ளது.

ஒரு நாள் போட்டிக்கான தலைவரைத் தெரிவு செய்வது தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் இலங்கை கிரிக்கெட் சபையில் இடம்பெற்றது. இதில், இலங்கை கிரிக்கெட்டின் தலைவர் திலங்க சுமதிபால, உப தலைவர் கே.மதிவாணன், தலைமைப் பயிற்சியாளர் சந்திக ஹத்துருசிங்க உட்படப் பல பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

கலந்துரையாடலின் நிறைவில், எதிர்வரும் 9ஆம் திகதி ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளுக்கான தலைவரைத் தெரிவு செய்ய முடிவுசெய்யப்பட்டது.

இந்தக் கலந்து ரையாடலின்போது, மத்தியூஸ் அல்லது சந்திமல் தலைவராக நியமிக்கப்படலாம் என்று திலங்க சுமதிபால தெரிவித்துள்ளார்.

# தென்னாபிரிக்க ஆடுகளம்; எமக்குக் கவலை இல்லை



தென்னாபிரிக்க ஆடுகளம் வேகப்பந்துக்கு ஏற்றவகையில் இருப்பதால் நாங்கள் அதுகுறித்து கவலைப்படவில்லை என்று இந்திய அணியின் முன்னணி வீரரான புஜாரா தெரிவித்துள்ளார்.

விராட் கோஹ்லி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி 3 டெஸ்ட் 6 ஒருநாள் போட்டி மற்றும் மூன்று 20 ஓவரில் விளையாடுவதற்காக தென்னாபிரிக்கா சென்றுள்ளது.

இந்தியா–தென்னாபிரிக்கா அணிகள் மோதும் முதல் டெஸ்ட் போட்டி இன்று ஆரம்பமாகிறது.

தென்னாபிரிக்கா டெஸ்ட் தொடர் தொடர்பாக இந்திய அணியின் முன்னணி வீரர் புஜாரா நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியவை வருமாறு:–

தென்னாபிரிக்கா ஆடுகளங்கள் வேகப்பந்து வீச்சுக்கு ஏற்ற வகையில் பந்து அதிகமாக எகிறக்கூடியவை ஆடுகளம் பற்றி நாங்கள் கவலைப்படவில்லை.

இது மாதிரியான ஆடுகளத்தில் எங்களால் விளையாட இயலும். சிறப்பாக விளையாடுவதில்தான் எங் களது கவனம் இருக்கும். எப்படித் திட்டமிட்டபடி விளையாடுவது என்பதில் தெளிவாக இருக்கிறோம். எந்தவிதமான ஆடுகளத்தில் ஆடுவதற்கு எல்லா வகையிலும் தயாராக இருக்கிறோம்.

வேகப்பந்து வீச்சுக்கு ஏற்ற ஆடுகளத்தில் துடுப்பாட்டத் தொழில் நுட்பத்தையும், மனஉறுதியையும் சரியான முறையில் பயன்படுத்த வேண்டும். பந்து வரும் திசையைக் கணித்து ஆடுவது மிகவும் முக்கியமானது என்று தெரிவித்துள்ளார்.

(ப)

# இந்தியா— தென்னாபிரிக்கா டெஸ்ட் இன்று ஆரம்பம்

இந்தியா–தென்னாபிரிக்கா இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் கிரிக்கெட் தொடர் இன்று கேப்டவுனில் ஆரம்பமாகவுள்ளது. இதற்காக இரண்டு அணிகளும் தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றன.

1992ஆம் ஆண்டு தென்னாபிரிக்கா மீண்டும் கிரிக்கெட் விளையாடத் தொடங்கிய காலத்தில் இருந்து கடந்த 25 ஆண்டுகளாக இந்திய அணி தென்னாபிரிக்கா மண்ணில் தொடரை வென்றது கிடையாது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்திய டெஸ்ட் அணி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறது. இதனால் விராட் கோஹ்லி தலைமையிலான தற்போதைய இந்திய அணியால் தென்னாபிரிக்காவில் தொடரை வெல்ல முடியும் என்று நம்பப்படுகிறது.

சொந்தமண்ணில்எக்காரணத்தைக் கொண்டும் இந்தியாவிடம் தோல்வியடைந்து விடக்கூடாது




என்பதில் தென்னாபிரிக்கா உறுதியாக இருக்கிறது. இதற்காகவே டெஸ்ட் போட்டியில் விளையாடாமல் இருந்து டிவில்லியர்ஸை மீண்டும் டெஸ்டிற்கு தென்னாபிரிக்கா அழைத்துள்ளது.

அதேபோல் ஓராண்டுகளாக தோள்பட்டைக் காயத்தால் அவதிப்பட்ட ஸ்டெயினையும் இந்திய அணிக்கெதிராக விளையாட வைக்கத் திட்டமிட்டுள்ளது.

இந்தியாவிற்கு அது பெரும் சவாலாக அமையுமா இல்லையா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

(ப)

## கூட்டணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்.மாநகர சபையின் முன்னாள் உறுப்பினரும் முற்போக்குத் தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளருமான சுதர்சிங் விஜயகாந்த் உள்ளிட்ட நால்வர் மீது முன்வைக்கப்பட்ட 116 பவுண் திருட்டு நகைகளை உடைமையில் வைத்திருந்தமை மற்றும் அவற்றை அடகு வைக்க முயற்சித்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களில் குற்றவாளிகளாக இனங்கண்டு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்தது.

2013ஆம் ஆண்டு ஜூலை மாதம் வங்கியொன்றில் அடகு வைப்பதற்கு சுதர்சிங் விஜயகாந்த் சென்றிருந்தார். அந்த வங்கியில் கடமையாற்றும் அலுவலரின் திருட்டுப்போன நகை சுதர்சிங்விஜயகாந்திடம் காணப்பட்டது. அது தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த யாழ்ப்பாணப் பொலிஸார், விஜயகாந்த் உள்ளிட்ட 4 பேரைக் கைதுசெய்தனர். தொடர்ச்சியாக விளக்கமறியலில் வைக்கப்பட்ட சந்தேகநபர்கள் நான்கு பேரும் ஆள் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

விஜயகாந்த் உள்ளிட்ட நான்கு பேரும் மீது 116 பவுண் நகைகளைத் திருடியமை உள்ளிட்ட நான்கு குற்றச்சாட்டுக்களை முன்வைத்து கோப்பாய் பொலிஸாரால் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. அதனடிப்படையில் விசாரணைகள் இடம்பெற்று வந்த நிலையில் நேற்றுத் தீர்ப்புக்காகத் திகதியிடப்பட்டது.

சந்தேகநபர்கள் நால்வர் மீதான திருட்டுக் குற்றச்சாட்டு நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் நிரூபிக்கப்படவில்லை. சந்தேகநபர்கள் திருட்டு நகைகளை உடைமையில் வைத்திருந்தமை மற்றும் அவற்றை அடகுவைக்க முற்பட்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டுள்ளன. 4 குற்றவாளிகளுக்குமான தண்டனைத் தீர்ப்பு எதிர்வரும் பெப்ரவரி முதலாம் திகதி வழங்கப்படும் என்று யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் தீர்ப்பளித்தார்.

விஜயகாந்தின் இந்த நடவடிக்கையால் அவரை தமது கட்சியின் உறுப்பினர் பதவியிலிருந்து ஈ.பி.டி.பி. நீக்கியது. இதனால் அவர் முற்போக்குத் தமிழ்த்தேசியக் கட்சியை ஆரம்பித்தார். தற்போது அவரது கட்சி தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணைந்து உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுகிறது. கூட்டணியின் சார்பில் யாழ். மாநகர சபை வேட்பாளராக விஜயகாந்தும் போட்டியிடுகிறார். (ஐ)

## முதல்வருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இ.போ.சவினர்.

வவுனியா பழைய பஸ் நிலையத்தைமூடுவதற்கு வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் உத்தரவு பிறப்பித்ததை அடுத்து – அதற்கு எதிராக வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் ஒன்றிணைந்த தொழிற்சங்கம் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டது. கடந்த புது வருட தினத்தன்று ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போராட்டம் நேற்று நான்காவது நாளாகவும் தொடர்ந்தது.

இந்நிலையில், வவுனியா புதிய பஸ் நிலையத்தில் ஒரு பகுதி வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாக நேற்றுப் பிற்பகல் அதிகாரிகளால் அறிவிக்கப்பட்டது. ஒதுக்கப்பட்ட பகுதி போக்குவரத்துச் சபையினரிடம் வழங்கப்பட்டது.

இதனையடுத்து வடபிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர்களின் பணிப் புறக்கணிப்புப் போராட்டம் நேற்றுப் பிற்பகல் 2 மணிக்கு நிறைவுக்கு வந்தது என ஒன்றிணைந்த தொழிற்சங்கத்தின் செயலாளர் அ.அருள்பிரகாசம் தெரிவித்தார்.

தமது கோரிக்கை நிறைவேற்றப்பட்ட நிலையிலேயே போராட்டம் கைவிடப்பட்டது. இ.போ.ச. பஸ் சேவைகள் வடக்கு முழுவதும் நேற்றுப் பிற்பகல் 3 மணிக்கு வழமைபோன்று ஆரம்பமானதாகவும் அவர் குறிப்பிட்டார்.

முன்னதாக, வடபிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர்களின் போராட்டம் நேற்று நான்காவது நாளாகத் தொடர்ந்த நிலையில், யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் யாழ்ப்பாணச்சாலையில் கடமையாற்றும் இ.போ.ச. நடத்துநர்கள், சாரதிகள் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

முதலமைச்சருடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற பேச்சுக்களில் தமக்கான கோரிக்கைகள் நிறைவேற்றப்படாமையை அடுத்து தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படவேண்டும் என வலியுறுத்தி அவர்கள் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் கொட்டகை அமைத்து அவர்கள் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தின்போது அவர்கள் முதலமைச்சருக்கு எதிரான வாசகங்கள் அடங்கிய பதாகைகளை தொங்கவிட்டிருந்தனர்.

இதேவேளை, அரச பஸ் சேவைகள் இடம்பெறாமையால் மாணவர்கள், ஆசிரியர்கள், அரச மற்றும் தனியார் துறை ஊழியர்கள் என அனைவரும் போக்குவரத்துச் சேவையைப் பெறுவதில் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கினர். தனியார் பஸ் சேவைகள் சீராக இடம்பெற்ற போதும் அவற்றில் நெரிசல் காணப்பட்டதாகப் பயணிகள் தெரிவித்தனர். (ஐ–7)

## படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதிக்குப் புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவிப்பதற்காக யாழ்.மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி, யாழ்.நகரத் தளபதி பிரிகேடியர் சரத் திஸாநாயக்கமற்றும் இராணுவச்சட்ட ஆலோசகர் ஆகியோர் யாழ்.மேல் நீதிமன்றத்துக்குச் சென்றிருந்தனர்.

இந்தச் சந்திப்பின்போதே நீதிபதி இளஞ்செழியன், பருத்தித்துறை நீதிமன்றுக்குச் சொந்தமான காணி இராணுவத்தின் வசமுள்ளது எனவும், எனவே அதனை மீட்டுத்தருமாறு பருத்தித்துறை நீதிமன்றச் சட்டத்தரணிகள் தன்னிடம் கோரினர் எனவும் இராணுவத் தளபதியிடம் சுட்டிக்காட்டினார்.

அவ்வாறு 557ஆவது படைப்பிரிவின் கட்டுப்பாட்டிலுள்ள 2 ஏக்கர் 10 பேர்ச்சஸ் காணியை மீளப் பெற்றால் அதற்குள் யாழ்ப்பாணத்தில் இன்னுமொரு மேல்நீதிமன்றக்கட்டடத் தொகுதியை அமைக்க வேண்டும்எனவும் அவர்கள்தன்னிடம் கூறினார்கள் எனநீதிபதி இளஞ்செழியன் இராணுவத் தளபதிக்கு விளக்கினார்.

இதனையடுத்து, அந்தக் காணி விடுவிப்புக்காக மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்ந்து அறியத்தருவதாகவும், அந்தக் காணியைமீளப்பெற்றுத்தருவதற்கான அனைத்து உதவிகளையும் தாம் செய்வார் என்றும் நீதிபதி இளஞ்செழியனிடம் உறுதியளித்தார் கட்டளைத் தளபதி. (ஐ–7)

## ஆணைக்குழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிப்பதாகவும் அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், சுனில் ஹந்துன்நெத்தியின் தலைமையின் கீழ் கோப் குழு ஊடாக முன்னெடுக்கப்பட்ட பிணைமுறி விவகார அறிக்கையானது 2016ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் பிரதமரின் அறிவுரைக்கமையச் சட்டமா அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகப் பிரதமர் கூறியுள்ளார்.

அதற்கமைய, இந்த மோசடி தொடர்பில் தகுந்த நடவடிக்கை எடுக்கும் பொறுப்பு 2016ஆம் ஆண்டு பிரதமராலும், இந்த வருடம் ஜனவரி மாதம் ஜனாதிபதியாலும் சட்டமா அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

நல்லாட்சியின் தேசிய அரசு ஜனநாயகத்தை மற்றும் சட்டத்தை மதிக்கும் செயற்பாடுகளை இதன்மூலம் மீண்டும் உறுதி செய்ய எம்மால் முடிந்துள்ளது. இனி சட்டமா அதிபர் திணைக்களம் உரிய நடவடிக்கை எடுக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன், ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளமைக்கு அமைய 2008ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்ற ஊழல் மற்றும் மோசடி தொடர்பில் உரிய விசாரணைகள் இடம்பெற்று சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றமையே தேசிய அரசின் நோக்கம் என்றும் பிரதமர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

## தையல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எரியூட்டப்பட்டதாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நள்ளிரவு இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் தையல் நிலையத்தின் உரிமையாளர் தெரிவிக்கையில்,

2009 டிசெம்பர் மாதத்திலிருந்து நல்லூர் கோவில் வீதியில் தையல் நிலையம் நடத்தி வருகிறேன். என்னை அந்த இடத்திலிருந்து அகற்றச் சிலர் பல தடவைகள் முயற்சிகளை முன்னெடுத்தனர். மின்சார சபைக்கு முறைப்பாடு செய்து எனது கடைக்கான மின் இணைப்பையே துண்டித்தனர். பின்னர் உரிய காரணங்களைக் கூறி மீளவும் மின் இணைப்பு வழங்கப்பட்டது.

எனது கடையின் பூட்டை உடைத்த அயலவர் ஒருவருக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு உள்ளது. இந்த நிலையிலேயே சிலர் இந்த இழி செயலை நேற்றிரவு செய்துள்ளனர்–என்றார்.

இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுசெய்யப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார். (ஐ–7)

## காணாமற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உடகம தெரிவித்தார்.

இவ்வாறானவர்கள் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவில் நேற்றுவியாழக்கிழமை காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மனித உரிமை மீறல்கள் தொடர்பில் கடந்த 2017ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் வரை ஆணைக்குழுவுக்கு 56 14 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

மனித உரிமைகள் மதிக்கப்படுவது தொடர்பாக உயர்நீதிமன்றம் அண்மைக்காலத்தில் பல தீர்ப்புகளை வழங்கியிருந்தது. இவ்வாறான தீர்ப்புகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதோடு, அவை ஊடகங்களில் தலைப்புச் செய்திகளாக வும்வரவேண்டியவை. எனினும் அவ்வாறு வெளிவராமை கவலையான விடயம் –என்றார். (ஐ)

## உண்மையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன், கடந்தகாலங்களில் இடம்பெற்ற பொதுச் சொத்துக்கள் துஷ்பிரயோகம், ஊழல் மோசடிகள் தொடர்பிலும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ள அவர், உண்மையின் பக்கமே கூட்டமைப்பு இருக்கும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

மத்திய வங்கிப் பிணைமுறி மோசடி தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து ஆணைக்குழுவின் பரிந்துரைகளை கவனத்தில் எடுத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் நிதி அமைச்சர் ரவிகருணாநாயக்க, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன், பேர்ப்பச்சுவல் நிறுவனத்தின் அர்ஜுன் அலோசியஸ், கசுன்பலிஹேனமற்றும் பொறுப்புக் கூறவேண்டிய அனைவருக்கும் எதிராகக் குற்றவியல் சிவில் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டமைக்கு இணங்க நடவடிக்கைகள் எடுப்பதற்குரிய அறிவுறுத்தல்கள் வழங்கியுள்ளேன் என்று நேற்று முன் தினம் அறிவித்திருந்தார்.

இது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

இந்த விசாரணை அறிக்கையைச் சம்பந்தப்பட்ட அதிகார பீடங்களுக்கு அனுப்பி அரசு விரைவாக உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். அத்துடன் கடந்த காலங்களில் நடந்த ஊழல் மோசடிகள், பொதுச் சொத்துகள் துஷ்பிரயோகம் தொடர்பிலும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக் குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கவேண்டும். இதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எப்போதும் உண்மையின் பக்கம் நிற்கும் என்றார். (ஐ)

## மோசமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒட்டுமொத்த சமூகத்துக்கு ஒரு ரணமாக அமைந்துள்ள இந்த பயங்கரவாதத் தடைச்சட்டம் மனித உரிமைகளை நிலைநிறுத்துகின்ற பாதுகாப்புச் சட்டமாக மாற்றியமைக்கப்பட வேண்டும் என இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவின் தலைவி கலாநிதி தீபிகா உடகம தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள மனித உரிமை ஆணைக்குழு தலைமையகத்தில் நேற்று வியாழக்கிழமை காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு கூறினார்.

இலங்கையில் பயங்கரவாதத் தடைச்சட்டம் மாற்றியமைக்கப்படவேண்டும் என மனித உரிமை ஆணைக்குழு முன்னர் அறிக்கை வெளியிட்டிருந்தது. எனினும் பல மாதங்களாகியும் அது இடம்பெறவில்லை. ஐ.நா. உட்பட பல தூதுக்குழுக்களும் பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படவேண்டும் எனக் கூறியுள்ளன. இது விடயத்தில் மனித உரிமை ஆணைக்குழுவின் தற்போதைய நிலைப்பாடு என்ன என ஊடகவியலாளர் ஒருவர் அவரிடம் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த அவர்,

இந்த ஆணைக்குழுவின் கடந்த இரண்டு ஆண்டு பதவிக் காலத்தில் நாம் பல கொள்கைகளுடன் தொடர்புடைய பரிந்துரைகளை வழங்கியிருக்கின்றோம். அதில் ஆரம்பத்தில் நாம் சமர்ப்பித்த பரிந்துரைகள், பயங்கரவாத தடைச் சட்டம் பற்றியதாகும்.

நாம் பயங்கரவாதத் தடைச்சட்டம் பற்றி முன்னர் தெரிவித்த கருத்துக்களை வலியுறுத்தி நிற்கின்றோம்.

ஒப்புதல் வாக்குமூலம் பெறுக்கொள்ளுதல், நீண்ட காலமாக ஒருவரைத் தடுப்பில் வைத்திருத்தல் போன்ற மனித உரிமைகளை மீறும் பல்வேறு பிரிவுகளைக்கொண்டிருக்கும் பயங்கரவாதச் சட்டமானது நாட்டின் பாதுகாப்பை மேம்படுத்தும் என்ற விடயத்துடன் நாம் இணங்கவில்லை.

இந்த விடயத்தில் நாம் அரசுக்குப் பரிந்துரைகளை முன்வைத்து மனித உரிமைகளுடன் இணங்கிச் செல்கின்றதான பாதுகாப்புச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்பு வழங்கத் தயார் எனக் கூறியிருந்தோம்.

பாரதூரமான வகையில் மனித உரிமைகளை மீறுவதற்கு இடமளிக்கும் சூழ்நிலைகளை ஏற்படுத்தித் தருகின்ற சட்டங்கள் ஒட்டுமொத்த சமூகத்துக்கும் ஒரு ரணமாக அமைந்திருக்கின்றது. அனைவரும் இதனால் பாதிப்படைகின்றனர். நாட்டில் புதிய அரசியல் நாகரிகத்தை ஏற்படுத்த நல்லதொரு சட்டக் கட்டமைப்பு அவசியமாகும் – என்றார். (ஐ)

## இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட போதே மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

நெடுந்தீவுக் கடற்பரப்பில் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை இவர்கள் 2 படகுகளுடன் கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட 13 மீனவர்களும் காங்கேசன்துறைக் கடற்படை முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டு நேற்றுக் காலை யாழ்ப்பாணக் கடற்றொழில் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டனர். (ஐ–7)

காலைக்கதிர் Kalaikkathir



# எதிர்காலத்தை வளப்படுத்தும் எமது செயற்பாடுகளுக்கு மக்கள் முழுமையான அரசியல் பலத்தைத் தரவேண்டும்

மட்டக்களப்பு, ஜன. 04

திருக்கோவில் பிரதேச சபைக்கான உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வீணைச் சின்னத்தின் வெற்றி உறுதி செய்யப்படுவதனூடாக உங்கள் எதிர்பார்ப்புக்களை நாம் நிச்சயம் நிறைவு செய்து தருவோம் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலை முன்னிட்டு கிழக்கு மாகாணத்தின் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டத்தில் போட்டியிடும் கட்சியின் வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்களுடனான சந்திப்புக்களை மேற்கொள்ளும் பொருட்டு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா கிழக்கு மாகாணத்திற்கான விஜயம் ஒன்றை நேற்று முன்தினம் மேற்கொண்டுள்ளார்.



## அம்பாறையில் டக்ளஸ் தேவானந்தா

இதன் ஓர் அங்கமாக கிழக்கு மாகாணத்தின் அம்பாறை திருக்கோவில் தம்பட்டை பிரதேசத்தில் பல் தேவை கட்டடத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எமது கட்சியின் நிலைப்பாடான மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி எக் காலத்திலும் பிரிக்கப்பட முடியாத வடக்கு – கிழக்கு ஓர் தனி அலகு என்ற நிலைப்பாட்டில் ஒருவிதமான மாற்றமும் இல்லை. அந்த வகையிலேயே நாம் எமது செயற்றிட்டங்களை இன்றுவரை முன்னெடுத்து வருகின்றோம்.

கடந்த காலங்களில் கிழக்கு மாகாணத்தில் எமது செயற்றிட்டங்கள் அல்லது கட்சியினது வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதில் நாம் பல சிரமங்களுக்கும் சவால்களுக்கும் முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

அந்தவகையில், நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலில் மக்கள் எமக்கான ஆதரவுப்பலத்தை தருவார்களேயானால் நாம் கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் எமது வேலைத் திட்டங்களை முன்னெடுக்கத் தயாராக இருக்கின்றோம்.

அந்தவகையில், கடந்தகால போராட்டங்களின் தவறுகளை எண்ணிக்கொண்டிருக்காது எதிர்காலங்களை வளப்படுத்தும் எமது செயற்பாடுகளுக்கு மக்கள் முழுமையான அரசியல் பலத்தைத்தர வேண்டும்.

இங்கு தனிநபர்களது பிரச்சினைகள் என்றல்லாது பொது மக்கள் சார்ந்த பொது அமைப்புகளது பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவே நாம் விரும்புகின்றோம். எனவே, அதற்கு முழுமையான ஆதரவுப் பலத்தை எமது வீணைச் சின்னத்திற்கு வழங்க அனைவரும் முன்வர வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

முன்பதாக தம்பட்டை சித்தி விநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற சிறப்பு பூசை வழிபாடுகளிலும் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா கலந்துகொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆமையுடன் மீனவர் ஒருவர் கைது

உயிருள்ள ஆமை ஒன்றுடன் மீனவர் ஒருவரை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.



இந்த மீனவர் பள்ளிக்குடா பகுதியில் வைத்து உயிருள்ள ஆமையொன்றுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஆமையுடன் கைது செய்யப்பட்ட மீனவரை மேலதிக விசாரணைகளுக்காக பூநகரி பொலிஸாரிடம் ஒப்படைக்க கடற்படையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஜ-7)

## யோகாசனப் பயிற்சி வகுப்பின் 10ஆம் ஆண்டு நிறைவு விழா நாளை

ஸ்ரீ சிவகுரு நாத குருபீடம் ஆரம்பித்த யோகாசனப் பயிற்சி வகுப்பின் 10 ஆவது ஆண்டு நிறைவு விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ் கந்தர் மடம் ஸ்ரீ சிவகுரு நாத குருபீட வேதாந்த மடத்தில் குரு பீடாதிபதி ஸ்ரீமத் வேத வித்தியாசாகரர் சுவாமிகள் தலைமை யில் இடம்பெறும்.

பிரதம விருந்தினராக யாழ். இந்திய துணைத் தூதுவர் ஆ.நடராஜன் கலந்து கொள்வார். ஆசியுரையை நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளும் சின்மயா மிஷன் பிரமச்சாரி ஜாக்ரத சைதன்யாவும் வழங்குவர்.

அன்றைய நிகழ்வில் யோகாசன அறிமுக உரை, அரங்காற்றுகை அதைத் தொடர்ந்து யோகாசனப் பயிற்சி ஆசிரியர்களான சி. சோதிமூர்த்தி, ச. விமேஸ் ஆகியோர் கௌரவிப்பும் இடம்பெறும். (இ)

## பொதுஜன பெரமுனவின் முதலாவது பிரசாரம் நாளை

கொழும்பு, ஜன. 05

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டம் நாளை சனிக்கிழமை மாலை கடவத்தையில் நடைபெறவுள்ளது.




அந்தக் கூட்டத்திற்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமை வகிக்கவுள்ளார் என கூட்டு எதிர்க்கட்சியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

கூட்டுஎதிர்க்கட்சி ஏற்பாடுசெய்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் பொரளை என்.எம். பெரேரா நிலையத்தில் நடைபெற்றது.

அந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்த நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் தேர்தல் இன்னும் 36 நாள்களில் நடைபெறவுள்ளது. உள்ளூராட்சிமன்றத் தேர்தலூடாக ஆட்சியைக் கவிழ்க்க முடியாதென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். எனினும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலூடாக ஆட்சியைக் கவிழ்க்க முடியும் என நாம் குறிப்பிடுகிறோம்.

எனவே, உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு வாக்களித்து உள்ளூர் அதிகார சபைகளின் அதிகாரத்தை எம்மிடம் வழங்குங்கள்.

அதன் பின்னர் எதிர்வரும் சித்திரைப்புத்தாண்டு காலப் பகுதியில் அரசை மாற்றும் வழியை நாம் காட்டித் தருவோம்.

நல்லாட்சி அரசின் முறையற்ற ஆட்சியால் பாதாளம் நோக்கிச் சென்று கொண்டிருக்கும் நாட்டை மீட்பதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு வாக்களித்து வெற்றி பெறச்செய்யவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (கு)

## கடலுணவுக் கொள்வனவில் ஈடுபடும் வாகனங்களைப் பதிவு செய்யுங்கள்!

யாழ். மாவட்டத்தின் ஊர்காவற்றுறை பிரதேச சபையின் எல்லைக்குள் கடலுணவு மொத்த கொள்வனவில் ஈடுபடும் வாகனங்களைப் பதிவு செய்யுமாறு ஊர்காவற்றுறை பிரதேச சபையினர் அறிவித்துள்ளனர்.

ஊர்காவற்றுறை பிரதேசசபையின் எல்லைக்குள் பொதுச்சந்தைகளை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல், நிர்வகித்தல் மற்றும் கட்டுப்படுத்தல் நடவடிக்கையின் ஓர் அங்கமாக, பிரதேசத்தில் வெளியிடங்களில் இருந்து வந்து, கடலுணவு மொத்த கொள்வனவில் ஈடுபடும் வாகனங்களைப் பதிவு செய்யத் தீர் மானிக்கப்பட்டுள்ளதாக, ஊர்காவற்றுறை பிரதேச சபையினர் விடுத் துள்ள



### ஊர்காவற்றுறை பிரதேச சபை அறிவிப்பு

செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, கடலுணவு மொத்த கொள்வனவில் ஈடுபடும் வாகனங்களின் உரிமையாளர்கள், எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் வாகனங்கள் பற்றிய பதிவுகளை பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் மேற்கொள்ளுமாறும் ஊர்காவற்றுறை பிரதேச சபையினர் அறிவித்துள்ளனர்.

ஊர்காவற்றுறை தம்பாட்டியில் அமைக்கப்பட்ட கடலுணவு மொத்த விற்பனைச் சந்தை ஜனவரி முதலாம் திகதி முதல் செயற்படவுள்ளதாகவும், கடலுணவுகளை மொத்தமாக விற்பனை செய்ய விரும்புவோர் இச்சந்தையிலும், சந்தையைத்தவிர வேறு எங்கும் வைத்து விற்பனை செய்வதற்கான அனுமதிகள் வழங்கப்படவில்லை எனவும் ஊர்காவற்றுறைப் பிரதேச சபைச் செயலாளர் கடந்த மாதம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சின்மயா மிஷனின் உலகத் தலைவரின் அருளுரை நல்லூரில்

சின்மயா மிஷனின் உலகளாவிய தலைவர் பூஜ்ய முக்யசுவாமி ஸ்வ ரூபானந்தாஜி வழங்கும் 'வாழ்வின் முகாமைத்துவ நுட்பங்கள்' (LIFE MANAGMENT TECENI QUES) என்ற தொனிப் பொருளிலான ஆன்மீக அருளுரை தமிழ் மொழி பெயர்ப்புடன் எதிர்வரும் 9 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை மாலை 5.30 மணிமுதல் 7 மணி வரை நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் இடம் பெறும். யாழ் சின்மயா மிஷனின் வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த இந்த நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (இ)



காலைக்கதிர்
Kalaikkathir



# தலைமறைவான குற்றவாளி 3 ஆண்டுகளின் பின்னர் கைது

யாழ்ப்பாணம், ஜன.05

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றால் 2014ஆம் ஆண்டு குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டவர் 3 ஆண்டுகளின் பின் கடந்த 27ஆம் திகதி யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

அவருக்கான தண்டனைத் தீர்ப்பு வரும் 9ஆம் திகதி வழங்கப்படும் எனவும் அன்றுவரை குற்றவாளியை யாழ்ப் பாணம் சிறையில் தடுத்துவைக்குமாறும் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் நேற்று உத்தரவிட்டார்.

சாவகச்சேரியில் கடந்த 2007ஆம் ஆண்டு 16 வயதுக்குட்பட்ட சிறுமி ஒருவர் கடத்திச் செல்லப்பட்டு வன்புணர்வுக் குட்படுத்தப்பட்டார். பாதிக்கப்பட்ட சிறுமி யின் முறைப்பாட்டையடுத்துச் சந்தேக நபரும் அவருக்கு உதவிய ஒருவரும் கைது செய்யப்பட்டனர்.


சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் சுருக்கமுறையற்ற விசாரணைகள் இடம் பெற்றுச் சந்தேகநபர்கள் இருவருக்கு எதிராகவும் யாழ்ப்பாணம் மேல் நீதிமன் றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப் பட்டது. விசாரணைகளின் நிறைவில் 2014ஆம் ஆண்டு ஓகஸ்ட் 7ஆம் திகதி தீர்ப்பளிக்கப்பட்டது.

சிறுமியை வன்புணர்வுக்குட்படுத்திய குற்றத்துக்கு முதலாவது எதிரிக்கு 10ஆண்டு கள் சிறைத் தண்டனையையும் அவருக்கு உதவிய குற்றத்துக்கு இரண் டாவது எதி ரிக்கு 5 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண் டனையையும் வழங்கி யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றின் அப்போதைய நீதிபதி அன்ன லிங்கம் பிரேமசங்கர் தீர்ப்பளித்தார்.

இரண்டாவது எதிரி தலைமறைவாகிய தால் அவரைக் கைது செய்யப் பொலிஸா ருக்கு மேல் நீதிமன்று கட்டளை வழங்கியது.

இந்த நிலையில் 3 ஆண்டுகளின் பின் இரண்டாவது எதிரி கடந்த 27ஆம் திகதி யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவரை நேற்றுவரை விளக்கமறியலில் வைத்தி ருந்து யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் முற்படுத்துமாறு சிறைச்சாலைக்கு நீதி வான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

அதனடிப்படையில் குற்றவாளி நேற்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் முற் படுத்தப்பட்டார். அவருக்குத் தண்டனைத் தீர்ப்பு வாசித்துக் காண்பிக்கப்படவேண் டும். அதன் பின்னரே தண்டனைக் காலம் ஆரம்பிக்கப்படும். தற்போது மேல் நீதிமன் றப் பருவகால விடுமுறை நடைமுறையில் உள்ளதால் குற்றவாளியை எதிர்வரும் 9ஆம் திகதி மன்றில் முற்படுத்துமாறு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் உத்தரவிட்டார். (ஐ)




# இறுதிப்போரில் சரணடைந்தோர் வழக்கு விசாரணை ஒத்திவைப்பு!

முல்லைத்தீவு, ஜன.05

இறுதிப் போரின்போது சரணடைந் தோர் தொடர்பான வழக்கு விசாரணை, எதிர்வரும் மார்ச் மாதம் 19 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இறுதிப் போரின்போது படையினரிடம் சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்ட எழிலன் உள்ளிட்ட 11 பேரின் வழக்குகள் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் நடை பெற்று வருகின்றன. இந்த வழக்கு விசா ரணைகளில் 5 பேரின் வழக்கு அறிக்கை கள் வவுனியா மேல் நீதிமன்றத்துக்கு அனுப்பிவைக்கப்படவுள்ள நிலையில் ஏனைய ஆறு பேரின் வழக்குகளும் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள் ளப்பட்டன.

இந்த வழக்குகள் எதிர்வரும் மார்ச் மாதம் 19 திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ள தாக இவர்கள் சார்பில் ஆஜரான சட்டத் தரணி தெரிவித்தார். (ஐ)

# மின் ஒழுக்கினால் வீடு முற்றாக எரிந்து நாசம்

## புதுக்குடியிருப்பில் சம்பவம்



முல்லைத்தீவு, ஜன.05

புதுக்குடியிருப்பு, கைவேலிப் பகுதியில் மின் ஒழுக் குக் காரணமாகத் தற்காலிக வீடு ஒன்று முற்றுமுழு தாக எரிந்து நாசமானது.

புதுக்குடியிருப்பு 1ஆம் வட்டாரப் பகுதியில் அமைந் துள்ள ரகுநாதன் சுவீஸ்கரன் என்பவரின் தற்காலிக வீடு நேற்றுக் காலை மின் ஒழுக்குக் காரணமாகத் தீப்பற்றி எரிந்துள்ளது.

அருகில் இருந்தவர்கள் தீயை அணைக்க முற்பட்ட போதும் அது முடியவில்லை. வீட்டில் இருந்த அனைத் துப் பொருள்களும் எரிந்து நாசமாகின எனத் தெரிவிக் கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், படை யினர் மற்றும் கிராம மக்கள் அனைவரும் ஒன்றி ணைந்து மின்சாரத்தைத் துண்டித்துத் தீயைக் கட் டுப்படுத்தினர்.

வீட்டில் இருந்த குளிர்சாதனப் பெட்டி,தொலைக் காட்சி, நகைகள், உடுப்புகள் , உணவுப்பொருள்கள் என அனைத்துமே எரிந்து நாசமாகியுள்ளன.

இந்தக் குடும்பத்துக்கு உடனடியாக வீட்டு வசதியை ஏற்படுத்திக் கொடுக்கப் புதுக்குடியிருப்புப் பிரதேச செய லாளர் விரைந்து நடவடிக்கை எடுத்தார். இதன் பயனா கத் தற்காலிக வீடு கட்டுவதற்கான பொருள்களை நிறு வனம் ஒன்று நேற்று உடனடியாக வழங்கியதுடன் ஏழாயிரம் ரூபா பணமும் கொடுத்தது.

கைவேலிக் கிராம மக்களால் கிராம அபிவிருத்திச் சங்கம் ஊடாகப் பத்தாயிரம் ரூபா பணமும்,வன்னிக் குறோஸ் நிறுவனம் ஊடாக பத்தாயிரம் ரூபா பணமும், சில சமூக ஆர்வலர்கள் முன்வந்து பத்தாயிரம் ரூபா பணமும் வழங்கினர்.

இவற்றை வைத்து இந்தக் குடும்பத்துக்கான தற் காலிக வீட்டைக் கட்டிக்கொடுப்பதற்கான பொறுப்பைப் புதுக்குடியிருப்புப் பகுதியில் நிலைகொண்டுள்ள படை யினர் மேற்கொள்வதாக உறுதியளித்துள்ளனர் எனப் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலாளர் ம.பிரதீபன் தெரி வித்தார். (ஐ-81)



சீரடி சாயி பாபாவின் மகா சமாதி நூற்றாண்டை முன்னிட்டு வட இந்தியாவின் மகாராஷ்டிராவில் அமைந் துள்ள சீரடிபாபா ஆலயத்தின் ஆதரவில் பிரசுரிக்கப்பட்ட 'சாயி சரித்திர தரிசனம்' எனும் நூல் அண்மையில் கொழும்பு புதுச்செட்டித் தெருவில் அமைந்துள்ள சீரடிபாபா ஆலயத்தில் வைபவரீதியாக வெளியிடப்பட்டது. வட மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் நூலின் முதற்பிரதியை இலங்கை சீரடி சாயி பாபா மத் திய நிலையத்தின் தலைவர் எஸ். என். உதயநாயகனிடமிருந்து பெற்றுக்கொள்கின்றமையையும், சாயி மத்திய நிலைய உப தலைவர் சிவா இராஜஜோதி, பொதுச் செயலாளர் எஸ். தியாகராஜா ஆகியோர் அருகில் நிற்பதையும், கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

# நாவற்குழியில் வீடு புகுந்து கொள்ளையர்கள் தாக்குதல்

## தாயும் மகனும் படுகாயம்



யாழ்ப்பாணம், ஜன.05

நாவற்குழி மகா வித்தி யாலயம் அருகில் திருடர் களின் அட்டகாசம் அதிகரித் துள்ளதாக மக்கள் தெரி வித்துள்ளனர்.

அண்மைக்காலமாக யாழ்ப்பாணத்தில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள் ளன.

வீதிகளில் செல்லும் பெண்களின் நகைகள் அறுக்கப்படுவதும், வீடுகளுக்குள் சென்று கொள்ளை யிடுவதும், உத்தியோகத்தர்கள் போல பாசாங்கு செய்து நகை அறுப்பதும் அங்கு அதிகரித்துள்ளன.

நேற்று வியாழக்கிழமை அதிகாலை 1.30 மணியள வில் ஏ-32 வீதியில் நாவற்குழி மகா வித்தியாலயம் அருகில் அமைந்துள்ள வீடொன்றில் இரவு புகுந்த கொள் ளையர்கள் வீட்டில் இருந்த பொறியியலாளர் மற்றும் அவரது தாயார் மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் 42 வயதுடைய பொறியியலாளர் காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மூவர் அடங்கிய கொள்ளைக் குழுவினரே தாக்கு தலை நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது. சம்பவம் தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# ராணுவத்தின் ஏற்பாட்டில் மாணவர்களுக்குச் சீருடை





யாழ். மாவட்ட இரா ணுவத் தளபதி மேஜர் ஜெனரல்தர்ஷனஹெட் டியாராச்சியின் எண் ணக்கருவுக்கமைய திரு நெல்வேலி முத்துத் தம்பி மகா வித்தியாலய மாணவ, மாணவி களுக்குப் பாடசாலைச் சீருடை வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

51 ஆவது படைப்பிரிவின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் 511 ஆவது படைப் பிரிவின் ஏற்பாட்டில் நடந்த இந்த நிகழ்வில் 51 ஆவது படைப் பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் ரொஷான் செனவிரத்ன, 511 படைப் பிரிவுத் தள பதி கேணல் சந்தன விக்ரமசிங்க, நற்பண்பு முன்னேற்ற அமைப்பின் பணிப்பாளர் ஆனந்த ஜயவர்தன ஆகியோர் கலந்து கொண்டு பாடசாலையில் தரம் 1 தொடக்கம் உயர் தரம் வரை கல்வி கற்கும் சுமார் 350 மாணவ மாணவி களுக்கு பாடசாலைச் சீருடையை வழங்கினர்.

அத்துடன் றோமன் கத்தோலிக்க பாடசாலையின் 152 மாணவ மாணவிகளுக்கும், கோண்டாவில் பரம்சோதி வித்தியாலயத்தின் 81 மாணவ மாணவிகளுக்கும் பாடசாலைச் சீருடைகள் வழங்கப்பட்டன. (ஐ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.01.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.